வெப்பநிலை
32
ஈரப்பதம்: 52%
காற்றழுத்தம்: 1009 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# உதயன்

24 பக்கங்கள்
யாழ் - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 259 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 27, செவ்வாய் 12.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

12 AUG 2014

# இலங்கைக்குச் செல்லாமலேயே சிறப்பான முறையில் விசாரணை

## வெளியேதான் அனைத்தும் உள்ளன என்கின்றார் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை

கொழும்பு, ஓக. 12
"இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த ஏராளமான விடயங்கள், இலங்கைக்கு வெளியே உள்ளன. அதனால், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளாமலே ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவால் சிறப்பான முறையில் விசாரணைகளை மேற்கொள்ள முடியும் - என்று தெரிவித்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை ஊடகங்கள் விசாரணைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அவற்றில் உண்மையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்டப் போரில் இடம் பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணைகள் தொடர்பில், ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த ஏராளமான விடயங்கள் இலங்

22 ஆம் பக்கம் பார்க்க



## கசூரினா கடற்கரையில் ஒருவருக்கு கத்திக் குத்து

யாழ்ப்பாணம், ஓக. 12
காரைநகர் கசூரினா கடற்கரையில் ஒருவரைக் கத்தியால் வெட்டி விட்டு ஓட்டோவில்தப்பிச்சென்றவர்கள்பொலிஸாரால் துரத்திப் பிடிக்கப்பட்டனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் சில்லாலை, மாதகல் மற்றும் பண்டத்தரிப்பைச் சேர்ந்த 5 பேர் ஓட்டோவில் கசூரினா கடற்கரைக்குச் சென்றுள்ளனர். அவர்கள் அங்குள்ள கடையில் பந்து ஒன்றை வாங்க முற்பட்டுள்ளனர். கடைக்காரர் குறித்த பந்தை அதிக விலைக்கு விற்பனை செய்ய முற்பட்டார் என்று ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பாகியது. அப்போது குறித்த நபர்கள், தாம் வைத்திருந்த மேசைக்கத்தியால் குறித்த கடைக்காரரை வெட்டியுள்ளனர். பின்னர் அங்கிருந்து தாம் வந்த ஓட்டோவில் தப்பி ஓடிய போது அங்கிருந்த பொலிஸார் மற்றும் பொதுமக்கள் அவர்களைத் துரத்திப் பிடித்தனர். அவர்கள் பயணித்த ஓட்டோவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று அவர்கள் 5 பேரும் முற்படுத்தப்பட்டபோது அவர்களை அடையாளம் காட்ட முடியும் என்று பாதிக்கப்பட்டவர் கூறியதை அடுத்து அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ந-4)

## 10 லட்சம் அமெ. டொலர் போலித் தாள் யாழில் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 12
10 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான போலியான தாள் ஒன்றுடன் தென்பகுதியைச் சேர்ந்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். நகரில் வைத்து குறித்த பணத்தாளை மற்றொருவருக்கு கைமாற்றம் செய்யும் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதமும் இதே பாணியில் அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தாளுடன் ஒரு

22 ஆம் பக்கம் பார்க்க

## பிழையான தகவல்களை வழங்குகிறது அமெ.

### வெளிவிவகார அமைச்சு கடும் சீற்றம்

கொழும்பு, ஓக.12
இலங்கையில் காணப்படும் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக அமெரிக்கா பிழையான தகவல்களை வழங்கிவருகிறது என்று வெளிவிவகார அமைச்சு குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கையில் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து இங்குள்ள அமெரிக்க பிரஜைகளுக்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சு விடுத்திருந்த எச்சரிக்கை தொடர்பாகவே இந்தக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக நாடொன்றில் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஆர்ப்பாட்டம் செய்யும் சுதந்திரம் ஆகியன முக்கியமான விழுமியங்கள், இலங்கையின் அரசியல் அமைப்பினால் உத்தரவாதப் படுத்தப்பட்ட இந்த உரிமைகளை பயன்படுத்துவதற்கு இந்த நாட்டு மக்களுக்கு உரிமையுள்ளது என வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்க தூதரகத்தையோ, தூதுவரையோ அதிகாரிகளையோ மக்களையோ இலக்குவைத்து எந்த வித ஆர்ப்

22 ஆம் பக்கம் பார்க்க

## மோட்டார் குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக 12
புத்தூரில் முன்னர் இராணுவத்தினர் பயன்படுத்திய வீட்டு மலகூடக் குழியிலிருந்து 4 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் உள்ள குறித்த வீட்டு உரிமையாளர் வீட்டுக் கிணற்றை இறைத்தபோதே அதனுள் அவை இருந்தமை கண்டறியப்பட்டது. அது தொடர்பில் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அங்கு சென்ற குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் அவற்றை மீட்டு செயலிழக்க வைத்தனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-4)

## யாழ். மாவட்டத்திலுள்ள வீடுகள் தொடர்பில் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்.மாவட்டத்தில் வீடுகள் தொடர்பான விவரங்கள் மாவட்ட செயலகத்தால் பிரதேச செயலகங்கள் ஊடாக அவசர அவசரமாக கடந்த வார இறுதியில் திரட்டப்பட்டுள்ளன. எது வித காரணங்களும் தெரிவிக்கப்படாமல் மேற்படி விவரங்கள் மாவட்டச் செயலகத்தால் திரட்டப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் சொந்த வீடுகளில் வசிப்பவர்கள், உரிமையாளர்கள் இல்லாத வீடுகள், வாடகை வீடுகள், வீடில்லாதவர்கள் போன்ற விவரங்களே யாழ்.மாவட்ட செயலகத்தால் கடந்த வார இறுதியில் அவசர அவசரமாக திரட்டப்பட்டுள்ளது. குறித்த விவரங்களை உடனடியாக வழங்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் யாழ்.மாவட்டச் செயலகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டு அதற்கமைய விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. மேற்படி விவரங்கள் என்ன நோக்கத்துக்காக திரட்டப்பட்டுள்ளன என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை, ஆட்சியுரிமை சட்டத்தின் படி ஓர் இடத்தில் ஒருவர் 10 வருடங்களுக்கு மேலாக தங்கியிருக்கும் பட்சத்தில், அந்த இடத்தின் உரித்து உரிமையாளர்களிடமிருந்து பறிபோய்விடும் என்ற விடயத்தில் திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய காணிகளை - வீடுகளை இழந்தவர்கள் புதிய சட்டத்தின் மூலம் தமது வீடுகள் - காணிகளை வழக்குத் தாக்கல் செய்து பெற்றுக் கொள்ள முடியும். இந்தச் சட்டமூலம்கொண்டுவரப்படவுள்ள நிலையிலேயே, யாழ். மாவட்டச் செயலகத்தால் இங்கு ள்ள வீடுகள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. (ந-5)

## பங்குத்தந்தைக்கு முன்பாக சரணடைந்த மகன் எங்கே?

### ஆணைக்குழுவிடம் தாய் கேள்வி

யாழ்ப்பாணம், ஓக. 12
மடு தேவாலயத்தில் வைத்து பங்குதந்தை முன்பாக இராணுவத்தினரிடம் சரணடைந்த எனது மகன் எங்கே ? அவரைப் பொறுப்பேற்றுக் கொண்டதாக குறித்த இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கையெழுத்திட்ட கடிதம் என்னிடம் இன்னமும் இருக்கின்றது. இராணுவம் கொண்டு சென்ற எனது மகன் இப்போது எங்கே ? - இவ்வாறு ஆணைக்குழு முன்பாகக் கேள்வி எழுப்பினார் தயார் ஒருவர்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு மன்னார் மாவட்டத்தில் கடந்த நான்கு தினங்களாக இடம்பெற்று வந்தது. மடு பிரதேச செயலகத்தில் நேற்று இறுதி நாள் அமர்வு இடம்பெற்றது. இதில் பண்டிவிரிச்சான் பகுதியைச் சேர்ந்த தாயார் ஒருவர் சாட்சியமளிக்கையிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட

22 ஆம் பக்கம் பார்க்க


## வேறு எதுவும் வேண்டாம்; கணவனை மட்டும் தாருங்கள்

### மன்னார் சிறப்பு தளபதி ஜானின் மனைவி ஆணைக்குழு முன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 12
மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதியாக இருந்த எனது கணவரும் (ஜோன்) அவருடன் 40 புலி உறுப்பினர்களும், அருட்தந்தை பிரான்சிஸ் முன்னிலையில், இராணுவத்தினரிடம் முல்லைத்தீவில் சரணடைந்தனர். பொது மன்னிப்பு வழங்கப்படும் என்பதாலேயே அவர்கள் சரணடைந்தனர். இன்று வரையில் அவர்கள் தொடர்பில் எதுவும் தெரியவில்லை. எனக்கு அரிசி, பருப்பு, வீடு ஒன்றும் வேண்டாம். எனது கணவரை எப்படியாவது மீட்டுத் தாருங்கள் - இவ்வாறு காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழு முன்பாக இராயப்பு மிரேனியா என்ற மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதியின் மனைவி கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார்.

22 ஆம் பக்கம் பார்க்க





கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் இறுதி ரந்தோலி பெரஹரா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வை கண்டி ஜனாதிபதி மாளிகையில் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் இருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பார்வையிட்டார். (ற)

## ரூ. 1 லட்சம் மில்லியனில் அபிவிருத்தித் திட்டங்கள்

### கடந்த 5 ஆண்டுகளில் யாழ்.மாவட்டத்தில்

யாழ்ப்பாணம், ஒக.12

யாழ். மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டு காலப்பகுதிக்குள் ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 789 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை 2009 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஜூன் மாதம் வரையான காலப் பகுதிக்குள் நிறைவேற்றப்பட்டுள்ளன - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் கருத்தரங்கில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"விவசாயம், கைத்தொழில், மீள்குடியேற்றம், பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு என 2009 ஆம் ஆண்டிலிருந்து இந்த வருடம் - கடந்த ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்குள் அபிவிருத்தி திட்டப்பணிகளுக்காக இந்நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகள் கூடுதலாக கிராமிய மட்டங்களில் கிராமிய குழுக்கள் அமைத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் ஊடாக 5 கட்டங்களாக வேலைத் திட்டங்கள் நடைபெற்றுள்ளன. அடுத்த 6 ஆம் கட்ட வேலைத் திட்டங்களையும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்ப்பாசனம், வீட்டுத் திட்டம், மின்சாரம், வீதிப் புனரமைப்பு என பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் ஊடாகப் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற)

## 'எபோலா' வைரஸ் தாக்கம் கட்டுநாயக்காவில் சோதனை

கொழும்பு, ஓக.12

எபோலா வைரஸ் தாக்கம் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் அதிகரித்துள்ளதை அடுத்து லைபீரியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட உள்ள 200 இலங்கைத் தொழிலாளர்களை கட்டுநாயக்க விமானத்தில் மருத்துவ பரிசோதனை செய்வதற்காக விசேட வைத்தியர்கள் குழு விமான நிலையத்தில் தயார் நிலையில் வைக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

லைபீரியாவில் இருந்து வரும் இலங்கைத் தொழிலாளர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த மருத்துவர்கள், பொது சுகாதார அதிகாரிகள், தாதியர் ஆகியோர் அடங்கிய மருத்துவ குழு விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது என்றும் அமைச்சின் செயலாளர் சுதர்மா கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், இருமல், தடிமன் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அவர்கள் விசேடமாக தயார் செய்யப்பட்ட அம்புலன்ஸ் வண்டி மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

## உ.கிழங்கு, வெங்காயத்துக்கு இறக்குமதி தீர்வை அதிகரிப்பு

கொழும்பு, ஓக.12

உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி தீர்வையை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது.



அதனடிப்படையில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி தீர்வை 15 ரூபாவாலும், ஒரு கிலோகிராம் உருளை கிழங்கிற்கான இறக்குமதி தீர்வை 10 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

இன்று நள்ளிரவு முதல் இந்த உருளைக்கிழங்குக்கான இறக்குமதி தீர்வை அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 5 ரூபாவாக காணப்பட்ட உருளைக்கிழங்குக்கான இறக்குமதி தீர்வை 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் பெரிய வெங்காயத்திற்கு அறவிடப்பட்ட 10 ரூபா இறக்குமதி தீர்வை 25 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பெரிய வெங்காயத்துக்கான வரி அதிகரிப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

சிறு போகத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியன எதிர்வரும் வாரங்களில் சந்தைக்கு வரவுள்ள நிலையில், உள்நாட்டு விவசாயிகளுக்கு நியாயமான விலை வழங்குவதற்காகவே இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ற)

## கைவிடப்பட்ட சிசு மீட்பு

கொழும்பு, ஓக.12

களுத்துறை தொடம்கொட பகுதியிலுள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு அருகே கைவிடப்பட்டிருந்த சிசுவொன்றை பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட சிசு தற்போது களுத்துறை நாகொடை வைத்தியசாலையின் சிசுக்கள் பராமரிப்புப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த சிசு பிறந்து ஒருநாள் நிரம்பியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சிசுவின் தாயைக் கண்டு பிடிப்பதற்கான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ற)

# பாதுகாப்பு அமைச்சின் செயலால் நாட்டுக்கே பெருத்த அவமானம்

### ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாகச் சாடுகின்றது

கொழும்பு, ஓக.12

பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரை காரணமாக இந்தியப் பிரதமரிடம் வெட்கப்படும் அளவில் மன்னிப்பு கோரப்பட்டது. அதன் பிரதிபலனாக நாட்டுக்கு ஏற்பட்ட அவமானம் கவலைக்குரியது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் தன்னை நாட்டின் அன்புக்குரிய தந்தை என கூறிக்கொள்ள முடியாது - இவ்வாறு கடுமையாகச் சாடியுள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கையின் பெறுமதிகளை உறவினர்கள் குழுவொன்று அழித்துக் கொண்டிருக்கின்றது. பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் அண்மையில் வெளியிடப்பட்ட கட்டுரை காரணமாக இந்திய பிரதமரிடம் வெட்கப்படும் அளவில் மன்னிப்பு கோரப்பட்டது.





இந்த தவறானது இலங்கையின் வெளிநாட்டு கொள்கை முன்னெடுக்கப்பட்டு வரும் துன்பகரமான நிலைமையை எடுத்து காட்டியுள்ளது.

தமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படப் போகும் செய்தி ஒன்றை முன் கூட்டியே அறிந்துகொள்ளாதது பாதுகாப்பு அமைச்சு செய்த பெரும் தவறாகும். இது கவலை தரக் கூடியதோ ஆச்சரியப்படக் கூடிய காரணமோ அல்ல.

ஏனைய நிறுவனங்களைப் போல ராஜபக்ஷ அரசின் கீழ் பாதுகாப்பு அமைச்சும் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகள், ஐக்கிய நாடுகள் போன்றவற்றின் அதிகாரிகள், அரசியல் எதிரிகள் மற்றும் தமது நிலைப்பாடுகளுடன் ஒத்துபோகாதவர்களுக்கு எதிராக அவர்களை அவமதிப்புக்கு உள்ளாக்கும் அரசினதும் அதன் பேச்சாளர்களினதும் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. பாரதூரமான ராஜதந்திர பிரச்சினை வரை செல்லக் கூடிய இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

உண்மையில் இது பாராட்டுக்குரிய நடவடிக்கை அல்ல. நிர்வாக ரீதியாகவும் அதிகார ரீதியாகவும் பாதுகாப்பு அமைச்சுக்கு பொறுப்பானவர் அதன் அமைச்சராவார். பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் உள்ள அமைச்சாகும். இந்த நிலைமையில் ஜனாதிபதி தனக்குத் தானே விசாரணைகளை நடத்தி கொள்வாரா?. மறுபுறம் தனது சகோதரர் அதிகாரமிக்க அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷவின் நடத்தை தொடர்பில் நியாயமான விசாரணையை நடத்துவாரா?.

இந்த சர்ச்சைக்குரிய கட்டுரையை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்துக்கு தொடர்ந்தும் கட்டுரைகளை எழுதிவரும் பெண்ணொருவரே எழுதியுள்ளார்"- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## கைத்தொலைபேசி இலக்கங்களை பதிவு செய்வதற்கு கால அவகாசம்

### தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.11

கையடக்க தொலைபேசி இணைப்புக்களை பதிவு செய்வதற்காக தொலைபேசி நிறுவனங்களுக்கு இந்த வருட இறுதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



புதிதாக வழங்கப்படுகின்ற கையடக்க தொலைபேசி இணைப்புக்கள் அனைத்தையும் பதிவு செய்யுமாறு தொலைபேசி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல் பிட்ட குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை காலமும் பதிவு செய்யப்படாதுள்ள இணைப்புக்களையும் உடனடியாக பதிவு செய்யுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

கையடக்கத் தொலைபேசி இணைப்புக்களை பதிவு செய்யத் தவறும் நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழு வலியுறுத்தியுள்ளது.

நாட்டிலுள்ள கையடக்க தொலைபேசி இணைப்புக்களில் 70 தொடக்கம் 80 வீதமானவை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக் காட்டியுள்ளார். (ற)

## உபுலின் பாதுகாப்புக்கு இரண்டு பொலிஸார்

கொழும்பு, ஓக.12

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜெயசூரியவின் பாதுகாப்புக்காக, இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை தற்காலிகமாக பெற்றுக் கொடுப்பதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமது பாதுகாப்புத் தொடர்பில் உபுல் ஜெயசூரியவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் இவ்வாறு நீதிமன்றில் தெரிவித்துள்ளார். (ற)

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 27 செவ்வாய்க்கிழமை (12.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 259

# திருக்கேதீஸ்வரம் புதைகுழிக்குள் என் பிள்ளையும் இருப்பானோ ?

## அதனை நினைத்து மனநோயாளியாகிவிட்டார் மனைவி
## ஆணைக்குழுவின் முன் அச்சம் வெளியிட்டார் தந்தை

மன்னார், ஓகஸ்ட் 12


திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி தோண்டப்படும்போது, அதில் எங்கள் பிள்ளையும் இருப்பானோ என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகின்றது என்று ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த தந்தை ஒருவர் தெரிவித்தார்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் மன்னார் பிரதேச செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு எனது மகன் தள்ளாடிப்பகுதியில் வைத்து காணாமற் போயிருந்

(22ஆம் பக்கம் பார்க்க)



சாட்சியமளிக்கும் தாயொருவர்.

## சிவில் பாதுகாப்பு படைஉறுப்பினர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஓக. 12

சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் தலைக் கவசத்தினால் தாக்கப்பட்டுள்ளார் என்றும், பழைய பகை காரணமாகவே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் இராணுவத்தினர், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனப் பலர் குவிக்கப்பட்டதனால் அங்கு சிறிது நேரம் பதற்றநிலை காணப்பட்டதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்பது மாதக் குழந்தையை தாக்கிய தந்தைக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஓக. 12

9 மாதக் குழந்தையை அடித்துத் துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 25 வயதுடைய கணவரை விளக்கமறியலில் வைக்குமாறு சிறுவர் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கரவெட்டி இராஜகிராமம் பகுதியில் வசிக்கும் குறித்த குடும்பஸ்தருக்கு 9 மாதக் குழந்தை ஒன்று உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அந்தக் குழந்தை அழுதுள்ளது. தாயார் பாலூட்டினார். மீண்டும் அந்தக் குழந்தை அழுதது. அதனால் குழந்தையின் தந்தையார் குழந்தைக்கு முதுகில் அடித்துள்ளார். மறுநாள் காலையில் தந்தையார் வெளியே சென்று திரும்பியபோது அவரைக் கண்டவுடன் குழந்தை அழத்தொடங்கிவிட்டது. இதன் போது மீண்டும் குழந்தையைத் தந்தையார் தாக்கியதோடு தூக்கி நிலத்தில் வீசியதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தால் குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு நேற்று வீடு திரும்பியது.

இதனையடுத்துக் குறித்த குழந்தையின் தந்தையார் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டார். தான் குழந்தையைத் தாக்கவில்லை என்றும் தனது மனைவிக்கு அடிக்கும்போதே குழந்தைக்கு அடி

(22ஆம் பக்கம் பார்க்க)

## தகுதியற்ற பிரதேச சபைச் செயலர்களை மாற்றியமைக்கவேண்டும் முதலமைச்சர்
### மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 12

கிளிநொச்சி மாவட்டத்துக் குட்பட்ட உள்ளூராட்சி மன்றத்தில் தகுதியற்ற சபைச் செயலாளர் நியமிக்கப்பட்டதை முதலமைச்சர் மாற்றியமைத்ததைப் போல ஏனைய மாவட்டங்களிலும் தகுதியற்ற பிரதேச சபைச் செயலாளர்களை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண சபை ஆளுங் கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன் முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள தனது கடிதத்தில்,

வடக்கு மாகாணத்தில் பல்வேறு மாவட்டங்களில் தகுதியற்றவர்களைப் பிரதேச சபைச் செயலாளர்களாக நியமித்திருப்பது பெருமளவு நிர்வாகச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

தகுதியற்ற பலரும் தமது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அரசியல் ஆசீர்வாதங்களைத் தேடுவதுடன் அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் விசுவாசமாக நடந்து கொள்கின்றனர். இதனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையிலான நிர்வாகத்துக்கும் செயலாளர்களுக்கும் இடையில் மோதல் நிலைமை தோன்றி, உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தடைப்படுவதும், தடம்மாறுவதும் நடைபெற்று வருகின்றது.

தகுதியற்றவர்கள் உள்ளீர்க்கப்படுவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் போதியளவில் இல்லை என்ற குறை இருந்தாலும் பெருமளவுக்கு அரசியல் காரணங்களால் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டுத் தகுதியற்றவர்கள் உள்ளீர்க்கப்பட்டிருந்தார்கள். இந்நிலை மாகாண அரசு பொறுப்பேற்கப்பட்ட பின்னரும் ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோரின் அதிகாரத் துஷ்பிரயோகத்தின் ஊடாக தொடர்வது ஏற்றுக் கொள்ளமுடியாதது.

உள்ளூராட்சி விடயம் முழுமையாக மாகாணத்துக்கு பகிரப்பட்ட அதிகாரம் என்ற

(22ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளரை பார்க்க வருவோரின் நலன்களில் அக்கறை காட்டுங்கள்
### யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவிடம் கோரிக்கை

வலி.வடக்கு, ஓக. 12

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடச்செல்லும் உறவுகள் தினமும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருவதாகவும் அவர்களின் நலனில் யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழு கவனம் எடுக்க வேண்டும் எனக் கோரி ஸ்ரீ ரெலோ கட்சியினால் மனு ஒன்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு மீண்டும் பாஸ்நடைமுறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதால் தூர இடங்களிலிருந்து தமது உறவுகளை பார்வையிடவரும் மக்கள் அவர்களைப் பார்வையிட முடியாமல் திரும்பிச் செல்லும் அவல நிலைக்கு உள்ளாகி வருகின்றதோடு, மன அளவில் விரக்தியடைகின்றனர்.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு நண்பகல் மட்டும் பாஸ் நடைமுறையினைத் தளர்த்தி மக்களின் அபிலாசைகளை தாங்கள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## சகபாடிகளை விடுவிக்காவிடின் சாகும்வரை உண்ணாவிரதம்
### இராமேஸ்வரம் மீனவர் நாளை களத்தில்

இராமேஸ்வரம், ஓக. 12

இலங்கைக் கடற்படையால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுவிக் கப்பட வேண்டும். அவ்வாறு அவர்கள் விடுவிக்கப்படாதவிடத்து தாம் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டு அங்குள்ள சிறையில் வாடும் இராமேஸ்வரம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த 94 மீனவர்களையும், 64 விசைப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும், இதற்கு மத்திய - மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இராமேஸ் வரம் மீனவர்கள் கடந்த 24ஆம் திகதி முதல் வேலைநிறுத்தப் போராட்டம் தொடங்கினர்.

இதற்கு அடுத்தகட்டமாக இராமநாதபுரத்தில் ஆர்ப்பாட்டம், கடந்த 2ஆம் திகதி கச்சதீவில் தஞ்சம்புகும் போராட்டம் என பல போராட்டங்களை மீனவர்கள் நடத்தினர். கச்சதீவில் தஞ்சம் புகும் போராட்டத்திற்கு புறப்பட்ட அவர்களுடன் மத்திய அமைச்சர் பொன். ராதா கிருஷ்ணன் தொலைபேசியில் பேசி 10 நாள்களில் மீனவர்கள் மற்றும் படகுகளை

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவை சந்திப்பதற்கு விருப்பம்

சென்னை, ஓக. 12

இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் சுதர்சன் செனவிரத்ன தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்க ஆர்வமாகவுள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நாளிதழ் ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐ.நா தீர்மானத்தை இந்தியா புறக்கணித்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் கடலில் மூழ்கி முதியவர் நேற்றுச் சாவு
### மட்டக்களப்பில் இருந்து சுற்றுலா வந்த வேளை

வலி.வடக்கு, ஓக 12

மட்டக்களப்பில் இருந்து சுற்றுலா வந்த வயோதிபர் ஒருவர் காரைநகர்க் கடலில் குளிக்க முற்பட்டவேளை நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

காரைநகர் கசூரினா கடற்கரையில் இவர் நண்பர்களுடன் சென்று குளிக்க அனுமதிக்கப்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முதலமைச்சர் விருது; கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 12

வடக்கு மாகாண கௌரவ முதலமைச்சர் விருது வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கலாசாரத்துறைக்கு அரும்பணியாற்றிய கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாக மாகாண மட்டத்திலான உயர் விருதை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் இந்த ஆண்டு முதல் கௌரவ முதலமைச்சர் விருதை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் 60 வயதுக்கு மேற்பட்ட தலா இரண்டு கலைஞர்களின் விவரங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகங்களிடம் கோரப்பட்டுள்ளது.

(ஓ-421)



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 5 மாணவர்களுக்கு கனடா புலம்பெயர் மக்களின் உதவியுடன் உடுப்பிட்டி நலன்புரிச் சங்கம் சைக்கிள்களை வழங்கியுள்ளது. சைக்கிள்களைப் பெற்றுக்கொண்ட உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி, உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றின் அதிபர்கள், பெற்றோர்கள் சகிதம் மாணவர்கள் காணப்படுகின்றனர். (ஓ-173)

**வீடு வாடகைக்கு**

இல.6/1, பேக்கறி லேன், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: (50768) (12.3.6)

077 382 4588/072 417 0679

**தவறிவிட்டது**

54, நியூ அத்தியடி வீதியைச் சேர்ந்த பா.முகுந்தன் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் (WPWX2260)09.08.2014 சனிக்கிழமை அன்று ஆனைக்கோட்டைக்கும் வண்ணார்பண்ணைக்கும் இடையில் மானிப்பாய் வீதியில் அல்லதுK.K.S. வீதியில் தவறவிடப்பட்டுவிட்டன.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0777466014 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(50774) (12.3.6)

**கணக்குப் பதிவாளர் தேவை (பெண்)**

யாழ்.நகரிலுள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கணக்குப் பதிவாளர் தேவை.

A/L கணித Orவர்த்தக பிரிவுடன் கணினி, ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

யாழ்.நகரை அண்டிய பகுதியாக இருத்தல் நன்று.

விளம்பர இல-5007, மே.பா: உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(50772) (12.3.6)

# அகதி முகாமில் வாழ்ந்தாலும் சாதிப்பதை நிறுத்த வேண்டாம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.12

அன்றைய காலம் தொடக்கம் இன்றுவரை அடக்கப்பட்ட சமூகமாக, அகதி வாழ்க்கை வாழ்ந்து வரும் எமது குழந்தைகள் எங்கு வாழ்ந்தாலும் சாதிப்பதை நிறுத்திவிடக் கூடாது. எவ்வகையான துன்பம் வந்தாலும் அவற்றையெல்லாம் சவாலாக எடுத்துக் கொண்டு கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சாதனை படைக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன். திருகோணமலை கட்டைபறிச்சான் விபுலானந்தா வித்தியாலயத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் இலவசமாக ஒழுங்குபடுத்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான விசேட செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் திருகோணமலை மாவட்டத் தலைவர் பா.தேவராசா தலைமையில் நடைபெற்ற விசேட செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பொதுச் செயலாளர் மேலும் கூறுகையில்,

நீண்ட காலம் அகதி முகாம்களில் வாழுகின்ற மாணவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்த வண்ணமுள்ளனர். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் பலர் அவரவர் இடங்களில் மீளவும் குடியமர்த்தப்பட்டுவிட்டனர். ஆனால் மூதூர் கிழக்குப் பகுதி மக்கள் குடியமர்த்தப்படாமல் இருப்பது அனைவருக்கும் வேதனை தருகின்ற விடயமாகும். இந்த விடயத்தில் அந்தமக்களின் வாழ்வாதாரத்தையும், எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு அவர்களை மீளவும் குடியமர்த்த ஜனாதிபதி முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

500 மாணவர்கள் வரையில் கலந்து கொண்ட அந்த செயலமர்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட சட்டத்தரணி சி.புலேந்திரன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார். (வ)

### வட்டு. கண்ணகியின் கலை நிகழ்வுகள்

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (ஓ)

**வாகனம் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள ISUZU ELF350 Model WP xx-xxxx தொடரிலக்கம் உள்ள White அலுமினியம்(B) பொடி கன்ரர் வாகனம் விற்பனைக்குண்டு.

(சி16014) (12.3.6) தொடர்பு: 077 773 8715

**விற்பனையாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சார இலத்திரனியல் பொருள்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் தேவைப்படுகின்றார்கள். 15.08.2014இற்கு முன் நேரில் வரவும்.

JAFFNA ELECTRICALS,
No.94 (6) Stanley Rd, Jaffna.
021 222 2353 (சி16013) (12.3.6)

யாழில்

டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

**அருள் ஒளி தர்சன மாலையும் ஆவணிமாதத்திற்கான விசேட பூஜையும்**



பூத்தவளே, புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே மாத்தவளே உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே?

வரமருளிக் காத்தருள இராஜேஸ்வரி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் ஆவணி மாதத்திற்குரிய அருள்ஒளி தர்சன மாலை விசேட பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

நடமாடும் தெய்வமாகவும், அன்பான தாயாகவும், நல்வழிகாட்டும் குருவாகவும் விளங்கும் அபிராமி உபாசகித் தாயாரின் திருவடி பூஜையில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் நல்லவாழ்வும், உள்ளத்தில் சாந்தியும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நோய் நொடியற்ற சுபீட்சமான வாழ்வும், தெய்வத்தின் அருட்கடாட்சமும் நிறைவாக கிட்டும்.

அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க விரும்பும் பக்தர்கள், அன்றைய தினம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

இடம்
திவ்விய ஜீவன சங்க மண்டபம்
காலம் : 16.08.2014
சனிக்கிழமை
பகல் 11.00 மணி

திருவருள் நிகழ்வுகள்:

- மங்கள வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்.
- காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆசியுடன் வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திருப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலயத் தொடர்புக்கு:
Tel: 0045 97180192, 0045 40413431
Fax: 0045 97184192

யாழ் தொடர்புக்கு:
077 699 3861, 077 982 5004

www.abiramiamman.dk

www.nisaart.com

இடம் : திவ்விய ஜீவன சங்க மண்டபம் காலம் : 16.08.2014 சனிக்கிழமை பகல் 11.00

### பணம் அபகரிப்பு

பட்டப் பகலில் மில்லினுள் புகுந்த இருவர் அங்கு நின்றவரைத் தாக்கிவிட்டு மேசைலாச்சிக்குள் இருந்த பணத்தை அபகரித்துக் கொண்டு தப்பியோடினர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை சாவகச்சேரி நகரை அண்டிய அரிசி ஆலை ஒன்றில் இடம்பெற்றது. மாலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மில்லினுள் வந்து அரிசி விலை கேட்பது போல் ஒருவர் மில் உரிமையாளருடன் கதைக்க மற்றவர் மேசை லாச்சியை இழுத்து பணத்தை எடுத்துள்ளார். இதனைத் தடுக்க முற்பட்ட உரிமையாளரைத் தாக்கிவிட்டு பணத்துடன் அவர்கள் தப்பியோடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்**



அமரர் இலட்சுமணர் தேவராஜா

(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம் )

தோற்றம் 18*04*1956 மறைவு 13*07*2014

கடந்த 13.07.2014 சிவபதமெய்திய எமது குலவிளக்கு அமரர் இலட்சுமணர் தேவராஜா அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (12.08.2014) செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டு உதவிபுரிந்த அத்தனை உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

V.M.வீதி, பருத்தித்துறை.T.P :077 897 2956 குடும்பத்தினர். (50771)(3.6.4)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

**இளையவி சுப்பிரமணியம்**

(மரக்காலை உரிமையாளர்–மணியம்)



தோற்றம் 06 . 07 . 1946 மறைவு 13 . 07 . 2014

கடந்த (13.07.2014) இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் இளையவி சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.08.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


1211, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். [50770][4.3.6] குடும்பத்தினர்.



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி, தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் "தேவாரம்" தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனும் செல்வி க.சித்திராவும் திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவதைக் காணலாம். (ஒ)

# புதுப்பொலிவுடன் மருந்து கட்டும் பிரிவு

## சாவகச்சேரி மருத்துவமனையில்



தென்மராட்சி, ஒக.12

சாவகச்சேரி ஆதார மருத்துவ மனை மருந்து கட்டும் பிரிவு அங்கு சிகிச்சை பெற்றவர்களின் நிதிப் பங்களிப்புடன் புதுப் பொலிவுடன் காட்சி தருகிறது. குறித்த பிரிவில் சிகிச்சை பெற்றவர்களில் சிலர் அறையை புதிய வர்ணம் தீட்ட வழங்கியநிதி உதவியுடன்சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கட்டணம்வாங்காமல் வர்ணம் தீட்டிக் கொடுத்து உதவியுள்ளார்.

மருந்து கட்டும் பிரிவில் பணி புரிவோரின் அர்ப்பணிப்பான சேவையால் கவரப்பட்ட நோயாளர்கள் பலர் பல்வேறு பொருள்களை வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இந்தப் பிரிவில் சிகிச்சை பெற வருவோருக்கு குடிதண்ணீர் வழங்க என 3 பேர் குடிதண்ணீர் பில்டர்களையும், இருவர் சுவர்க் கடிகாரங்களையும்,மின் விசிறி, கழிவு போடும் பிளாஸ்ரிக் பெட்டி, பூவாஸ் ஆகியவற்றை ஒவ்வொரு வரும் வழங்கியுள்ளனர். நோயாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கிவரும் மருந்து கட்டும் பிரிவை மேலும் மேம்படுத்த வேறு பலர் நிதி உதவி வழங்கியதாகவும் தெரிவிக்கப் பட்டது. (வ-9)







## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு- 'நாலாயிரம் கண் படைத்திலனே' என்ற தலைப்பில் சைவப் புலவர் ஏ.அனுசாந்தனின் சிறப்புச் சொற்பொழிவும், இணுவில் இளந் தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை, வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, ஊர்காவற்றுறை தம்பாட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-7)

♦♦♦

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு-
கீதவாகினி இசைக்கல்லூரி மாணவிகளின் வாய்ப்பாட்டு இசை நிகழ்வில் திருமதி கிருஸ்ணாலினி அகிலன் -வயலின், செல்வன் க.இசை நிலவன் -மிருதங்கம்.
தொடர்ந்து திருமதி அம்பிகை பாலகுமார் -பாட்டு, எம்.பிரவீணா -வயலின், எம்.மாதவன் -மிருதங்கம், எஸ். செந்தூரன் - முகர்சிங் ஆகியோரின் இசையரங்கமும் இடம் பெறவுள்ளது. (ஒ-ரி)

♦♦♦

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு மதுரகானம் நிகழ்வு இடம்பெறும். சிவஸ்ரீ சோம உமா ரமணக்குருக்கள் நிகழ்வில் பங்குபற்றுகின்றார். (ஒ)

♦♦♦

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'கல் பெண்ணானது' இசைப் பேருரை இடம்பெறும். (ஒ)

♦♦♦

யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையுடன் இணைந்து நடத்தும் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை நல்லூர் பின் வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
இன்றைய அருளுரையின் தலைப்பு 'நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி'. (ஒ)

# தப்பிச் சென்ற டிராக்டரில் 'திருட்டு' மணல்

தென்மராட்சி, ஒக.12

வீதியில் வந்த டிராக்டரை பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியபோது நிறுத்தாமல் வேகமாகச் சென்றதால் டிராக்டரைத் துரத்திப் பிடித்து சோதனையிட்டபோது பெட்டியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியிருந்தமை தெரிய வந்தது. வாகனத்துக்குரிய காப்புறுதிப் பத்திரம், வாகன வரி ஆவணம் ஆகியவையும் டிராக்டரின் சாரதியிடம் இல்லை என்பதையும் பொலிஸார் கண்டுபிடித்தனர். பொலிஸார் அந்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியமை, காப்புறுதிப் பத்திரம், வாகனவரி ஆவணம் இன்மை, பொலிஸாரின் சமிக்ஞையைமீறி வாகனத்தை நிறுத்தாமல் சென்றமை ஆகிய குற்றச்சாட்டுக்களை எதிரி ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு 62 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-9)



பதினொராம் நாள் திருவிழா

## சேவல்கொடியாட நல்லூர் வேலவனே எல்லோரையும் காத்தருள்வாயே!

சேவல்கொடியாட சோலைமயிலாட
செவ்வேலவனார் நல்லூர் முருகாவா
சிவசக்திபாலனே இருசக்தியோடு
சரவணபவகுகா ஞான சக்தியாய் வா
காவல் தெய்வமே கலியுகவரதனே
கடம்பனே கந்தா காத்தருள்வாயே
கற்பனை கடந்த சோதீ ஆறுமுகா
காக்கும் கடவுளாய் எம் முன்னே வா
நாவல் பழத்தால் நல்லுபதேசம்
நாடறிந்த ஞானி ஔவைக்குத் தந்தவா
நாவிலே நின்றுன் அருணகிரியால்
நின்திருப்புகழ் பாடித் தந்தவா
காவல் வேலவனே சிவகந்த முருகா
கண்ணீரை மாற்றி வாழ்வுதருவாய்
கார்த்திகேயா எல்லோரையும்
கடைக்கண்ணால் பார்த்தருள்வாயே

*என்.தமிழ்மகன் குருக்கள், நல்லூர்.*

## எமக்கு அருளும் நல்லூர் ஐயனே!

நல்லை நகர் ஆளும் குருநாதா - எம்
தொல்லைகள் நீங்கிட வழி பிறவாதா?
எல்லை மீறி நாம் படுதுயர் போதாதா? இனி
இல்லை என அபயம் அளிக்க இயலாதா?
சூரனைச் சங்கரித்த சூரசங்காரா!
தேவர்கள் குறை தீர்த்த தேவாதி தேவா!
யாவரும் துதித்திடும் தமிழ் ஞானபண்டிதா!
பாவிகள் அழுகுரல் உன் காதில் விழாதா!
வேலதைக் கையிலேந்தி வீதியில் வருமுருகா - எம்
வேதனை தீர்ப்பதெப்போ விளங்கிடக் கூறுமையா
சாதனைகள் படைத்த சண்முக வேலவனே
ஆதரித்தே எமக்கருளும் நல்லூர் ஐயனே!

*நக்கீரன், பனிப்புலம்.*

## நல்லூர் எம் பெருமான்

நல்லூரின் நாதனே நாத வடிவானவனே
எல்லையில்லா துன்பத்தினின்று காத்திடுவாய்
கருணை மிகு கந்தா கடம்பா
ஓடி வந்தேன் உன்னடி பரவிடவே
நாடிவரும் அடியாரை உன் நல்லருளால்
காத்திடுவாய் நல்லூர் எம் பெருமானே

*வேலணை சி.ஜெயகௌரி*



# போருக்குப் பின் இலங்கை செய்த இரு பெரும் தவறுகள்

## இந்தியாவின் முன்னாள் புலனாய்வு அதிகாரி கேணல் ஹரிகரன்

கொழும்பு.ஓக.12
போருக்குப் பின்னர் இலங்கை அரசு இரண்டு தவறுகளை இழைத் துள்ளது என இந்திய இராணுவத்தின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்துள்ளார்.


ஆர்.ஹரிகரன்

போர் முடிவுக்கு வந்த பின்னர், தமிழர்களுடன் அர்த்தமுள்ள நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்காதது முதல் தவறு.

போர்க்குற்றங்கள் மற்றும், மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க வெளிப்படையான நடைமுறைகளை மேற்கொள்ளாதது இரண்டாவது தவறு.

இவையிரண்டும், ராஜபக்ஷ அரசின் நோக்கம் குறித்து மக்கள் சந்தேகம் கொள்வதற்கான சூழலை உருவாக்கிவிட்டுள்ளன. நீண்டகாலத்துக்கு இந்தச் சூழ்நிலை மாறப் போவதில்லை.

தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள். இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுடைய துயரங் களை தீர்க்கும் விடயத்தில் அரசு போதியளவுக்கு உணர்வு பூர்வமாக நடந்து கொள்ள வில்லை.

தன் மீது அந்த மக்களுக்கு நம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்த அரசு தவறிவிட்டது. ஐந்து வருடங்களுக்குப் பின்னரும் நல்லிணக்கம் உருவாவதற்கு இடமளிக்கப்படவில்லை.

ஆகவே மக்கள் மகிழ்ச்சியாக இல்லை. இதனைப் பயன்படுத்தி இலங்கையில் மறுபடி விடுதலைப்புலிகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கு எஞ்சியிருக்கின்ற உறுப்பினர்கள் முயலலாம் எனத் தெரிவித்துள்ளார். (ஒ)

# ஊவாவுக்கு அடித்தது அதிர்ஷ்டம் டிப்போக்களுக்கு 100 புதிய பஸ்கள்

கொழும்பு,ஓக.12
இலங்கை போக்குவரத்துச் சபை கொள்வனவு செய்யவுள்ள 2 ஆயிரத்து 200 புதிய பஸ்களில் இந்த மாதம் வரவுள்ள முதல் தொகுதியிலிருந்து நூறு பஸ்கள் ஊவா மாகாணத்திலுள்ள பத்து டிப்போக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுமென இ.போ.சவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.


கோப்புப்படம்

ஒவ்வொன்றும் 54 ஆசனங்களைக் கொண்ட இந்த பஸ்களில் ஏற்கனவே 45 பஸ்கள் கொண்டுவரப்பட்டுவிட்டதாகவும் மேலும் 55 பஸ்கள் விரைவில் வந்து சேருமெனவும் தெரிவித்தார்.

ஊவாவுக்குக் கொடுக்கப்படவுள்ள நூறு பஸ்களும் சம்பந்தப்பட்ட டிப்போக் களிலிருந்து தொலைதூர சேவைகளிலும் தற்சமயம் நல்ல வருமானத்தை ஈட்டும் வழித்தடங்களிலும் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் ஒவ்வொரு டிப்போவுக்கும் உச்சபட்சமாக பத்து பஸ்கள் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் கூறினார்.

மொத்தமாக வரவேண்டிய 2 ஆயிரத்து 200 பஸ்களில் எஞ்சியவை எதிர்வரும் செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரை பகுதி பகுதியாக வந்து சேருமெனவும் அவர் கூறினார். (ஒ)

# வர்த்தக நிலையத்தை எரிப்போம் முஸ்லிம் வர்த்தகருக்கு மிரட்டல்

## அதை அடுத்து அகற்றப்பட்டது காட்சியறை

கொழும்பு.ஓக.12
முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையத்தைத் தீ வைத்து எரிக்கப் போவதாக சிங்கள இனவாதிகள் அச்சுறுத்திய சம்பவம் கொழும்பை அண்மித்த பகுதியில் நடைபெற்றுள்ளது.

கொழும்பை அண்மித்த பொரலஸ்கமுவ பகுதியில் லாஸ்ட் சான்ஸ் என்ற அலங்கார மின்விளக்குக ளுக்கான காட்சியறை செயற்பட்டு வந்தது. பொரலஸ்கமுவ நகர சபைக்கு உரித்தான காணி ஒன்றில் வாடகை அடிப்படையிலேயே இந்தக் காட்சியறை இயங்கி வந்திருந்தது.

இதன் உரிமையாளர் முபாரக், களுத்துறை நகர சபையின் முன்னாள் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கடமையாற்றியிருந்தார்.

இந்த வர்த்தக நிலையத்தை அந்தப் பகுதியைவிட்டு அகற்றுமாறு பௌத்த பிக்கு ஒருவர் அடிக்கடி அச்சுறுத்தல் விடுத்து வந்திருந்தார். அத்துடன் அந்தப்பகுதி பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களையும் இந்த வர்த்தக நிலையத்துக்கு எதிராக அணி திரட்டியிருந்தார்.

இந்நிலையில் வர்த்தக நிலைய உரிமையாளரைத் தொடர்பு கொண்ட நகர சபையின் தலைவர், குறித்த வர்த்தக நிலையத்தை இழுத்து மூடி வேறு பகுதியில் காட்சியறையை அமைத்துக் கொள்ளுமாறு கண்டிப்பான தொனியில் அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கு சம்மதிக்காவிட்டால் பொரலஸ்கமுவை சிங்கள மக்களால் வர்த்தக நிலையம் தீக்கிரையாக்கப்படும் என்றும் அவர் தொடர்ந்தும் அச்சுறுத்தியுள்ளார். இதனையடுத்து லாஸ்ட் சான்ஸ் வர்த்தக நிலையம் தற்போது பொரலஸ்கமுவவில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. (ஒ)

# வெடிப்புச் சம்பவத்தில் பெண் காயம்

கொழும்பு. ஓக.12
பலாங்கொடையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வெடிச் சம்பவமொன்றில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வீட்டு முற்றத்தில் செலோ டேப்பினால் சுற்றப்பட்டிருந்த 2 போத்தல் மூடிகளை குறித்த பெண் காலால் உதைத்தபோது அது வெடித் துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போத்தல் மூடிகளுடன் வெடி பொருள்கள் கட்டப்பட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நேற்றுக்காலை 7.10 மணியளவில் இடம்பெற்ற இந்த வெடிப்புச்சம்பவத்தில் பலாங்கொடை அரலுவ பகுதியைச் சேர்ந்த 32 வயதான பெண் ஒருவரே காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பலாங் கொடை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (வ)


6 ஆம் ஆண்டு நினைவலைகள்

துரைசிங்கம் (கோபால்)
காண்டீபன்



மலர்வு
1979.07.31
உதிர்வு
2008.08.12

இதயத்தில் பங்கு தந்து
எளிமையில்
சிகரம் காட்டி
எம்மை நினைவு
நூலாய் பின்னி நிற்கும்
நேசமிகு தம்பியே...
நீ மறைந்து விட்டாலும்
உன் நினைவுகளோடு
வாழ்ந்து
கொண்டிருப்போம்.

குடும்பத்தினர்.
கைவேலி,
புதுக்குடியிருப்பு.
(50888)(3.6.4)


# வறண்டுள்ள 16 ஆயிரம் சிறிய குளங்களை சீர்படுத்துவதற்கு ரூ.360 கோடி ஒதுக்கீடு

கொழும்பு.ஓக.12
வறண்ட வலயத்தில் மற்றும் ஏனைய வலயங்களில் வறட்சியின் காரணமாக வற்றிப் போயுள்ள சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று விவசாய சேவைகள் திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளரான பிரபாத் விதாரண தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களின் தொகை 32,000 ஆகும்.

மேலும், வறண்ட வலயத்திலும் ஏனைய வலயங்களிலும் 16,000 சிறிய குளங்களும் அணைக் கட்டுக்களும் இருக்கின்றன என்று தெரிவிக்கும் பிரபாத் விதாரண, முற்றாகவே வற்றி வறண்டு காணப்படும் சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களில் நிறைந்திருந்த சேற்றை அகற்றுவது, பாதுகாப்பு அணைகளை அபிவிருத்தி செய்தல், ஓடைகள் கால்வாய்களை அபிவிருத்தி செய்தல் போன்ற கருமங்கள் விவசாய அமைப்புக்கள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார். சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்காக பொருளாதார அபிவி ருத்தி அமைச்சினால் 360 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் பொறியியலாளர் விதாரண தெரிவித்தார்.


கோப்புப்படம்

சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களின் கீழ் 7 லட்சம் ஏக்கர்கள் வரை விவசாயத்துக்காக நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. 2014 சிறு போகத்தின் போது முழுமையான செய்கை நிலங்களுள் இருபது வீதம் வரையில் செய்கை பண்ணப்பட்டதாகவும், ஈர வலயத்திலேயே அவ்விதம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

2013/14 சிறுபோகத்தின் போது எதிர்பார்க்கப்பட்டவாறு உரிய காலத்தில் மழை கிட்டாது போனமை மற்றும் 2014 இல் சிறுபோகத்துக்கு போதியளவிலான மழை வீழ்ச்சி கிடைக்காமற் போனமை காரணமாக வறண்ட வலயத்தில் மற்றும் இடையிலுள்ள ஈர வலயத்திலுள்ள சிறிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் வற்றிப் போனதாகவும் பிரபாத் விதாரண கூறியுள்ளார். (ஒ-22)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 01.01.1935
இறப்பு 13.07.2014



எமது குடும்பத்தலைவர்
அமரர் செல்லையா அமிர்தலிங்கம்

கடந்த 13.07.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (12.08.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. குடும்பத்தினர்.
(50749)(7.6.3)

ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அருந்தவஈஸ்வரி இரகுநாதன்



திதி: ஆடிமாத அபரபக்க துதியை
12.08.2014

என் அன்புத் தெய்வமே!
நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து
ஒன்பது ஆண்டுகளானாலும்
ஆறவில்லை என் மனம்
என்றும் தாழா வேதனையுடன்
உங்களை நினைவு கூரும்

அன்பு மகள்
செல்வி செந்திற் செல்வம் இரகுநாதன்
(இளைப்பாறிய அதிபர்)
உற்றார், உறவினர், நண்பர்கள்.

அன்னை மடியில் 07.04.1919
அரன் அடியில் 22.07.2005

'உடையார் வீடு', சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
(50690)(12.3.6)

மரண அறிவித்தல்

வைரமுத்து அப்புத்துரை
(முன்னாள் கிளை மேற்பார்வையாளர், களஞ்சியக் காப்பாளர் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து அப்புத்துரை 08.08.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் வல்வை ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
நெடுங்கண்ணி, வல்வெட்டி. 021 226 3981
(சி/16008)(7.6.3)

# ஒபாமாவின் கொள்கை தவறு

## ஹிலாரி கிளின்டன் கடும் விமர்சனம்

வொஷிங்டன், ஓக.12
ஒபாமாவின் தவறான வெளியுறவுக் கொள்கையால்தான், சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர் என்று அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வொஷிங்டனிலிருந்து வெளியாகும் 'அட்லான்டிக் மன்த்லி' என்ற பத்திரிகைக்கு ஹிலாரி கிளின்டன் அளித்த பேட்டியில், சிரியாவின் பூர்வீக மக்கள் தங்களது உரிமைகளுக்காக அந்நாட்டின் அதிபர் ஆசாத்தை எதிர்க்கத் துணிந்தபோது, அங்கு கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதில் அமெரிக்கா தனது கடமையிலிருந்து தவறிவிட்டது. அந்தச் சமயத்தில் அங்கு இஸ்லாமியர்களுக்கும் மதசார்பற்றவர்களுக்கு இருந்த வெற்றிடத்தை ஜிகாத்திகள் நிரப்பிவிட்டனர் என்றார்.

மேலும், சிரியாவின் முதற்கட்ட போரின்போது, ஒதுங்கி நிற்கக்கூடிய நிலையில் ஒபாமா முடிவெடுத்தார். அதன் விளைவாகவே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பாக ஜிகாத்திகள் உருவெடுத்தனர். இவர்களே தற்போது ஈராக்கிலும் ஆதிக்கம் செலுத்த நினைக்கின்றனர் என்று அமெரிக்க அதிபர் ஒபாமாவின் வெளியுறவு கொள்கைகளை ஹிலாரி கடுமையாக விமர்சித்துள்ளார்.

அத்துடன், உலகின் பெரிய நாடுகள் முக்கியக் கொள்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பில் உள்ளது. அந்த சமயங்களில் முட்டாள்தனமாக செயற்படக் கூடாது என்றார் ஹிலாரி.

ஈராக்கில் ஷியா தலைமையிலான அரசுக்கு எதிராக சன்னி முஸ்லிம் பிரிவி அமைப்பான ஜிகாத்திகளின் குழுக்கள் இணைந்து ஐ.எஸ். ஐ.எஸ். கிளர்ச்சி அமைப்பை ஏற்படுத்தி, அங்கு அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

சிரியாவின் சில பகுதிகளையும் ஈராக்கின் பகுதிகளையும் ஒருங்கிணைத்து சன்னி முஸ்லிம்களின் தனி நாடான 'இஸ்லாமி ஸ்டேட்' அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு தாக்குதல் நடத்தி, வளம் மிக்க நகரங்களை கைப்பற்றி வருகின்றன.

முக்கிய நகரங்களை ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பிடம் இழந்த ஈராக் அரசு, அமெரிக்க அரசின் உதவியை நாடியதை அடுத்து, அங்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் உத்தரவின்படி அமெரிக்க இராணுவம் வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது.



ஹிலாரி கிளின்டன்


ஒபாமாவின் முந்தைய அதிபர் ஆட்சி காலத்தில், அவரது அமைச்சரவையில் வெளியுறவு துறை அமைச்சராகவும் முக்கிய பங்கு வகித்தவருமான ஹிலாரி கிளின்டன், சமீப காலமாக தற்போதைய ஒபாமாவின் அமைச்சரவை சார்ந்த நடவடிக்கைகளிலிருந்து சற்று விலகியும் அவருக்கு எதிரான கருத்துக்களையும் வெளியிட்டு வருவது கவனிக்கத்தக்கது. (த)

## தற்கொலைத் தாக்குதலில் 10 குர்தீஷ் இராணுவம் சாவு

மொசூல், ஓக.12
குர்திஷ் படை சிப்பாய்களோடு சிப்பாயாகப் புகுந்த ஐ. எஸ். ஐ. எஸ். போராளி தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்ததில் குர்தீஷ் படையினரில் 10 பேர் உடல் சிதறி அதே இடத்தில் சாவடைந்தனர். மேலும், பொது மக்கள் உட்பட 80 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

ஈராக்கின் வடக்கு மேற்குப் பகுதிகளில் பல நகரங்களை கைப்பற்றியுள்ள 'ஐ.எஸ். ஐ.எஸ்' போராளிகள் தற்போது குர்திஷ்தானிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டியுள்ளனர். அங்கும் சில நகரங்கள் அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளன.

எனவே, அவற்றை மீட்டு அவர்களை அங்கிருந்து விரட்ட குர்திஷ் படையினர் தீவிரமாக போரிட்டு வருகின்றனர். (த)



பூமியை சுற்றிவரும் துணைக்கோளான நிலவு. பூமியைச் சுற்றும் நீள்வட்டப்பாதையில், சில காலங்களில் பூமிக்கு மிக அருகில் வரும் சந்தர்ப்பத்தில் அது வழக்கத்தை விட பெரிதாகத் தென்படும். இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தபோது, போலந்தின் வார்சோ பலஸ் அருகே எடுக்கப்பட்ட படம் இது. (த)

## 72 மணி நேரப் போர் நிறுத்தத்துக்கு பலஸ்தீன தலைவர்கள் மீளஒப்புதல்

காஸா சிற்றி, ஓக.12
இஸ்ரேலுடன் 72 மணி நேர போர் நிறுத்தத்துக்கு பலஸ்தீன தலைவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இஸ்ரேல் இராணுவத்துக்கும் பலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்தினருக்கும் இடையே கடும் போர் நடைபெற்று வருகிறது. ஐ.நா. உட்பட சர்வதேச சமூகத்தின் முயற்சியால் அவ்வப்போது போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டபோதும் அவை தோல்வியில் முடிந்து வருகின்றன.



போர் நிறுத்தத்தை அடுத்து கடலில் மீன்பிடிக்கச் செல்லும் பலஸ்தீனர்கள்

இந்நிலையில் இஸ்ரேலுடன்72 மணி நேர போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு பலஸ்தீன தலைவர்களுக்கு எகிப்து ஆலோசனை கூறியது. இதனை பலஸ்தீன தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதுகுறித்து பலஸ்தீன மூத்த தலைவர் ஒருவர் கூறும்போது, இப்போதைய நிலையில் எகிப்து அரசின் போர் நிறுத்த பரிந்துரையை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதமாக நீடிக்கும் போரில் இதுவரை 1900 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் தரப்பில் 67 பேர் உயிரிழந்துள்ளனர். (த)

## ஐ.எஸ் ஐ.எஸ்ஸில் அல்கெய்தா

வொஷிங்டன், ஓக.12
ஒரு காலத்தில் உலக நாடுகளுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த அல்-குவைதா இயக்கத்திலிருந்து விலகி, ஈராக், சிரியாவில் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியுள்ள ஐ.எஸ். அமைப்பில் தீவிரவாதக் குழுக்கள் இணைந்து வருகின்றன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி அந்நாட்டிலிருந்து வெளியாகும் வொஷிங்டன் போஸ்ட் இதழில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"அல்-குவைதாவுடன் இணைந்து செயற்பட்டு வந்த சிறு குழுக்கள், அந்த இயக்கத்திலிருந்து பிரிந்து சென்று ஐ.எஸ். அமைப்பில் இணைந்து வருகின்றன.

"ஐ.எஸ்.ஐ.எஸ்-ஸின் அண்மைக் கால வெற்றிகளால், இந்தப் போக்கு தீவிரமடைந்துள்ளது. லிபியாவில் செயற்பட்டு வரும், அல்-குவைதாவோடு தொடர்பில்லாத தீவிரவாதக் குழுக்களும் ஐ.எஸ். அமைப்பில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளன.

"இந்தப் போக்கினால், அண்மையில் தன்னை இஸ்லாமிய தேச கலிஃபாவாக அறிவித்துக் கொண்டுள்ள அபு பக்கர் அல்-பாக்தாதின் கரம் வலுவடைந்து வருவதாக பாதுகாப்புத்துறை நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்" இவ்வாறு 'வொஷிங்டன் போஸ்ட்' இதழில் செய்தி வெளியாகியுள்ளது. (த)

## ஈராக் மலைப் பகுதியில் சிக்கித் தவித்த 20,000 யாஸிதி சமூகத்தினர் தப்பினர்

எர்பில், ஓக.12
ஈராக்கின் சிஞ்ஜார் மலைப் பகுதியில் போராளிகளால் முற்றுகையிடப்பட்டிருந்த யாஸிதி சமூகத்தினர் 20,000 இற்கும் மேலானோர், ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து தப்பினர்.

ஈராக்கின் சிறுபான்மைப் பிரிவினரான யாஸிதி சமூகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள், ஐ.எஸ். போராகளின் தாக்குதலுக்கு அஞ்சி, அங்குள்ள சிஞ்ஜார் மலைப்பகுதியில் பதுங்கியுள்ளன.

அங்கு உணவு, தண்ணீர் இல்லாமல் தவித்து வந்த அவர்களுக்கு விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்களும், தண்ணீரும் வழங்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், அவர்களில் 20,000இற்கும் மேலானோர் அங்கிருந்து சிரியா வழியாக தப்பி, ஈராக்கில் குர்திஷ் இனத்தவரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை வந்தடைந்துள்ளனர் என குர்திஷ் தன்னாட்சிப் பிரதேச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் உதவி:
முன்னதாக, சிஞ்ஜார் மலைப் பகுதியில் சிக்கிய மக்களுக்கு உதவும் வகையில், பிரிட்டிஷ் விமானங்கள் உணவுகளையும் அத்தியாவசியப் பொருள்களையும் சனிக்கிழமை வீசின. அவர்களுக்கு உணவுப் பொட்டலங்களுடன் குடிதண்ணீர் சுத்திகரிப்பான்கள், சூரிய மின் விளக்குகள், மொபைல் போன் சார்ஜர்கள், கூடாரங்கள் ஆகிய அத்தியாவசியப் பொருள்களும் பிரிட்டிஷ் விமானங்கள் மூலம் வீசப்பட்டுள்ளன என பாதுகாப்புத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை செயலர் பிலிப் ஹாம்மண்ட் கூறுகையில்; "ஈராக்கின் சிஞ்ஜார் மலைப்பகுதியில் சிக்கியுள்ளவர்களுக்கு விமானங்கள் மூலம் உதவிப் பொருள்கள் வழங்கிவரும் மற்ற நாடுகளுடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயற்படுவோம்" என்று தெரிவித்துள்ளார். (த)

# வரலாறே காணாத வெள்ளம் ஒரிஸாவில்

## 33 லட்சம் பேர் பாதிப்பு; 45 பேர் சாவு!



வெள்ளத்தின் மத்தியில் இடம்பெயரும் குடும்பம்.

ஒரிஸாவில் வரலாறு காணாத மழை மற்றும் வெள்ளத்தால் இது வரை 33 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 45 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் பெய்த கனமழையால் ஒரிஸாவின் வடக்கு மாவட்டங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. மகாநதி உள்ளிட்ட முக்கிய ஆறுகளில் அபாயக் கட்டத்தை தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

இதில் கட்டாக், புவனேஸ்வர் ஆகிய மாவட்டங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதோடு அங்குள்ள 460 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த நிலையில் அங்குள்ள கிராமங்களில் வசிக்கும் 4 இலட்சத்து 80 ஆயிரம் பேர் வீடுகள் மற்றும் உடமைகளை இழந்து முகாம்களில் தவித்து வருகின்றனர். அவர்களுக்கு படகுகள் மூலம் உணவு, உடை உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

மூன்று தினங்களாகியும் வீடுகளுக்கு திரும்பமுடியாத மக்கள், வெள்ள நிவாரணப் பணிகள் மந்தகதியிலே இடம்பெற்றுவருவதாகவும், இதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் சுமார் 80 லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# ஈரான் இயக்குநருடன் இணைந்த இசைப்புயல்



ஈரான் சென்று படத்துக்கு இசை அமைத்துள்ளார் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான்.

தமிழ், ஹிந்தி, ஹொலிவுட் என கலக்கிவரும் ஏ.ஆர்.ரஹ்மான் தற்போது ஈரானிய படத்துக்கு இசை அமைக்கிறார். திரையுலகினரின் பாராட்டுப் பெற்ற 'சில்ரன் ஆப் ஹவன்' படத்தை இயக்கியவர் மஜித் மஜிதி. புகழ்பெற்ற ஈரான் பட இயக்குநர்.

'த கலர் ஆப் பாரடைஸ்', 'த சாங் ஆப் ஸ்பாரோ' போன்ற படங்களுக்கு பல்வேறு விருதுகளையும் அள்ளி இருக்கிறார். கடந்த ஆண்டு மஜிதி ரஹ்மானை சந்தித்துள்ளார். இப்போது தனது புதிய படத்துக்கு இசை அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். அதை உடனே ஏற்றுக்கொண்டார் ரஹ்மான்.

இதையடுத்து இப்பணியில் ரஹ்மான் தீவிரம் காட்டினார். இதற்காக ஈரான் சென்று இசை அமைப்பு பணியில் ஈடுபட்டுள்ளார். இது பற்றி ரஹ்மான் கூறும்போது, எனக்கு மனதிருப்தி தந்த படங்களுள் இப்படமும் ஒன்று எனத் தெரிவித்துள்ளார்.

# எபோலாவின் தாக்கம் தமிழகத்தில் இல்லை

சென்னை, ஓக. 12

தமிழகத்தில் எபோலா வைரஸ் தாக்கம் இல்லை என சட்ட சபையில் சுகாதார அமைச்சர் விஜய பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்ட சபையில் சுகாதாரத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பதிலளித்துப் பேசிய அமைச்சர் விஜய பாஸ்கர் இதனை தெரிவித்தார்.

மேலும், எபோலா வைரஸ் குறித்து பொதுமக்கள் பீதி அடைய வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

எபோலா நோய் குறித்து தமிழக அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் கூறினார். தமிழகம் முழுவதும் 2000 சிறப்புத் தொற்றுநோய் தடுப்பு முகாம்கள் அமைக்கப்படும் என்றார்.

சென்னை, மதுரை, திருச்சி, நெல்லை, தஞ்சை என 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் குழந்தைகள் தீவிர சிகிச்சை மையம் அமைக்கப்படும் என அறிவித்தார்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை விரிவு செய்ய மண்டல உறுப்பு மாற்று சிகிச்சை மையம் அமைக்கப்படும். சென்னை, ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.1 கோடி செலவில் டிஜிற்றல் எக்ஸ்றே கருவி பொருத்தப்படும் போன்ற அறிவிப்புகளை அவர் வெளியிட்டார். (த)

## விஜய் வீட்டுக்கு பொலிஸ் காவல்

சென்னை, ஓக. 12

நடிகர் விஜய், தற்போது இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் கத்தி என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தை இலங்கையைச் சேர்ந்த தொழில் அதிபர் ஒருவர் தயாரிப்பதாக கூறப்படுகிறது.

இதைக் கண்டித்து சில தமிழ் அமைப்புகள் நீலாங்கரையில் உள்ள விஜய் வீட்டை முற்றுகையிடப் போவதாக தகவல்கள் பரவின. இதையடுத்து நீலாங்கரையில் உள்ள நடிகர் விஜய் வீட்டுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. (த)

# சைபர் கிரைம், பாலியல் குற்றங்கள் புரிவோருக்கு இனி அதிக தண்டனை

## சட்டத்தில் மாற்றம் கொண்டுவருகிறது தமிழக அரசு

சென்னை, ஓக. 12

தடுப்புக் காவல் சட்டம் அல்லது குண்டர் சட்டத்தில் பல அதிரடி திருத்தங்களைச் செய்து தமிழக அரசு நேற்று சட்டசபையில் சட்டப் பிரேரணை தாக்கல் செய்துள்ளது.

குறிப்பாக, சைபர் குற்றங்கள் மற்றும் பாலியல் பலாத்கார குற்றங்களை குண்டர் சட்டத்தின்கீழ் கொண்டுவர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒரேயொரு குற்றம் செய்தாலும் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படுவோர்களை ஓராண்டு வரை சிறையில் தள்ளலாம் என்பதும் இந்த பிரேரணையின் கூடுதல் அம்சமாகும்

தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் இதுவரை பலமுறை குற்றம் செய்து சிறைத் தண்டனை பெற்றவர்களைக் கைது செய்து வந்தனர். ஆனால் இப்போது சட்டம் ஒழுங்கை குலைக்கும், பொதுமக்கள் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் ஒரேயொரு குற்றச்செயலில் ஈடுபட்டால் கூட அவரை சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ந்து தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யலாம்.

பொது அமைதியைச் சீர்குலைக்கும் குற்றங்கள் அதிகரித்து வருகிறது. ஆகவே தொடர்ந்து குற்றங்கள் புரியும்வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு குற்றம் செய்தாலே அந்த நபர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கு உரியவராகிறார் என்று அந்த பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் போதை மருந்துக் குற்றவாளிகள், வனவிதிமுறைகளை மீறி குற்றம் புரிபவர்கள், ரவுடிகள், போக்குவரத்து விதிகளை ஒழுக்க மற்று மீறுபவர்கள், மணல் கடத்தல் மாபியாக்கள், குடிசைப்பகுதிகளை ஆக்கிரமிப்பவர்கள் மற்றும் 1982ஆம் ஆண்டு திருட்டு வீடியோச் சட்டம் ஆகியவையும் அடங்கும் என்று தெரிகிறது.

குறித்த பிரேரணையை சட்ட சபையில் அறிமுகம் செய்து பேசிய அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் கூறும்போது, உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிப்பது சைபர் கிரைம். இணையத்தளத்தை முடக்கும் ஹேக்கர்களால் வர்த்தகம், அரசு செயல்பாடுகள் பாதிக்கப்படுகிறது, சில சமயங்களில் முடக்கப்படுகிறது.

மேலும், பொது அமைதியைப் பேணிக் காக்கப் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுப்பதும் முக்கியமானதாகும். இது பற்றி மாநில அரசு 13 செயல் திட்டங்களை அறிவித்துள்ளது. இதில் பாலியல் குற்றங்கள் புரிவோர்களையும் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கொண்டுவர வழி வகுக்கப்படும் என்றார். (த)

## 'அஞ்சானால்' கதிகலங்கும் திரையரங்குகள்!

இன்னும் சில நாட்களில் சூர்யா ரசிகர்களுக்கு விருந்து வரவிருக்கிறது. உலகம் முழுவதும் அஞ்சான் திரைப்படம் 1500 திரையரங்குகளில் மிக பிரம்மாண்டமாக வெளியிடப்படவிருக்கின்றது.

இப்படத்திற்கு ஸ்பெஷலாக ஒரு கோடு செய்யப்பட்டுள்ளது. இதை பயன்படுத்தி எந்த தியேட்டரில் திருட்டு விசிடி எடுக்கிறார்களே, அவர்களை எளிதில் கண்டுபிடிக்கலாம் என படக் குழு தெரிவித்துள்ளது. இப்படத்திற்கு மட்டுமில்லாமல் இனிவரும் காலங்களில் அனைத்து படத்திற்கும் இந்த முறையை கையாண்டால் தமிழ் சினிமாவிற்கு நல்லது.

# ஈ.வி.கே.எஸ்க்கு நெடுமாறன் கண்டனம்



மறைந்த முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்று கூறிய முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு, உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கூறுகையில்,

சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை, உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்துவிட்ட நிலையில், அவர்களுக்கான தூக்குத் தண்டனையை நிறைவேற்றச் சொல்வது, நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



சகோதர பாசத்தை வெளிப்படுத்தும் 'ரக்ஷா பந்தன்' விழா நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. டில்லியில் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதமர் மோடிக்கு ராக்கி எனப்படும் புனித கயிற்றை மத்திய அமைச்சர் நஜ்மா கட்டியபோது...

# ஓய்வூதிய நிலுவையான 2 கோடி ரூபாவை அதிகாரிகள் சிலர் திட்டமிட்டு மோசடி

## இதுவரை 8 பேர் பொலிஸ் வலையில்

கொழும்பு, ஓக.12

ஓய்வூதியம் பெறுவோரின் சுமார் இரண்டு கோடி ரூபா நிலுவைப் பணத்தை மோசடி செய்த எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.




ஓய்வூதியம் பெறுவோரின் நிலுவைப் பணத்தைச் சில அதிகாரிகள் திட்டமிட்டு மோசடி செய்து வருகின்றனர். இது குறித்து மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் இவ்வாறான மோசடிகள் நடைபெறுவதாக அறிய வந்தால் உடனடியாக தமக்குத் தெரியப்படுத்துமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

2009 முதல் 2013ஆம் ஆண்டுக் காலம் வரை காலமும் கேகாலை, வரக்காபொலை பிரதேச செய லகத்தில் பணியாற்றும் பெண் இலிகிதர் ஒருவரும் அவரது கணவருமாக இணைந்து சுமார் ஒரு கோடியே 67 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளனர்.

இது தொடர்பாக ஓய்வூதியம் பெறும் ஒருவர் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்த மோசடி அம்பலமாகியுள்ளது. இதனையடுத்து பொலிஸ் திணைக்களத்தின் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட குழுவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தொடர்ந்தும் இது தொடர்பாக நடைபெறும் மோசடிகளைக் கண்டறிய மேற்படி குழு துரித விசாரணைகளை நடத்தி வருகிறது. ஓய்வூதியக்காரருக்கு உரிய பணத்தை இவ்வாறு மோசடி செய்யும் நபர்கள் கைது செய்யப்படுவதுடன் இது தொடர்பான வழக்கு நடை பெறும் காலம் முதல் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடலாம்.

சில வேளைகளில் இது தொடர்பானவழக்கு20வருடங்களுக்கு நடைபெற்றாலும் சந் தேக நபர் 20 வருடங்களும் தடுத்து வைக்கப்படுவார் என் றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

நாச்சியாதீவு பிரதேச செயலகத்துக்குரிய நிறுவனப்பணம் 11 லட்சத்து 48 ஆயிரத்து 838 ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. கம்பளை பிரதேச செயலக கணக்காய்வாளர் 5 லட்சத்து 15,653 ரூபாவை மோசடி செய்துள்ளார்.

இதேவேளை, தென் மாகாண முன்னாள் செயலாளர் ஒருவர் இரண்டு ஓய்வூதியத்தைப் பெற்று சுமார் 50 லட்சத்து 49,661 ரூபாவை மோசடி செய்துள்ளார்.

மேலும் கல்நேவ பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோரின் நிலுவைப் பணமான 14 லட்சத்து 15,653 ரூபா மோசடி செய்யப் பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். (ஓ)

## 'சார்க்' செயலாளர் நாயகம் ஜனாதிபதியுடன் சந்திப்பு



தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பின் (சார்க்) செயலாளர் நாயகம் அர்ஜுன் பகதூர் தாபா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று காலையில் சந்தித்து பேச்சு நடத்தினார். கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.


'சார்க்' அமைப்பின் செயலாளர் நாயகமாக பதவியேற்ற பின்னர் அர்ஜுன் பகதூர் தாபா இலங்கைக்கான தமது முதலாவது பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

சார்க் நாடுகளில் உள்ள இளைஞர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக இளைஞர் மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டிய அவசியம் பற்றி ஜனாதிபதி இந்தச் சந்திப்பின் போது வலியுறுத்தினார். (ஓ)

## 91 ஹஜ் பயண முகவர்களுக்கு மத விவகார அமைச்சு அனுமதி

கொழும்பு,ஓக.12

இந்தமுறை ஹஜ் யாத்திரைக்காக ஹஜ் யாத்திரிகர்களை அழைத்துச் செல்வதற்காக 91 ஹஜ் முகவர்களுக்கு புத்தசாசன, மதவிவகார அமைச்சு அங்கீகாரமளித் துள்ளது.



ஒவ்வொரு முகவர்களுக்கும் நேர்முகப் பரீட்சையில் வழங்கப்பட்ட புள்ளிகளின் எண்ணிக்கையையும், அவர்களுக்கான இட ஒதுக்கீடுகளையும் புத்தசாசன மதவிவகார அமைச்சு விவரங்களுடன் தற்போது அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலின் பிரகாரம் 2,240 இட ஒதுக்கீடுகள் ஹஜ் முகவர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆகக் கூடிய ஒதுக்கீடு 51 ஆகும். ஆகக் குறைந்த ஒதுக்கீடு 10 ஆகும். (ஓ)

## அரச ஊழியருக்கு இம்முறை பட்ஜெட்டில் சம்பள உயர்வு

கொழும்பு,ஓக.12

அடுத்த வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு இடம்பெறக் கூடும் என்று அரச ஊடகப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.




அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து இந்த முறை வரவு- செலவுத் திட்டத்திலாவது அரச ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படுமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பியிருந்த கேள் விக்குப் பதிலளித்திருந்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அரசு 2015- 2017 மத்தியகால வரவு- செலவுத் திட்ட வட்டத்துள் இருந்தவாறே 2015க்கான வரவு- செலவுத் திட்டத்தை தயாரித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சமூக அபிவிருத்தி, முக்கியமான அடிப்படை வசதிகள் மற்றும் பொருளாதார அட்டவணைகளில் சாதாரணமான தேசியப் பெறுமதியை விட கீழ் மட்டத்திலுள்ள மாவட்டங்களின் சுகாதாரக் கல்வி மார்க்கங்கள், பாதுகாப்பு மிக்க குடிதண்ணீர் போன்ற வசதிகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கப்படுவதாகவும் கெஹலிய தெரிவித்துள்ளார். (ஓ-22)

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தகவல் நிலையம் ஆரம்பம்

### 150 வருட நிறைவை அடுத்து

கொழும்பு, ஓக. 12

கொழும்பு தேசிய வைத்தியசாலை 150 ஆண்டுகளை நிறைவு செய்யும் கொண்டாட்டத்தை முன்னிட்டு நோயாளர் பராமரிப்புச் சேவைகள் சம்பந்தமாக பொதுமக்களுக்கு விரைவாக மிகச் சரியான தகவல்களை வழங்கும் நோக்கில் தகவல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படுகிறது.

இதன்போது 1959 என்ற குறுகிய தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நோயாளர் பராமரிப்புச் சேவைகள் அது சம்பந்தமான விவரங்கள், கிளினிக்குகள் சம்பந்தமான விவரங்கள், மருத்துவ விஞ்ஞானப் பரிசோதனைகள், சத்திரசிகிச்சைகள் தொடர்பாக முன்னதாகவே ஆயத்தமாகுதல் சம்பந்தமான விவரங்கள், மருத்துவக் கல்வி சார்ந்த அறிவுரைகள், விஷவகைகள் உடலில் சேர்தல் சம்பந்தமான விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கிழமை நாள்களில் காலை 8 மணியில் இருந்து மாலை 4 மணி வரையில் மற்றும் சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணி வரையிலும் இந்தச் சேவை வழங்கப்படும்.

இவற்றுக்கு மேலதிகமாக 1959 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தினமும் 24 மணி நேரத்திலும் விடுதிகள் மற்றும் ஏனைய தொடர் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளத்தக்க விதமாக தொலை பேசிகள் இயக்கு நருடன் தொடர்பு கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் திடீர் விபத்துக்கள் பிரிவுகளில் இருக்கும் நோயாளர்களின் விவரங்களை அறிந்து கொள்வதற்கும் சுகாதார சேவைகள் அலுவலக உத்தியோகத்தர்கள் குழுமத்துக்கு, கடுமையான நோயாளிகளை தேசிய வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட திடீர் விபத்துக்கள் பிரிவுகளுடனே தொடர்பு கொள் வதற்கும் 24 மணி நேரமும் 1959 என்ற குறுகிய தொலைபேசி இலக்கத்தினூடாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (ஓ-22)

## லசந்த கொலையுடன் தொடர்புடைய முக்கிய நபர் இதுவரை சிக்கவில்லை

### 5 ஆண்டுகள் பூர்த்தியான நிலையிலும்

கொழும்பு,ஓக.12

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலையுடன் தொடர்புடைய உண்மையான சந்தேக நபரை இன்னமும் கைது செய்யவில்லை என பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு நீதிமன்றில் அறிவித்துள்ளது.

சந்தேக நபரைக் கைது செய்யும் நோக்கில் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக கல்கிஸ்ஸை நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அத்திடிய என்னும் இடத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய நபர்கள் லசந்தவைப் படுகொலை செய்திருந்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த நுவரெலியா பிரதேசத்தின் கராஜ் ஒன்றின் உரிமையாளரான பிச்சை ஜேசுதாஸ் என்பவர் தடுப்புக் காவலில் வைத்தே உயிரிழந்துள்ளார். மற்றுமொரு சந்தேக நபரான இரா ணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தி யோகத்தர் கந்தேகெதர பியவன்ச என்பவரை சட்ட மா அதிபர் விடுதலை செய்துள்ளார்.





இதேவேளை, சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் பட்டப்பகலில் சுட்டுக்கொலை செய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகியும் இதுவரையில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வில்லை என லசந்தவின் குடும்பத்தார் சார்பில் நீதிமன்றின் முன்னிலையான சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அண்மையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிவான், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டிருந்தார். (ஓ)

# தாடிபோல் வளர்ந்த கொழுப்பு

ஸ்லோவாக்கியா நாட்டைச் சேர்ந்தவர் ஸ்டீவன். அவர் கடந்த பத்து ஆண்டுகளாக வினோத நோய்ப் பாதிப்பொன்றுக்கு ஆளாகி இருந்தார். அவருடைய முகத்தில் தாடிபோல் கொழுப்பு தேங்கிவிட்டது. அதன் தாக்கமாக கன்னமும், தாடையும் வீங்கிப்போய்க் காணப்பட்டன.



அதனால் கழுத்தைக்கூடத் திருப்ப முடியாமல் அவதிப்பட்டார். மாட்லங் என்ற இந்தநோய்ப் பாதிப்புக்கு பல்வேறு கட்ட சிகிச்சை மேற்கொண்டும் பலன் கிட்டவில்லை. இந்த நோய்க்குச் சிகிச்சை அளிப்பது மருத்துவ ரீதியாகவும் பிரச்சினையாக இருந்தது.

தற்போது பத்து ஆண்டுக்குப் பின்னர் நவீன முறைச் சிகிச்சையொன்றின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருக்கிறது.

5 மணி நேரச் சிகிச்சைக்குப் பின்னர் ஸ்டீவன் முகத்தில் தங்கிய கொழுப்பு முற்றிலும் நீக்கப்பட்டது. அந்தக் கொழுப்பு சுமார் 6 கிலோ எடை இருந்தது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து ஸ்டீவன் கூறுகையில், இந்த நோய்ப் பாதிப்பால் தலையைக் கூட அசைக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். எல்லோரும் எனது முகத்தைப் பார்ப்பது எனக்குச் சங்கடமாக இருந்தது. இப்போது சந்தோஷமாக இருக்கிறேன்-என்றார்.

# காதில் மிகப்பெரிய துளையிட்டு சாதனை படைத்த நபர்




அமெரிக்காவில் நபர் ஒருவர் காதில் மிகப்பெரிய துளையிட்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளார். அமெரிக்காவில் அவாய் மாநிலத்தைச் சேர்ந்த கலா கவி என்ற நபர் காதில் மிகப்பெரிய துளை ஒன்றைப் போட்டுள்ளார்.


அவரது காதுத் துளை சுமார் 4.3 அங்குல அளவுக்கு நீண்டுள்ளது. மேலும் இவர் முகம் மற்றும் உடம்பில் 100ற்கும் மேற்பட்ட துளைகளையிட்டு சிறு சிறு இரும்புத் துண்டுகளை அணிந்துள்ளார். அவரது உடம்பில் முக்கிய அம்சம் என்னவென்றால், மண்டையில் துளையிட்டு இரும்பு முட்களைப் பதித்துள்ளமைதான். உலகிலேயே காதில் மிகப்பெரிய துளையிட்டு கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளார்.

# அறுவைச் சிகிச்சை செய்யாமல் கட்டி அகற்றம்

## கனடிய மருத்துவர்கள் சாதனை

அமெரிக்காவைச் சேர்ந்த 16 வயது வாலிபன் ஒருவனின் காலில் இருந்த கட்டியை அறுவைச் சிகிச்சை செய்யாமல் அகற்றி கனேடிய மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

வட அமெரிக்காவைச் சேர்ந்த ஜாக் (வயது 16) என்ற வாலிபன் தனது



காலின் மேற்பகுதியில் கடுமையான வலியால் கடந்த ஓராண்டு காலமாக அவதிக்குள்ளாகியுள்ளான்.

இதனால் அவனது பிரியமான விளையாட்டுகளாகிய ஹொக்கி, பனிச்சறுக்கு மற்றும் வேக்போடிங் போன்றவற்றை மேற்கொள்வதில் சிரமப்பட்டதால் மருத்துவர்களை நாடியுள்ளான்.

இந்த நிலையில் அவனைப் பரிசோதித்த மருத்துவர்கள், அறுவைச் சிகிச்சை செய்யாமல், அவனது காலில் இருந்த கட்டியைத் துல்லியமாக அதிதீவிர அல்ட்ராசவுண்ட் ஒளிவீச்சுகள் மூலம் அழித்துள்ளனர்.

இந்தச் செயல்முறையை இன்ரவென்ஷனல் ரேடியோலொஜிஸ்ட், மைகெல் டெம்பர் என்ற கனேடிய மருத்துவரின் தலைமையிலான குழுவினர் செய்துள்ளனர்.

இதுகுறித்து ஜாக் கூறுகையில், கடுமையான வலி காரணமாக நான் வலிநிவாரணிகளை இத்தனை நாள்களும் எடுத்து வந்தேன். சிகிச்சை முடிந்த மறுநாளே வலி இல்லாமல் போய்விட்டது என்று தெரிவித்துள்ளான்.



# பெரிய சக்தி சேமிப்பகமாக மாறும் சிகரெட் துண்டுகள்

உலகெங்கிலும் ஆண்டுதோறும் பில்லியன் கணக்கான சிகரெட் துண்டுகள் அகற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறு அகற்றப்படும் சிகரெட் துண்டுகளை பெரிய சக்தி சேமிப்பகமாக மாற்ற முடியும் எனக் கொரியாவின் சோல் தேசிய பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.


அகற்றப்படும் சிகரெட் பில்டர்களில் இருந்து வெளியேற்றப்படும் ஆர்சனிக், ஈயம் ஆகிய மூலகங்கள் உட்பட தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் நிலத்தையும், நீர் வழிகளையும் மாசுபடுத்துகின்றன.

எனவே இவற்றைச் சேகரித்து மின்கலங்களைப் போன்று அதியுயர் சக்தி சேமிப்பகமாக பயன்படுத்த முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர்.

# நீரிழிவு நோய்க்கான பக்கவிளைவுகள் அற்ற புதிய மருந்து

மனிதரில் ஏற்படக்கூடிய இரு வகையான நீரிழிவு நோய்களுக்கும் பக்கவிளைவுகள் அற்ற முறையில் நிவாரணம் வழங்கக்கூடிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதாவது FGF1 வகை புரோட்டீனில் இருந்து உருவாக்கப்பட்ட மருந்தை ஊசி மூலம் ஏற்றுவதனால் பக்கவிளைவுகள் அற்ற நிவாரணத்தை



வழங்க முடியும் என்று கண்டறியப் பட்டுள்ளது.

இதனை ஸால்க் நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த மருந்து குருதியிலுள்ள குளுக்கோஸ் மட்டத்தைச் சீராகப் பேணுவதன் மூலம் நீரிழிவு நோய்க்கான நிவாரணம் வழங்கப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# குழந்தைகளின் வாசிப்பு மற்றும் மொழி ஆற்றலை வளர்க்கும் இசை

தொடர்ச்சியான முறையில் இசையைக் கற்று வருவதன் மூலம் வாசிப்பு ஆற்றல் உட்பட மொழி விருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையில் மூளையில் மாற்றம் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள மனோதத்துவ சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலமே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. இதில் ஒரு வருடம் வரை இசைப் பயிற்சி எடுத்த பின்னர் 9 மற்றும் 10 வயதினர் வாசிப்பில் அதிக வினைத்திறனுடன் செயற்படக்கூடியதாக இருப்பதுடன், மொழி விருத்தி, ஞாபக சக்தி என்பனவற்றை அதிகரித்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக சிக்காக்கோ மற்றும் லொஸ்ஏன்ஜல்ஸில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.



# நிதிக் குத்தகையுடன் வட்டிக்கு மிகுதியான பணம் வழங்குகிறது அலையன்ஸ் பினான்ஸ் நிறுவனம்




இலங்கையில் முதன்மையான நிதிக் கம்பனியாக விளங்கும் அலையன்ஸ் பினான்ஸ் கம்பனி, முதல் முறையாக தொழில் துறையில் ஒரு வகையான நிதித் தள்ளுபடியாக நிதிக் குத்தகையுடன் வட்டிக்கு மிகுதியான காசு வழங்குகின்றது என்பதைத் தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றது. நம்பிக்கையைக் கட்டியமைத்தல் மற்றும் புதியதோர் மாற்றம் செய்தல் மூலம் அலையன்ஸ் பினான்ஸ் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக போலியற்ற உற்பத்தியை உருவாக்குகின்றது. இதன் மூலம் அலையன்ஸ் பினான்ஸ் நற்பெயரையும் வாடிக்கையாளரின் பற்றுநிதி என்பனவற்றையும் பெறுகின்றது. நிதிக் குத்தகையுடன் வட்டிக்கு மிகுதியான காசு என்ற நோக்கின் மூலம் இந்த புதிய உற்பத்திகளுக்கு ஒரு தள்ளுபடி வழங்கப்படுகின்றது.

அதாவது வாடிக்கையாளர்கள் தமது நிதிக் குத்தகையின் மாதாந்த நிலுவையை சரியான தவணையில் கட்டினால் அல்லது ஆகக் குறைந்தது 80 வீத தவணைகள் கட்டுப் பணத்தைச் சரியான தவணை திகதியில் செலுத்தினால் வாடிக்கையாளரின நீண்ட கால வட்டியை வட்டிக்கு மிகுதியான காசுத் தள்ளுபடி மூலம் கம்பனி நிதிக்குத்தகை பூர்த்தி செய்யப்படும் தவணையில் வாடிக்கையாளரின நீண்ட கால வட்டியையும் பதிவுப் புத்தகத்தையும் திரும்ப வழங்குகின்றது. 80 வீத தவணையின் நிதிக்குத்தகை கட்டுப்பணத்தை வாடிக்கையாளர்கள் சரியான தவணைத் திகதியில் கட்டினால் இறுதியில் நிதிக் குத்தகைத் தொகையில் 10 வீத வட்டிக்கு மிகுதியாகக் காசாக பதிவுப் புத்தகத்துடன் வாடிக்கையாளருக்கு திரும்ப வழங்கப்படுகின்றது. மற்றும் தற்போது சந்தையில் உள்ள வட்டி வீதத்தை விட குறைந்த வட்டிவீதத்தை தொடர்ச்சியாக மீளச் செலுத்தும் வாய்ப்பையும் ஏற்படுத்துகின்றது.

இந்தத் திட்டத்தை வரைவு செய்யும்போது வாடிக்கையாளர்களின் சேமிப்புப் பழக்கத்தை கருத்தில் கொண்டுள்ளது அலையன்ஸ் பினான்ஸ் நிறுவனம். எமது நிறுவனத்தின் 78 தொடர்பு மையங்களினூடாகவும் வாடிக்கையாளர்கள் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கான குத்தகை ஒப்பந்தங்களினூடாக இந்த நிதிக்குத்தகையுடன் வட்டிக்கு மிகுதியான பணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அலையன்ஸ் பினான்ஸ் நிறுவனத்தின் விற்பனை அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் குழுமத்தின் தலைவர் அலி அஹ்லம் நவாஸ் தெரிவிக்கையில், நிதிக்குத்தகை மற்றும் வட்டிக்கு மிகுதியான பணத்தின் முக்கியத்துவத்தையும் அதன் அதிசிறந்த ஒப்பந்த முடிவின்போதான சேமிப்பையும் ஏனைய குறைந்த வட்டிக்கு கிடைக்கும் ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும்போது அதன் சிறப்புத் தன்மை குறித்து வாடிக் கையாளர்களிடம் சிறந்த புரிந்துணர்வு காணப்படுகின்றது. எமது நிறுவனம் ஏனைய நிறுவனங்கள் மற்றும் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் எப்போதும் வாடிக்கையாளர்களிடையே வித்தியாசமான முறையில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கின்றது. ஒரு பொறுப்புள்ள நிறுவனம்சார் சமூக உறுப்பினர் என்ற ரீதியில் எமது நிறுவனம் தனது தேசியம்சார் கடமையான நீண்ட கால குத்தகைத் திட்டங்களின் போதான வாடிக்கையாளர்களின் ஒழுங்கான மீள் செலுத்தும் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக பல உதவிகள் செய்து வருகின்றது.

அலையன்ஸ் பினான்ஸ் நிறுவனம் மீண்டும் ஒரு முறை தனது தனித்தன்மை வாய்ந்த ஒளிவு மறைவில்லாத திட்டமொன்றை தமது வாழ்க்கையின் அடுத்த கட்டத்தின் புத்திசாலித்தனமாக மேம்படுத்த நினைக்கும் வாடிக்கையாளர்களை ஈர்க்கும் விதமாக அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் மத்தியில் தவறாத ஒழுங்காக மீள் செலுத்தும் வழக்கத்தை அதிகரிப்பதனூடாக அவர்களது கடன் பெறுமதியை சந்தையில் அதிகரிப்பதுடன் தம் சார்ந்தவர்களையும் மேம்படுத்துவதே அலையன்ஸ் பினான்ஸ் நிறுவனத்தின் குறிக்கோளாகும். (த)

# கம்பீரமான வணிகங்களுக்காக அடுத்த தலைமுறை பனசொனிக்




சொப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் முதன்மையான துணை நிறுவனமாகத் திகழும் சொப்ட்லொஜிக் ரீடைல் (பிரைவேட்) லிமிட்டெட். இலங்கையின் மிக வேகமாக வளர்ச்சியடைந்து செல்லும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சி மற்றும் சிறிய, நடுத்தர வணிகங்களில் பிரத்தியேகமான கவனத்தைச் செலுத்தி, ஐ.பி ஆற்றலுள்ள கே. எக்ஸ்-என்.எஸ்300 என்ற புத்தம்புதிய பி.பி.எக்ஸ் உபகரணத் தொகுதி மாதிரியை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் புத்தாக்கமான தொழில்நுட்பத் தீர்வுகளை உருவாக்குவதுடன் இணைந்ததாக, உற்பத்திகளை வகைப்படுத்துவதையும் மையமாகக் கொண்டு பனசொனிக் மற்றும் சொப்ட்லொஜிக் ஆகிய இரு நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்ற கூட்டிணைந்த மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின் தொடர் விளைவாக இந்த அறிமுகம் அமைகின்றது.

கே.எக்ஸ்-என்.எஸ்300 என்பது செயற்றிறன் கொண்ட ஒரு ஐ.பி பி.பி.எக்ஸ் உபகரணத் தொகுதியாக காணப்படுவதுடன். தொலைத்தொடர்பாடல் விடயத்தில் ஈடிணையற்ற சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. உதவிச் சேவையை வழங்குவதற்காக உள்ளகமாக அமைக்கப்பட்ட ஒரு ஏ.சி.டி (அடிப்படை அழைப்பு நிலைய செயற்பாடு). ஒரு indskin Voicc மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட தொடர்பாடல் போன்ற சிறப்பம்சங்களை கொண்டுள்ளது. கே.எக்ஸ்-என்.எஸ்300 உபகரணத்தில் மேலும் பல முன்னேற்றகரமான வசதிகள் காணப்படுகின்றன. 6 அனலொக் ட்ரங்க் தொடர்பிணைப்புகள் மற்றும் 18 வெளியிணைப்புக்கள் தொடக்கம், விரிவாக்க அலகு ஒன்றின் துணையுடன் 192 வரைக்குமான வெளியிணைப்புக்களை மேற்கொள்ளும் வசதியும் இதில் உள்ளது. மொபைல் தொடர்பு படுத்தல், ஒருங்கிணைக்கப்பட்ட வொயிஸ் மெயில் மற்றும் மின்னஞ்சல், உடனடி தகவல் அனுப்புதல் , தகவலை முன் னிலைப்படுத்தல் போன்ற பல்வேறு மேம்பட்ட ஐ.பி சிறப்பம்சங்களை இவ்வுற்பத்தி கொண்டிருக்கின்றது.

இலங்கையில் இதனை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது. பனசொனிக் இந்தியா நிறுவனத்தின் பொது முகாமையாளர் டக்கியோ மொரிசிடா, பனசொனிக் சிஸ்டம் நெற்வேர்க்ஸ் (ஜப்பான்) நிறுவன முகாமையாளர் சுஹிச்சி டக்கெனோச்சி மற்றும் சொப்ட்லொஜிக் ஒபிஸ் ஒட்டோமேஷன் நிறுவனத்தின் பணிப்பாளர் சமிந்த டி சில்வா ஆகியோரின் ஆதரவின் கீழ் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்காக வருகை தந்திருந்த பனசொனிக் நிறுவன உயரதிகாரிகளுள் பனசொனிக் சிஸ்டம்ஸ் ஆசியா நிறுவன பொது முகாமையாளர் செல்வி நஓகோ புகுய், உதவி முகாமையாளர் கிவெக் சின் டெங், பனசொனிக் இந்தியா நிறுவன முகாமையாளர் பிரியே சௌத்திரி மற்றும் பனசொனிக் இந்தியா நிறுவனத்தின் விற்பனைப் பொறியியலாளர் கணேஸ் பவிகட்டி போன்றோரும் உள்ளடங்குகின்றனர்.

சொப்ட்லொஜிக் ஒபிஸ் ஒட்டோமேஷன் நிறுவனத்தின் முக்கியமான 50 இற்கும் அதிகமான கூட்டாண்மை நிறுவன வாடிக்கையாளர்களும் 50 விற்பனை பிரதிநிதிகளும் இவ்வுற்பத்தியை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டனர். பனசொனிக் நிறுவனத்தில் இருந்து வருகை தந்திருந்த ஜப்பானிய பிரதிநிதிகளால் செய்து காண்பிக்கப்பட்ட இந்த உற்பத்தியின் சிறப்புக்கள் பற்றிய தொழில்நுட்பம் சார் நேரடி செயன்முறை வெளிப்படுத்தலை அனுபவிக்கும் சந்தர்ப்பத்தை இவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அதுமட்டுமன்றி, இலங்கையில் தற்போது கிடைக்கக் கூடியதாகவுள்ள இத் தீர்வுடன் மேலும் இணைந்து தொழிற்படுவதற்கான வாய்ப்பும் இவர்களுக்கு கிடைத்தது.

சொப்ட்லொஜிக் ஒபிஸ் ஒட்டோமேஷன் நிறுவனத்தின் பணிப்பாளர் சமிந்த டி சில்வா இப் புதிய உற்பத்தி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், "நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக நாம் முழுமையான அலுவலக தன்னியக்கமாக்கல் தீர்வுகளை வழங்கி வருவதுடன், அதன்மூலம் இலங்கையிலுள்ள நூற்றுக் கணக்கான வணிகங்களுக்கு வலுவூட்டியுள்ளோம். பனசொனிக் நிறுவனத்துடனான எமது பங்காளித்துவமும் நான்கு தசாப்தங்களுக்கும் அதிக காலம் பழைமை வாய்ந்ததாகும். இலங்கையிலுள்ள கூட்டாண்மை நிறுவனங்களுக்கு பிரத்தியேகமாக்கப்பட்ட தீர்வுகளை வழங்குவதில் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு மற்றும் செயல் வல்லமையை மேலும் எடுத்துக் காட்டுவதாக இது அமைகின்றது" என்றார். (த)



# விற்பனையாளர்களை கௌரவித்த அட்லஸ்

இலங்கையின் மிகப்பெரிய காகிதாதிகள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் நிறுவனமான சிலோன் பென்சில் கம்பனி (பிரைவேற்) லிமிடெட் (அட்லஸ்), சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த விற்பனையாளர்களை கௌரவிக்கும் வகையில் பாங்கொக் சென்றுவருவதற்கான சுற்றுலாப் பயணங்களை வழங்கியிருந்தது. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.ஹம்சாவின் பங்குபற்றலுடன் கிரிபத்கொட, க்ளாரியன் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வின் போது இந்த விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. நாடு முழு வதையும் சேர்ந்த சுமார் 35க்கும் அதிகமான விற்பனை யாளர்கள் இந்த நிகழ்வின் போது கௌரவிக்கப்பட் டிருந்தனர். 2013 டிசெம்பர் மாதம் அற்லஸ் முன்னெடுத்திருந்த 'பக் ரூ ஸ்கூல்யி' ஊக்குவிப்புப் பிரசாரத் திட்டத்தின் மூலம் சிறப்பான முறையில் விற்பனையை மேற்கொண்டிருந்த விற்பனையாளர் களை கௌரவிக்கும் வகையில் இந்த சுற்றுலாப் பயணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் சிலோன் பென்சில் கம்பனி லிமிடெட் (அட்லஸ்) நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம். ஹம்சா கருத்து தெரிவிக்கையில், "எமது விற்பனையாளர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டை நாம் கௌரவப்படுத்துவதோடு, அவர்களின் வியாபாரத்தின் விருத்தியைப் பற்றி சிந்தித்து செயற்படுகின்ற கம்பனியாக இந்த நாட்டின் கம்பனிகளிடையே நாம் தனித்துவமாகத் திகழ்கிறோம். எப்போதுமே எங்களுடைய விற்பனையாளர்களின் மீதான உயரிய உறவினை கடந்த வருடத்தில் நடைபெற்ற சிறப்பான திறமைகளை வெளிக்காட்டிய விற்பனையாளர்களின் தெரிவின் மூலம் வெளிக்காட்டியிருந்தோம்" எனத் தெரிவித்தார்.

இலங்கையின் காகிதாதிகள் சந்தையில் அதிகூடிய சந்தை வாய்ப்பைத் தன்னகத்தே கொண்டுள்ளமைக்கு மேலதிகமாக, அற்லஸ் இலங்கையின் முதலாவது காகிதாதிகள் அபிவிருத்தி மற்றும் ஆய்வுகூடத்தையும் நிறுவியுள்ளது. ஒவ்வொரு வருடமும் தனது உற்பத்தித் தொகுதியில் புதிய உற்பத்திகளை உள்ளடக்கி வருகிறது. இதன் மூலம் நாட்டின் பாடசாலை மாணவர்களுக்கு புத்தாக்க சிந்தனையில் உருவாகிய உற்பத்திகளை சகாய விலையில் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது. 'அட்லஸ் பாஸ்' என்ற பயிற்சி நூல் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தம்மை தயார்ப்படுத்தும் மாணவர்களுக்காக முன்னெடுக்கப்படுகிறது. அட்லஸ் உற்பத்தி தொகுதியில் புதிய உள்ளடக்கமாக இது அமைந்துள்ளது. (த)

## கால்நடைகளின் பாவனைக்கு புதுமுறிப்புகுளத்திலிருந்து நீர்

கிளிநொச்சி, ஒக. 12

கால்நடைகளின் குடிதண்ணீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு புதுமுறிப்புக் குளத்திலிருந்து கடந்த 8ஆம் திகதி தொடக்கம் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நிலவும் கடும் வறட்சியான காலநிலை




காரணமாக குளங்கள், குட்டைகள், கிணறுகள் என்பன வற்றி வறண்ட நிலையில் காணப்படுகின்றன.

இதனால் கால்நடைகள் பருகுவதற்கு நீர் இல்லாத நிலையில் நீர் தேடி அலைந்து திரிவதோடு வேறு பிரதேசங்களுக்கும் இடம் பெயர்ந்து செல்வதையும் காண முடிகின்றது.

இதனைக் கருத்தில்கொண்டு கால்நடைகளின் குடிதண்ணீர்த் தேவைக்கென புதுமுறிப்புக்குளத்தில் இருந்து சிறிதளவு நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் கால்நடைகள் புதுமுறிப்புக் குளத்தின் வாய்க்கால்களில் நீரைப் பருகுவதுடன் அந்தப் பகுதிகளில் தரித்து நிற்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை - கால்நடைகளின் நன்மை கருதி இரணைமடுக் குளத்தி லுள்ள சிறிதளவு நீரின் ஒரு பகுதி இரணைமடு வாய்க்கால் வழியாக கடந்த வாரம் திறந்து விடப்பட்டுள்ளது. (க-426)

## வலயக்கல்வி அலுவலக கட்டடத்தில் தொடர்ந்தும் பணியாற்ற முடியாது

### முல்லைத்தீவு வலய அலுவலகப் பணியாளர்கள் போர்க்கொடி

முள்ளியவளை, ஒக. 12

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகக் கட்டடத்தில் தம்மால் தொடர்ந்தும் பணியாற்ற முடியாதென அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளார்.


முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகம்

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகக் கட்டடம் தொடர்பாகப் பலமுறை பலருக்கும் அறிவித்தும் இதுவரையில் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வெளியே காணப்படும் வெப்பநிலையை விடக் கட்டடத்தின் உள்ளே 6 பாகை அதிகமாகவே காணப்படுகின்றது.

இதற்கு இந்தக் கட்டட அமைப்பும், கடலுக்குச் சமாந்தரமாகக் காணப்படுகின்றமையுமே காரணம் என்ற விடயம் இப்போதைக்குத் தெரிய வந்துள்ளது.

எனினும் இங்கு காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை பணி புரிகின்ற உயிருள்ள மனித ஜீவன்கள் குறித்து இதுவரைக்கும் யாருமே சிந்திக்கவில்லை. உள்ளே நிலவும் வெப்பம் காரணமாக ஊழியர்கள் விடுப்புப் பெற வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். மற்றும் உடலில் பல உபாதைகளும், நோய்களும் ஏற்படும் நிலை யும் அதிகமாக உள்ளது.

வாழைக்குலைகளைப் பழுக்க வைக்கக் கூடிய இடமாகக் காணப்படும். இந்த இடத்தில் இனிமேலும் பணியாற்ற முடியாது. இதற்கு மாற்று நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். தவறும் பட்சத்தில் உள்ளேயிருந்து வேலை செய்வதை விட வெளியே வெயிலில் இருந்து வேலை செய்வது என்றும் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாகவும் வலயக் கல்விப் பணிமனை ஊழியர் நலன்புரி சங்க உறுப்பினர்களினால் கையொப்பமிடப்பட்ட மேற்படி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் கட்டடத்தின் மேற்பகுதியில் வெப்பத்தைத் தணிக்கும் வகையில் ஓலைகளால் ஒரு கூரை யொன்றை அமைக்கும் பொருட்டு அதற்குரிய பொருள் கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-433)

## பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம் அடுத்த ஆண்டு மூடப்பட்டு விடும்

### புனர்வாழ்வு ஆணையாளர் தகவல்

வவுனியா, ஒக. 12

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் மூடப்படும் என புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜகத் விஜயதிலக தெரிவித்துள்ளார்.

பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் தற்போது 122 விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் தங்கியுள்ளனர். இவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் புனர்வாழ்வு முகாம் மூடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வுமுகாமில்சிங்களமொழி பாடநெறியைப் பூர்த்தி செய்த முன்னாள் போராளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் அரசின் புனர்வாழ்வுப் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 11 ஆயிரத்து 800 பேர் பயிற்சிகளை முடித்து சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

போரின் இறுதிக்கட்டத்தில் 594 சிறுவர் போராளிகள், பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர். இவர்களுக்கு கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கினர்.

இவர்களில் பலர் உயர்கல்வியைக் கற்றுவருகின்றனர். புனர்வாழ்வு முகாமில் பயிற்சி பெற்றுச் சென்றவர்களில் நான்கு பேர் தற்போது மருத்துவர்களாக தேசிய மருத்துவ மனைகளில் பணியாற்றி வருகின்றனர்.

அத்துடன் புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட தொழிற் பயிற்சிகளை பூர்த்தி செய்த முன்னாள் போராளிகள் பலர் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவித்தார். (க-402)


அண்மையில் இடம்பெற்ற செட்டிகுளம் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழாவின் போது திருவிழாத் திருப்பலியை மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஒப்புக் கொடுக்கின்றார். (க)

## மின்சாரம் கிடைக்காத மங்கைநகர்

துணுக்காய், ஒக. 12

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மல்லாவி மங்கைநகர் கிராமத்துக்கு மின் விநியோகம் வழங்கப்படாததால் 250க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

துணுக்காய்ப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு இடம்பெற்று ஐந்து வருடங்கள் கழிந்த நிலையிலும் சில பகுதிகளுக்கு மின்சார வசதிகள் இது வரையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் இந்திய வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு அவற்றுக்குரிய வேலைகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் உள்ளக வீதிகள் முற்று முழுதாகப் புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

அதேவேளை இங்கு மின்கம்




பங்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ள போதிலும் மின் இணைப்புக்களை வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-415)

## பாலைப்பழ வியாபாரத்தில் பாடசாலை மாணவர்கள்

மாங்குளம், ஒக.12

வன்னிப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைச் சிறுவர்கள் பலர் ஏ-9 வீதியில் பாலைப்பழ விற்பனையில் ஈடுபடுவதைக் கண்டு கல்வியியலாளர்கள் தமது வேதனையைத் தெரிவித்துள்ளனர்.



இந்தச் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் காலத்துக்கு ஏற்ற பழ வியாபாரம் மற்றும் அரிவி வெட்டுதல் எனப் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் சட்டவிரோதமான செயலாகும். இதேபோன்று பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாமல் சிறு தொழில்களில் ஈடுபடச் செய்வதும் சிறுவர் துஷ்பிரயோகமே.

பாடசாலை நேரங்களில் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள் மீதும், பாடசாலைக்குச் செல்வதைத் தடுக்கும் பெற்றோர் மீதும் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பாக ஓமந்தை, புளியங்குளம், கனகராயன்குளம், பெரியகுளம், மன்னகுளம், முறிகண்டி ஆகிய இடங்களில் ஏ-9 வீதியில் சிறுவர்கள் பலர் வியாபாரத்தில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. பாடசாலைகளில் வரவுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாதத்துக்கு இரு தடவையாவது பாடசாலைக்கு வருகை தராத மாணவர்களின் பெற்றோரிடம் பொலிஸாரின் உதவியுடன் சென்று நடவடிக்கை எடுத்தால் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (க-422)

## மல்லாவி வங்கியில் கணக்கை ஆரம்பிக்குமாறு கூறியதால் விசனம்

### ஒட்டுசுட்டான் இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளை

முல்லைத்தீவு, ஒக. 12

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பயனாளிகளை மல்லாவியிலுள்ள தனியார் வங்கியில் கணக்குகளை ஆரம்பிக்குமாறு கூறப்பட்டதால் அவ[illegible] விசனம டைந்திருப்பது [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தச்சடம்பன், பண்டாரவன்னி, பேராறு, தண்டுவான், பெரிய இத்திமடு, பெ[illegible]பகுளம், கணேசபுரம், [illegible]ங்குளம், கூழாமுறிப்பு [illegible] கிராமங்களில் [illegible]க செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக இந்தியன் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவு செய் யப்பட்டு வேலைகள் ஆரம்பித்துள்ள நிலையில் பயனாளிகளை மல்லாவியில் உள்ள குறிப்பிட்ட தனியார் வங்கியில் சேமிப்புக் கணக்கைத் திறந்து பணப் பரிமாற்றங்களை மேற் கொள்ளுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகா ரிகள் கூறியுள்ளதன் காரணமாகவே பயனாளிகள் விசனமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு ஒட்டுசுட்டான், நெடுங்கேணி மற்றும் மாங்குளம் ஆகிய இடங்களிலுள்ள வங்கிகளில் கணக்குகள் உள்ளன.

பெரிய இத்திமடு, பெரியகுளம், தண்டுவான் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் மல்லாவிக்குச் செல்வதானால் இரண்டுக்கும் மேற்பட்ட பஸ்களில் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின் றது.

இதனால் வீண் செலவுகள் ஏற்படுவதோடு, அவர்கள் சிரமங்களையும் எதிர்கொள்ள நேரிடும்.

ஆகவே தமக்கு மாற்று ஏற் பா[illegible] ஒன்றை மேற்கொண்டு தமது சிரமங்களைப் போக்குமாறு இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## போயா தினத்தன்று சாராயம் விற்ற நபர் சிக்கினார்

தென்மராட்சி, ஓக.12

போயா தினத்தன்று சிவில் உடையில் சென்ற மதுவரி நிலைய உத்தியோகத்தர்களுக்கு அரச சாராயம் விற்பனை செய்த நபர் நிலைய உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டதுடன் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல்களையும் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி பொதுச் சந்தையின் பழவகை விற்பனைப்பிரிவில் இடம்பெற்றது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்குக் கிடைத்த தகவலையடுத்து சிவில் உடையில் சென்று குறித்த பழ வியாபாரியிடம் சாராயம் எங்கு வாங்கலாம் என்று சிங்களத்தில் விசாரித்துள்ளனர். தன்னிடம் இருப்பதாகக் கூறி விற்பனை செய்தபோது அங்கு மறைந்திருந்த ஏனைய உத்தியோகத்தர்கள் விரைந்து வந்து வியாபாரியைக் கைது செய்ததுடன் அவர் விற்பனைக்கு வைத்திருந்த சாராயப் போத்தல்களையும் கைப்பற்றினர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் குறித்த வியாபாரி சட்டவிரோதமான விதத்தில் சாராயம் விற்பனை செய்த போது மதுவரி நிலையத்தினரிடம் வசமாக மாட்டிக் கொண்ட போதிலும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இவர் சந்தையில் சாராயம் விற்பனை செய்தமைக்காக பழ வியாபாரம் செய்வதற்கு நகர சபையினர் தடை விதித்தனர். தனது தவறை உணர்ந்து மன்னிப்புக் கோரியதுடன் எதிர்காலத்தில் இவ்வாறு செய்ய மாட்டேன் என்று உறுதிமொழி வழங்கியதையடுத்து மீண்டும்பழ வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)



சுழிபுரம், காந்திஜி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழாவும், காந்திஜி மாலை நேர பொதுநோக்கு மண்டபக் கட்டடத் திறப்பு விழாவும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நாடாவை வெட்டிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். (வ)

# பயிர்ச் செய்கை நிலத்தின் மண்ணைச் சோதிக்க ஏற்பாடு

அச்சுவேலி, ஓக.12

"விவசாயிகள் மற்றும் வீட்டுத் தோட்டம் செய்வோர் தாம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிலத்தின் மண்ணைப் பரிசோதனை செய்து மண்ணின் தரநிலை மற்றும் அதற்கான பரிகார நடவடிக்கைகளை அறிந்து கொள்ளலாம்."

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிப் பிரிவில் 290 ரூபா மானிய கட்டணத்தில் மண் பரிசோதனை செய்யப்பட்டு அதுதொடர்பான அறிக்கை மற்றும் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றது" என்று திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி பிரிவின் பொறுப்பதிகாரி தி.கருணைநாதன் அறிவித் துள்ளார்.



யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அதீத செயற்கை உரப் பசளை பாவனை, கிருமி நாசினி பாவனை என்பனவற்றால் பயிர்ச் செய்கை நிலங்களின் மண்ணில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர்ச் செய்கை நடவடிக்கையில் பாதிப்பு ஏற்படுகின்றது. மண்ணில் ஏற்பட்டுள்ள தாக்கம் மற்றும் அதற்கான மாற்றுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதன் மூலம் பயிர்ச் செய்கையில் பாதிப்பு இல்லாத செயல் முறைகளை மேற்கொள்வதோடு மண்ணின் உண்மையான தரநிலையையும் தெரிந்து கொள்ள முடியும்.

மண் பரிசோதனை மேற்கொள்வதற்கு 1,300 ரூபா வரையில் செலவு ஏற்படுகின்ற போதிலும், விவசாயிகளின் நன்மையைக் கருத்தில்கொண்டு மானிய அடிப்படையில் ரூபா 290 செலுத்தி மண்பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

மண் பரிசோதனை செய்து கொள்ள விரும்புவோர் தமது பகுதி விவசாய போதனாசிரியரிடமும் அதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி போதனா ஆசிரியரின் வழிப்படுத்தலுக்கு அமைய மண் மாதிரியை சேகரித்து ஆராய்ச்சிப் பிரிவில் 290 ரூபாவை செலுத்தி ஒப்படைக்கவேண்டும்.

மண் மாதிரி உரிய முறையில் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு அறிக்கை ஒரு சில தினங்களில் வழங்கப்படும். அத்துடன் சம்பந்தப்பட்ட விவசாயிகள் தமது சந்தேகங்கள் குறித் தும் கலந்துரையாடிக் கொள்ளலாம் என்றுதெரிவித்தார். (வ-11)

## செல்வச்சந்நிதி ஆலயத்தில் தற்காலிக வீதி அமைப்பது குறித்து கலந்துரையாடல்

அச்சுவேலி, ஓக.12

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் திருவிழாக் காலத்தில் தொண்டமானாறு உப்பு நீர் தடை அரணுக்குச் சமாந்தரமாக அமைக்கப்படும் தற்காலிக வீதி அமைப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறும் உயர்மட்ட கலந்துரையாடலில் மேற்கொள்ளப்படும்.

வீதி தற்காலிகமாக அமைக்கப்பட வேண்டுமெனவும், வீதி அமைக்கப்பட வேண்டியதில்லை எனவும் இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

தொண்டமானாறு புதிய பாலம் அமைக்கப்பட்டு வீதிப் போக்குவரத்துக்கு வசதி செய்யப்பட்டிருப்பதால் வலிகாமம் பகுதி மக்களின் போக்குவரத்துக்கு எந்தவிதமான இடையூறும் இல்லை. எனவே தற்காலிக வீதி அமைக்கப்பட வேண்டிய தேவை இல்லை.

தற்காலிக வீதி அமைப்பதால் மழைநீரைக் கடலுக்குத்திறந்து விடுவதில் உள்ள தொழில்நுட்பப் பாதிப்பு மற்றும் சமகாலச் சூழலில் வீதி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் கடந்த இரண்டு வருடங்களிலும் தற்காலிக வீதி அமைக்கப்பட்டதால் எதிர் கொள்ளப்பட்ட சிரமங்கள் தொழில்நுட்ப இடர்பாடுகளைக் காரணம் காட்டி நீர்த்தடுப்பு அணைக்குப் பொறுப்பான பொறியியலாளர் தரப்பிலும் நீர்ப்பாசனத் திணைக்களம் தரப்பிலும் வீதி அமைப்பதால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகளை முன்வைத்து மறுப்புத் தெரிவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் இரண்டு தரப்பு நியாயங்களையும் கள நிலையையும் ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள உயர் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் வடக்கு மாகாண விவசாய நீர்ப்பாசனச் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-11)

## மயான வீதி சிரமதான மூலம் துப்புரவு

யாழ்ப்பாணம், ஓக. 12

நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்குச் செல்லும் வீதி சிரமதானம் மூலம் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டது.

மயானத்துக்கு செல்லும் வீதியில் புற்கள், செடிகள் படர்ந்து வளர்ந்ததால் சடலங்களைக் கொண்டு செல்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அதை அடுத்து பிரதேச மக்கள் ஒன்றுசேர்ந்து சிரமதானம் மூலம் குறித்த வீதியை துப்புரவு செய்தனர். மழைக் காலங்களில் குறித்த வீதியில் வெள் ளம் தேங்கி நிற்பதால் சடலங் களை மயானத்துக்குக் கொண்டு செல்வதற்கு மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த மயானத்துக்குச் செல்லும் வீதி வலி.கிழக்குப் பிரதேச சபையால் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை எந்தவித புனரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (வ-17)

## நீண்ட இழுபறியின் பின்னர் மாதகல் மேற்கு கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பு ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக. 12

மாதகல் மேற்கு கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பு நீண்ட இழுபறியின் பின்னர் கடந்த வாரம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


மாதகல் மேற்கு கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பு 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட போது அந்தக் கிராமத்திலுள்ள வேறு அமைப்புக்களால் குறித்த அமைப்பு ஆரம்பிப்பதை நிறுத்துமாறு கோரி கடற்றொழில் அமைச்சுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மேற்படி அமைப்பின் பதிவு நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த மாதம் 15 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சில், மேற்படி அமைப்பின் பிரதிநிதிகளுக்கும், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதனையடுத்துமேற்படி அமைப்பை ஆரம்பித்து செயற் படுத்துமாறு கடற்றொழில் அமைச்சு அனுமதி வழங்கி இருந்தது.

இதற்கமைய மாதகல் மேற்கு கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பின் ஆரம்ப நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி, துறைமுக விநாயகர் கோயில் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி, இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக வி.என்.சுப்பிரமணியமும், செயலாளராக ஏ.ஜெபரட்ணமும், பொருளாளராக எஸ்.இந்திரநாயகமும், உபதலைவராக வி.கற்கண்டும், உபசெயலாளராக எல்.கிஷோக்காந்தும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். இதற்கு மேலதிகமாக 6 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-5)

## மாநகரசபை முதல்வரின் கணவரின் ஒப்பத்துடன் வாகன அனுமதி அட்டை




யாழ்ப்பாணம், ஓக. 12

நல்லூர் உற்சவ காலத்தில் வீதித் தடைகளினூடாக உட் செல்லும் வாகனங்களுக்கு வழங்கப்படும் வாகன அனுமதி அட்டையில், யாழ்.மாநகர சபை முதல்வர்ஒப்பமிடவேண்டிய இடத்தில் அவருக்குப் பதிலாக அவரது கணவரது ஒப்பத்துடனேயே அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

நல்லூர் உற்சவ காலத்தில் ஆலயச் சுற்றாடலிலுள்ள பிரதான வீதிகளினூடான போக்குவரத்து தடை செய்யப்படும். இதனூடாகச் செல்வதற்கு அவசியமான - முக்கியமான வாகனங்களுக்கு யாழ்.மாநகர சபையால் விசேட அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் விசேட அனுமதி அட்டையில் யாழ். மாநகர சபை முதல்வரே கையொப்பமிடுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கையொப்பம் இடுவதற்கு வழங்கப்பட்டுள்ள வெற்றிடத்தில், முதல்வரின் கணவர், பற்குணராசாவே கையொப்பமிட்டுள்ளார். அவர் கையொப்பம் இட்டு வழங்கிய விசேட அனுமதி அட்டையே வாகனச் சாரதிகளுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது. (வ-5)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அமைச்சர்களாலும் தேரரின் துணிச்சலை அசைக்க முடியாது

சமீப காலமாக நாட்டின் அரசியலில் பெரும் கலக்கு கலக்கி வருகிறார் பொதுபல சேனா என்ற பௌத்த சமய அமைப்பின் செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரர். இந்த நாட்டின் அரச மதமாக பௌத்த மதம் பிரகடனப் படுத்தப்பட்டு அந்த மதத்தைச் சார்ந்தவர்களே ஆட்சி பீடத்தில் அமர்ந்து கோலோச்சி வருகிறார்கள். அரசின் பொது வைபவங்கள் அனைத்திலுமே பௌத்த மதத்துக்கு முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டு வருகின் றன. பௌத்த மதத்தைப் பேணுவதற்கென்றே சிறப்புத் திணைக்களமும் செயற்பட்டு வருகின்றது. இவைபோக, பௌத்த மதத்தை வழிநடத்துவதற்கென்றே அறி வார்ந்த சமயப் பெரியோர்களான பௌத்த சிரேஷ் டர்களின் தலைமையில் பௌத்த பீடங்கள் பலவும் இயங்கி வருகின்றன. ஆட்சியாளர்கள் அவ்வப்போது இந்தப் பீடாதிபதிகளின் நல் உபதேசங்களைப் பெற்றுத் தமது காரியங்களை அவைகளுக் கேற்றாற் போல் அமைத்துக்கொண்டு செயற்படுவதாகவும் நம்பப்படுகிறது.

இவ்வளவுக்கும் இடையில், பௌத்த மதத்தைப் பாதுகாக்கவும் அதற்கு எதிராக நடப்பதாகக் கருதப்படும் அமைப்புகளை இல்லாமல் செய்யவு மென சில புதிய அமைப்புக்கள் கிளம்பியுள்ளன. இவைகளில் பொதுபல சேனாவும் ஒன்று. அதன் செயலாளரான வண. ஞானசார தேரர் ஏனைய சமூகங்கள், சமயங்கள் குறித்து மட்டுமின்றி, அரசில் உள்ள பல முக்கிய பிரமுகர்கள் குறித்தும் பாரதூர மான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். அண்மையில் அந்தத் தேரர் அளுத்கம என்ற இடத்தில் நடந்த கூட்டமொன்றில் நிகழ்த்திய சொற்பொழிவு நாட்டின் ஒரு முக்கிய புள்ளியாக அவரை வெளிப்படுத்தி இருப்பது ஒருபுறமிருக்க, சிறுபான்மை முஸ்லிம் மக்கள் வதியும் பகுதிகளில் இனக் கலவரங்கள் வெடித்து உயிர் மற்றும் பொருள் சேதங்கள் ஏற்படவும் காரணமாயிற்று என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் வெறும் தூசாக ஊதித் தள்ளிக் கொண்டு மேலும் மேலும் பல்வேறு சர்ச்சைக்குரிய விடயங்களை தேரர் தயக்கமின்றி வெளியிட்டு வருவது ஆச்சரியமாக இருக்கின்றது. அவர் கூறுகிறார் தாம் வெளியிடும் குற்றச்சாட் டுகளுக்கெல்லாம் தம்மிடம் ஆதாரங்கள் இருக்கின்றன என்று. தக்க சமயத்தில் அவைகள் வெளியிடப்படும் என்பதும் அவருடைய வாதம். இவ்வாறு அந்த இளம் துறவி துணிச்சலுடன் செயற்படுவதற்கு, உண்மையிலேயே அவரிடம் அவர் கூறிக்கொள்வது போல் ஆதாரங்கள் இருக்கின்றன அல்லது எதிர்த் தரப்பினர் சிலர் கூறுவது போல் அரசின் மேல் மட்டங்களில் அவருக்கு ஆதரவும் பாதுகாப்பும் இருக்கின்றது என்று கருத வேண்டியுள்ளது. இல் லையெனில் இந்த அளவுக்கு அவருக்குத் துணிச்சல் எங்கிருந்து வந்திருக்க முடியும்?

வண.தேரர் இப்போது கூட ஓய்ந்துவிடவில்லை. அரசிலுள்ள முக்கிய அமைச்சர்கள் மீதே சில பாரதூரமான குற்றச் சாட்டுக்களை தயவு தாட்சண்யமின்றி முன்வைத்திருக்கிறார். மூன்று அமைச்சர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ள தேரர் மீன்பிடி மற்றும் கடல்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனா ரத்ன மீது நேரடியாகவே ஊழல் குற்றச் சாட்டைச் சுமத்தியுள்ளார். இந்த அமைச்சர்களுக்கு போதைப் பொருள் இறக்குமதியில் தொடர்பு இருப்பதாக தேரர் குற்றம் சுமத்தியிருப்பது அவர்களை ஆட்டம் காண வைத்திருக்கிறது. குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள அமைச்சர்கள் பொதுபல சேனாவின் இந்த அவதூறுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அரசுக்கு எதிராக தமிழ் மக்கள் சார்பில் எவராவது கருத்துத் தெரிவித்து விட்டால், புலி முத்திரை குத்தும் அதிகாரிகளும் அரசுத் தலைவர்களும், வெளிப்படையாகவே அரசில் உள்ளவர் மீது ஊழல் குற்றச்சாட்டுகளை வீசும்போது அமைதி காப்பது புரியாமல் இருக்கிறது.

வண.ஞானசார தேரர் அண்மையில் பத்திரிகை யொன்றுக்குத் தெரிவித்த கருத்தில் அரசில் இருந்து கொண்டு தம்மைப் பார்த்து குரைப்பவர்களை கட்டிப் போட வேண்டும். பொதுபல சேனாவின் மீது எவரும் கை வைத்தால் அத்துடன் அரசு ஒழிந்து போய்விடும் எனக் கூறியிருந்தமை நினைவு கூரத்தக்கது.

பொதுபல சேனா மீது நடவடிக்கை எடுப்பதற்கான அமைச்சர்கள் பங்கேற்கும் அமைப்பொன்றை வெகுவிரைவில் அமைக்கப் போவதாக கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருக்கிறார். இந்த முயற்சிக்கு அரசிலுள்ள இடதுசாரி அமைச்சர்கள் உட்பட சுமார் 30 அல்லது 35 அமைச்சர்களது ஆதரவும் எதிர்த் தரப்பில் ஐ.தே.க. உறுப்பினர்களில் ஒரு பகுதியினரும் ஆதரவு தரவிருப்பதாகக் கூறியிருக்கிறார்.

பொதுபல சேனாவின் வண.ஞானசார தேரர் மீது அரசின் உயர் பீடத்தின் வழியாக ஏதும் செய்ய முடியாத நிலையிலேயே சில அமைச்சர்கள் இந்த வகையில் செயற்படத் தீர்மானித்திருக் கிறார்கள் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. எதுவானாலும் பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரரை இப்போதைக்கு எவராலும் கட்டுப்படுத்த முடியாது என்பது மட்டும் திண்ணம்.

எந்த நிலைமையையும் எதிர்கொள்வதற்கு அவர் துணிச்சலோடு ஆயத்தமாய் இருக்கிறார் என்பதையே அவருடைய பேச்சுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

## திருகோணமலையில் தொடங்கப் போகும்

# மஹிந்தவின் வீழ்ச்சி



இலங்கையில் அரசுகளைக் கவிழ்ப்பதற்கான முக்கியமான கேந்திரநிலையமாக திருகோணமலை விளங்குகிறது என்று சிலோன் ருடே ஆங்கில நாளிதழில், உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள பத்தியில் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். சீன அரசுடன் இணைந்த நிறுவனம் ஒன்று திருகோணமலையில், விமானப் பராமரிப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்திருந்தால், அதுபற்றித் தெரியப்படுத்துமாறு அவர் கோரியிருந்தார். அந்தத் திட்டம், இந்திய-இலங்கை உடன்பாட்டை மீறுகின்ற ஒன்று என்றும், அது இந்தியாவுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்றும் ரணில் சுட்டிக்காட்டியிருந்தார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது இது போன்றதொரு கேள்வியை, நாடாளுமன்றத்தில் 2003 ஒக்ரோபர் 12ம் நாள் எழுப்பியிருந்தார்.

'இந்தியாவின் தேவைகள் குறித்து நாம் சிறப்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய- இலங்கை உடன்பாடு குறித்து உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அதன்படி, திருகோணமலைத் துறைமுகம், மற்றும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு குறித்து இந்தியா கரிசனை கொள்வதற்கு உரிமை உள்ளது.

திருகோணமலையைச் சுற்றி, விடுதலைப் புலிகள் அமைத்துள்ள புதிய தளங்கள், துறைமுகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும்' என்று கதிர்காமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, கதிர்காமரைப் பாராட்டி விட்டு அந்த விவகாரத்தை தான் எழுப்பினார்.

அதுமட்டுமன்றி, திருகோணமலைக்குப் பயணம் செய்து அங்குள்ள உண்மை நிலவரங்களைப் பார்வையிடுவதற்காக, உலங்குவானூர்தி ஒன்றைத் தருமாறு, ரணில் விக்கிரமசிங்கவின் அரசிடம் கோரினார்.

ரணில் உலங்குவானூர்திக்கு அனுமதி அளித்தார். அதேவேளை, அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த ஒஸ்ரின் பெர்னாண்டோ அதனை எதிர்த்தார்.

மஹிந்த உலங்குவானூர்தியில் சென்று, திருகோணமலையில் அப்போது பொறுப்பாக இருந்த கடற்படை அதிகாரிகளைச் சந்தித்தார். அப்போது, கிழக்குத் தளபதியாக, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட இருந்தார்.

இந்தப் பயணத்தின் போது, மஹிந்தவுக்கு அவர் நண்பனானார். விடுதலைப் புலிகளால், திருகோணமலைத் துறைமுகத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பான அறிக்கை ஒன்றை மஹிந்தவிடம் கொடுத்தார் வசந்த கரன்னகொட. இந்த அறிக்கை முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்கவின் கைகளுக்குச் சென்றது. இறுதியில் அது வெளியிடப் பட்டது.

அதன் பிரதி ஒன்றை இந்தியாவும் பெற்றுக் கொண்டது. முடிவாக, 2003 நவம்பர் மாதம் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று அமைச்சுக்களை சந்திரிகா தன்வசம் எடுத்துக் கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டதற்கு திருகோணமலைத் துறைமுகத்துக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் தான் பிரதானமான காரணம். சந்திரிகா 2003 நவம்பர் 4ம் நாள் மூன்று அமைச்சுக்களைத் தன்வசம் எடுத்துக் கொண்டார். அதற்கு ஒரு மாதத்துக்கு முன்பாக ரணிலுக்கு சந்திரிகா எழுதிய கடிதம் ஒன்றில், திருகோணமலைத் துறைமுகத்துக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் உள்ளதாக உள்நாட்டு, வெளிநாட்டு கடற்படை அறிக்கைகள் கூறுவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நகர்வின் பின்னர், நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது அவர், இந்த அச்சுறுத்தல் குறித்தும் கூடப் பேசினார். அவரது ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமர், தான் இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த போது, திருகோணமலைத் துறைமுக விவகாரம் இந்தியாவுக்கு முக்கியமானது என்று தெரிவித்திருந்ததாக கூறியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் பாதுகாப்புச் செயலராக இருந்த ஒஸ்ரின் பெர்னாண்டோ, பின்னர் தாம் எழுதிய நூலில், அமைச்சுக்களை சந்திரிகா பொறுப்பேற்றது மற்றும் ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்ததில் இந்தியாவின் மறைகரம் பின்னணியில் இருந்ததாக குறிப்பிட்டிருந்தார். மேலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், ஜே.வி.பியையும் அப்போது இந்தியத் தூதுவராக இருந்த நிருபம் சென்னே ஒன்றுபடுத்தும் கருவியாக இருந்தார் என்று ஊடகங்கள் தெரிவித்தன.

இந்தியத் தூதுவரின் அதிகாரபூர்வ வதிவிடத்திலேயே இருகட்சிகளும் சந்தித்துக் கொண்டதாக அறிக்கைகள் கூறின.

திருகோணமலைத் துறைமுகத்துக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் என்பது இந்தியாவின் கவலையாக இருந்திருந்தால், திருகோணமலையில் அமைக்கப்படும் சீன விமான பராமரிப்புத் திட்டம், இந்தியாவுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்ற ரணிலின் கருத்தும் சரியானதே. இந்திய- இலங்கை உடன்பாட்டின் கீழ் திருகோணமலைத் துறைமுக விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளும் உரிமையை இந்தியா கொண்டுள்ளதாக, ரணிலும், கதிர்காமரும் கூட வாதிட்டுள்ளனர்.

இந்திய - இலங்கை உடன்பாட்டின் இணைப்பாக உள்ளடக்கப்பட்டுள்ள, இலங்கை அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், ஒப்பமிட்ட கடிதத்தில், இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில், திருகோணமலைத்துறைமுகத்தையோ அல்லது வேறெந்த துறை முகத்தையோ, எந்தவொரு வெளிநாட்டுக்கும் இராணுவ அல்லது இராணுவப் பயன்பாடற்ற தேவைக்கும் வழங்குவதில்லை என்று இலங்கை அரசு இணங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில், திருகோணமலைத் துறைமுகம் தான், இந்திய - இலங்கை உடன்பாடு கையெழுத்திடப்படுவதற்குக் காரணமாகும். திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை அமெரிக்காவுக்கு இலங்கை குத்தகைக்கு விடவுள்ளதாக, கிடைத்த இரகசிய அறிக்கையை அடுத்து, ஜே.ஆர். அரசைக் கவிழ்ப்பதற்காக தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் அளித்தது இந்தியா.

ஜே.ஆரை வீட்டுக்கு அனுப்ப விரும்பியது இந்தியா. ஆனால், தனது அதிபர் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஜே.ஆர். இந்தியாவிடம் சரணடைந்தார். இந்த உண்மைகளைக் கவனத்தில் கொள்ளும் போது, அரசுகளைக் கவிழ்ப்பதற்கான முக்கியமான கேந்திர நிலையமாக திருகோணமலை விளங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

திருகோணமலையை அமெரிக்காவுக்கு வழங்க முற்பட்டதன் விளைவாக ஜே.ஆர். எல்லாவற்றையும் கைவிட்டார். திருகோணமலைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த விடுதலைப் புலிகளுக்கு இடமளித்ததால், ரணில் தனது அரசை இழந்தார். தற்போது, திருகோணமலைக்குள் நுழைவதற்கு சீனாவை அனுமதித்துள்ளார் மஹிந்த ராஜபக்ஷ. ரணிலுக்கு நடந்ததே மஹிந்தவுக்கும் நடக்கும் என்று நாம் கணிக்க முடியாது. எவ்வாறாயினும், ஜே.ஆரின் காலத்தில், ரஷ்யா சார்பானவர்களாக இந்திய ஆட்சியாளர்கள் இருந்ததால், அமெரிக்காவை இந்தியா எதிரியாகக் கருதியது. திருகோணமலைக்கு அமெரிக்கா வருகிறது என்ற செய்தி அதன் காதுகளை எட்டியபோது, இந்தியா அஞ்சியது. ராஜீவ்காந்தி விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட பின்னர், புலிகள் இந்தியாவின் எதிரியானார்கள்.

திருகோணமலையைச் சுற்றி விடுதலைப் புலிகள் தமது அரண்களைப் பலப்படுத்திய போது, இந்தியா அச்சம் கொண்டது. சீனா, இன்று இந்தியாவின் எதிரியல்ல. ஆனாலும், இந்தியா சீனாவைச் சந்தேகிக்கிறது. திருகோணமலையில் நுழைய சீனாவுக்கு மஹிந்த அனுமதி அளித்தால், அதுவே தற்போதைய ஆட்சியின் முடிவாக அமையும்.

*நன்றி இணையம்*

நன்றி: 'கார்டியன்'
தமிழில் - **அ. ரஜீபன்**

# எபோலா வைரஸும் அச்சமும்

சியாரோ லியோனில் முதலாவது எபோலா வைரஸ் தாக்கம் கடந்த மே மாதம் இனம் காணப்பட்டது. அது பின்னர் ஹெனேமா பிராந்தியத்துக்கும் பரவியது. அந்தப் பகுதியே தற்போது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள சிகிச்சை நிலையமொன்றில் எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள 45 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்தப் பகுதி மக் கள் எபோலா வைரஸ் குறித்தும், அதன் பின்னணி, அது குறித்த கட்டுக்கதைகள் குறித்தும் தற்போது தான்புரிந்துகொள்ளத்தொடங்கியுள்ளனர். ஹெனேமாவிலுள்ள அந்த வைத்திய நிலையத்தில் நோயாளிகளுக்குக் குடிப்பதற்கு நீர் வழங்கும்போதுகூட தலைக்கவசத்தை வைத்தியப் பணியாளர்கள் அணிகின்றனர். ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் அவர்களுக்கு அவசியமான அனைத்து உபகரணங்களையும் மருத்துவ சாதனங்களையும் வழங்குகின்றது.

லைபீரியா, சியாரோ லியோன், நைஜீரியா போன்ற நாடுகளில் இது வரை 1,171 பேர் இந்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். 932 பேர் பலியாகியுள்ளனர். இதில் சியாரோ லியோனில் மாத்திரம் 286 பேர் இறந்துள்ளனர். எதிர்பாராத இந்த நோய்த் தாக்கத்தை மிக குறைந்தளவு மருத்துவ வசதிகளுடன் எதிர்கொண்டு களைப்படைந்துள்ள இந்த வைத்தியசாலைப் பணியாளர்களை, எதிர்பாராத இன்னொரு பேரதிர்ச்சி தாக்கியுள்ளது. இவர்களுடன் பணிபுரிந்த ஆறு தாதிகளும் ஒரு வைத்தியரும் எபோலா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி கடந்த வாரம் இறந்துள்ளனர்.

குறிப்பிட்ட வைத்தியசாலையில் எஞ்சியிருக்கும் தாதிமார்கள் அதிக வேலைப்பளு காரணமாகக் களைப்படைந்து - மனமுடைந்து காணப்படுகின்றனர். அதற்கான இன்னொரு காரணமும் உள்ளது. எபோலாவுக்கு அவர்கள் சிகிச்சையளிக்கத் தொடங்கிய பின்னர் அவர்களுக்கு அருகில் எவரும் செல்வதில்லை; எவரும் நெருங்கி வருவதில்லை.

"மக்கள் எங்களை 'எபோலா தாதி' என அழைக்கின்றனர். எவரும் எங்களுக்கு அருகில் வருவதில்லை. ஏனைய பகுதி தாதிமார்கள்கூட எங்களை நெருங்குவதில்லை. குடும்பத்தினர்கூட அச்சத்துடனேயே பார்க்கின்றனர். எங்களிடமிருந்து வைரஸ் பரவிவிடுமோ என்ற அச்சமே இதற்குக் காரணம்" என்கிறார் நான்சி என்ற தாதி.



எபோலா நோயாளி களுக்குச் சிகிச்சை அளிக்கும் இன்னொரு தாதியான லெபேக்கா லன்சனாவும் இதே கருத்தை வெளியிடுகிறார். தங்களுடைய சக ஊழியர்கள் உயிரிழந்தமை தனது குடும்பத்தினரை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர்கள் என்னை வைத்தியசாலைக்கு வருவதற்கு அனுமதிக்கிறார்கள் இல்லை. நான் இறந்து விடுவேன் அல்லது அவர்களுக்கு நோயைப் பரப்பி விடுவேன் என நினைக்கிறார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நோய் பரவத் தொடங்கிய பின்னர் சுகாதாரப் பணியாளர்கள் அவமானப்படுத்தப்பட்டுள்ளனர்: கொல்லப்படுவீர்கள் என மிரட்டப்பட்டுள்ளனர். சிலர் எங்கள் வைத்தியசாலையை தீக்கிரையாக்கப் போவதாகவும் எச்சரித்தனர். அவர்கள் எங்களைப் பார்த்து ஆத்திரமடைந்துள்ளனர். நாங்கள் அவர்களுக்கு உதவுகிறோம் என்பதை அவர்கள் நம்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சியாரோ லியோனில், எபோலா இப்போதே ஒரு நோயாகக் கருதப்படுகிறது. ஆரம்பத்தில் சில பழங்குடியினரைப் பலவீனப்படுத்துவதற்கான அரசின் தந்திரோபாயமாகவும் உடல் உறுப்புகளைக் களவாடுவதற்கான மற்றும் சர்வதேசத்திடமிருந்து நிதி பெறுவற்கான முயற்சியாகவும் இது கருதப்பட்டது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஹனோமா வைத்தியசாலைக்கு வெளியே திரண்ட இளைஞர் கும்பலொன்று கல்வீச்சில் ஈடுபட்டது. 1,000 பேருக்கு மேல் திரளத் தொடங்க அது ஒரு கலவரமாகவே மாறியது.

தாதி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர், தொலைக் காட்சிகளில் அப்படி ஒரு நோய் இல்லை. இது சதித் திட்டம் எனக் குறிப்பிட்டதைத் தொடர்ந்தே இந்த அமர்க்களம் மூண்டது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டிய சூழ்நிலை உருவானது. பெண்மணியொருவர் தனது மகளை இந்த வைரஸுக்குப் பலிகொடுத்து விட்டதாகத் தெரிவித்த பின்னரே அமைதி திரும்பியது.

வைத்தியசாலைக்கு வெளியே உப்பைத் தூவினால் எபோல வைரஸ் 21 நாள்களுக்குள் காணாமற் போய்விடும் என யாரோ ஒருவர் தெரிவிக்க அதனையும் செய்துபார்த்துள்ளனர்.

செகு அருணா என்பவர் 23 வயது இளைஞர். செஞ்சிலுவைச் சங்கத்தில் பணியாற்றுபவர். அவருக்கு எபோலாவின் தாக்கம் குறித்து நன்கு தெரிந்துள்ளது. மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அவர் கிராமம் கிராமமாகச் செல்கிறார். "நான் பல கிராமங்களுக்குச் சென்றுள்ளேன். சிலர் செவிமடுக்கிறார்கள்; சிலர் அச்சத்துடன் எதனையும் கேட்க மறுக்கின்றனர். ஒருவரிடம் இது குறித்து பேசிய போது அவர் வாளை எடுத்து என்னைத் துரத்தினார். ஆனால், இப்போதுதான் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக உண்மையை அறியத் தொடங்கியுள்ளனர். அவர்கள் அது ஆபத்தானது என்பதை உணர்கின்றனர்" என்கிறார் அவர்.

யுனிசெவ் அமைப்பு, ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் கிராமம் கிராமமாகச் சென்று உண்மையைச் சொல்ல முயல்கிறது. இது தவிர, துண்டுப் பிரசுரங்கள், கையேடுகள் போன்றவையும் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படுகின்றன.

இன்னொரு பணியாளர் தனது குடும்பத்தினர் ஆரம்பத்தில் இரத்தப் பரிசோதனை நிலையத்தில் தன்னைப் பணிபுரிய அனுமதிக்கவில்லை என்றும் தற்போது உண்மையை உணர்ந்த பின்னர் அவர்கள் இணங்கி உள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

"எங்கள் பகுதியில் இதுவரை 20 பேர்வரை பலியாகி உள்ளனர். நாங்கள் போர் போன்ற ஒன்றில் ஈடுபட்டுள்ளோம். எங்களுக்குப் பெரிய இதயம் உள்ளது. ஆனால், நிறையக் கண்ணீர் விட்டுள்ளோம். மக்கள் இது ஒரு நோய் என்பதை நம்ப மறுக்கின்றனர்" என்கிறார் இன்னொரு பணியாளர். சியாரோ லியோன் அதிகளவு பாதிப்பை எதிர் கொண்டு வருகிறது. அதேவேளை, அதிகளவானவர்கள் நோயின் தாக்கத்திலிருந்து மீண்டுள்ளனர்.

இதேவேளை- எபோலா வைரஸிலிருந்து தப்பியவர்களும் உண்மையை மக்களுக்குத் தெரிவிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றனர். சிலர் இது குறித்து அவமானம் அடைந்திருந்தாலும் இப்போது தாங்களாகவே முன்வந்து மக்களுக்கு இந்த நோய் பற்றிய உண்மைகளைத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர்.

---

*சர்வதேச இளைஞர் தினம்*

# ஒரு நாட்டின் அபிவிருத்தியின் அத்திபாரமும், அதை ஆளுபவர்களும் **இளைஞர்களே**

பீ.ஏ.அந்தோனி மார்க்

ஒரு நாட்டின் முதுகெலும்பு இளைஞர்களே, அதன் சிறப்பும் அவர்களே. இறுதியில் நாட்டை ஆளுபவர்களும் அவர்களே. இலங்கையின் 2011ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி 4.4 மில்லியன் இளைஞர்கள் இங்கு வாழுகிறார்கள். இவர்கள் நாட்டின் மொத்த சனத் தொகையில் 23 சதவீதத்தினர் ஆவர். பால் நிலை (Gender) விவரத்தின்படி 51 வீதம் இளைஞர்களும், 49 வீதம் யுவதிகளும் வாழ்கிறார்கள். ஒரு நாட்டுக்குச் சிறந்த அபிவிருத்தி வேண்டுமாயிருந்தால், ஓர் பெரிய படையணியை உருவாக்க வேண்டியது அந்த நாட்டு மக்களினதும் அரசினதும் கடமையாகும். பல நாடுகள் இளைஞர்களை அபிவிருத்தி செய்வதற்காக விஞ்ஞான தொழில்நுட்பக் கல்லூரிகளையும் சர்வகலாசாலைகளையும் உருவாக்கி இளைஞர்களின் கல்வியை மேம்படுத்தி வருகின்றன. காரணம் இவர்களைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கி வறுமையை அகற்றுதலாகும். உலகம் முழுவதும் சர்வதேச இளைஞர் தினம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்த வருடம் மே மாதம் 6 ஆம் திகதியில் இருந்தும் 10 ஆம் திகதி வரையும் சர்வதேச இளைஞர் மாநாடு இலங்கையில் சிறப்பாக நடைபெற்றது. சகல நாடுகளிலும் இருந்தும் இளைஞர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றி ஒரு வலைப் பின்னலை ஏற்படுத்தி னார்கள். நாமும் இளைஞர்களை மேம்படுத்துவதற்கு சிறந்த தேசியக் கொள்கைகளை உருவாக்க வேண்டும். தேசிய இளைஞர் கொள்கை என்பது வெறுமனே அடையாளச் சின்னங்கள் என்ற வகையிலன்றி, இந்த நாட்டின் இளைஞர், யுவதிகளுக்கு திட்டவட்டமான நடவடிக்கைகள் மூலம் ஆற்றலையும் அதிகார வலுவையும் உறுதிப்படுத்தும் வகையில் இளைஞர்களின் சாத்திய வளங்களுக்கு அதிகாரமும் மதிப்பு நிலையையும் வழங்க வேண்டும்.

சரியான ஜனநாயக வழிமுறைகள் இல்லாததனால் வடபகுதி இளைஞர்கள் தலைநகருக்கு அல்லது வெளி நாடுகளுக்குச் செல்லமுடியாத நிலையில் உள்ளார்கள். போர் முடிந்து 5 ஆண்டுகள் கழிந்தும் இளைஞர்கள், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை இன்று நிலவுகின்றது.

அதேநேரம் 2014.02.14 ஆம் திகதி இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு இலங்கையில் தேசிய இளைஞர் கொள்கை ஒன்றை உருவாக்கியுள்ளது. அதன் தொலை நோக்கு, இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் 3 அம்சங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை-

1. இளைஞர்களுக்கு வாய்ப்புக்களையும் ஆற்றல் வழங்கும் சூழல்களையும் உருவாக்கி அதை உறுதிப்படுத்துதல்.
2. இளைஞர்கள் சுயாதீனமானவர்களாகவும், ஆக்கத்திறன் கொண்டவர்களாகவும் மற்றும் தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் செயலாற்ற உதவி செய்தல்.
3. இளைஞர்கள் பங்கேற்று தமது சார்பிலும் சமூகத்தின் சார்பிலும், மனித இனத்தின் சார்பிலும் பொறுப்பேற்று செயற்படக்கூடிய வகையில் அவர்களை வலுவூட்டல்.

இந்த 3 செயற்றிட்டங்களின் கீழ் மேலும் சில பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.



1. தீர்மானமெடுக்கும் சகல செயல்முறைகளிலும், மட்டங்களிலும் இளைஞர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துதல்.
2. இளைஞர்களின் உடல், உள, ஆன்மிக, பொருளாதார, கலாசாரம் போன்றவற்றில் அவர்களின் பூரண நல்வாழ்வை முன்னேற்றுதல்.
3. தேசிய அபிவிருத்தி செயல்முறையில் அர்த்தமுள்ள வகையில் ஈடுபடுவதற்கான இளைஞர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புதல்.
4. பொருளாதாரத்தில் இளைஞர் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வதன் மூலம் வேலை வாய்ப்பை அதிகரித்தல்.
5. இளைஞர்கள் மத்தியில் சமூக பொறுப்புணர்வு மற்றும் சமூக இணைவு, நெருக்க உணர்வு என்பனவற்றை ஏற்படுத்தும் அதே வேளையில், இனத்துவ அந்தஸ்து கலாசார, மத, மொழி மற்றும் நாட்டில் உள்ள வாழ்க்கைப் பாணிகளின் பல்வகைமையை அங்கீகரித்து மதிப்பளித்தல்.
6. சகலவிதமான பாரபட்சங்களையும், சுரண்டல்களையும் எதிர்த்துப் போராடுவதற்கான இளைஞர்களின் சாத்திய வளத்தை அபிவிருத்தி செய்தல்.
7. இளைஞர் மத்தியில் சுகாதாரத்தையும் சேம நலத்தையும் வலுப்படுத்தல்.
8. அரச அல்லது அரச சார்பற்ற அமைப்புகளுக்கு இடையிலும், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையிலும் இளைஞர் அபிவிருத்தி மற்றும் இளைஞர் பணி சம்பந்தமான கூட்டிணைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு வழி சமைத்தல்.

இளைஞர்கள் போதைவஸ்து, புகைத்தல் போன்றனவற்றில் இருந்து விடுபடல் வேண்டும். ஆலயங்கள், வணக்கஸ்தலங்கள் இளைஞர்களை அரவணைத்து அவர்கள் மத்தியில் இறை வழிபாட்டை ஊக்குவிக்க உதவியாக இருக்க வேண்டும்.

இளைஞர்கள், நல்லொழுக்கம், கடவுள் பக்தி உடையவர்களாக மாற வேண்டும். அத்துடன் இலங்கையின் மனித உரிமைகள் மதிக்கப்பட்டு, இராணுவக் கெடுபிடிகள் அகற்றப்பட்டு, இளைஞர்கள் சகல உரிமைகளுடனும் சமாதான சக வாழ்வும் வாழ அரசும் ஐ.நா. சபையும் முயற்சி எடுக்கவேண்டும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். ஆனால் மனதில் குடும்பக் கவலை உண்டாகும். பிள்ளைகள் உங்களது பேச்சைக் கேட்டு நடப்பது திருப்தி தரும்.

**இடபம்**: எதிர்பாராத திருப்பமும் உண்டாகும். பொறுப்புகள் கூடும். எச்சரிக்கையாகப்பேசுவது நல்லது. காரியதாமதம் ஏற்படக்கூடும். வீண் பிரச்சினைகள் தீரும். அடுத்தவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நன்மை தரும்.

**மிதுனம்**: விருப்பத்துக்கு மாறாக சில காரியங்கள் நடக்கலாம். தொழில் வியாபாரத்தில் தொய்வு காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு வீண் அலைச்சல் இருக்கும். பயணங்களால் நன்மை உண்டு.

**கடகம்**: குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது ஒரு விடயத்துக்காக வாக்குவாதம் செய்து அமைதியைக் குறைப்பார்கள். பிள்ளைகளிடம் அன்பாகப் பேசிப் பழகுவது நல்லது. இடைநடுவில் நின்ற காரியங்களை விரைவாகச் செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்**: முன்யோசனை இல்லாமல் எதில் ஈடுபட்டாலும் சிக்கலில் மாட்டாமல் நழுவிவிடுவீர்கள். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். புத்திசாதுரியத்தால் எந்தத் தடைகளையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கன்னி**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கண்மூடித்தனமாக எதையும் செய்யாமல் விழிப்புடன் இருப்பது இலாபத்தை அதிகரிக்கச் செய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள்.

**துலாம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தினருடன் விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**விருச்சிகம்**: எந்தவொரு வேலையையும் விரைவாகவும், திறமையாகவும் செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். விழிப்புடன் செயற்படுவது நல்லது. எல்லாக் காரியங் களும் அனுகூலமாகும்.

**தனுசு**: துன்பங்கள் வந்தாலும் அதனை மனதுக்குள் மறைத்து வெளியில் மகிழ்ச்சியைக் காண்பிப்பீர்கள். பல வகையிலும் நற்பலன்கள் கிடைக்கும். பயணங்கள் மகிழ்ச்சியைத் தரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும்.

**மகரம்**: கவனமாகப் பேசுவது நல்லது. வீண்பழி உண்டாகலாம். வேலையில் மாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கலைச் சந்திக்க வேண்டி இருக்கலாம். பணவரவு தாமதப்படலாம்.

**கும்பம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணிச் சுமையை ஏற்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்புவர்களால் ஏதாவது மனம் நோகும்படியான நிலை உருவாகலாம். பிள்ளைகளின் கல்வியில் கவனம் தேவை.

**மீனம்**: தன்னம்பிக்கை அதிகரிக்கும். பயணங்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். எச்சரிக்கையாகப் பேசுவது நல்லது. காரியத் தடை ஏற்படலாம். மனதில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சாமர்த்தியமான பேச்சு கைகொடுக்கும்.

## நாளை

**ஆடி-28 புதன்கிழமை | 13.08.2014**

திதி: திருதியை மா.05.52 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ.07.46 வரை
சுபநேரம்: 04.35-06.05 வரை
இராகுகாலம்: 12.05-01.35 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உலகத்தைத் திருத்த ஏன் முயற்சிக்கிறாய்?

இரக்க உணர்ச்சியின்றியும், துயரம் என்ற ஒன்று இருப்பதாகவே உணராமலும் உதவி செய்யக் கற்றுக் கொள். நண்பனையும், பகைவனையும் சமமாகக் கருதக் கற்றுக்கொள். அதையும் செய்து, எவ்வித ஆசையும் இல்லாதிருந்தால் நீ குறிக்கோளை அடைகிறாய்.

பற்றின்மை என்னும் கோடரியால் ஆசைகள் என்னும் ஆலமரத்தைவெட்டு;இருந்த சுவடு தெரியாமல் அது மறைந்துவிடும். ஆசை என்பது வெறும் மயக்கமே; 'கவலையும் மயக்கமும் எவனிடமிருந்து நீங்கி விட்டனவோ, பாசத்தின் தீமையை வென்றவன் எவனோ அவனே முக்தன்'.

ஒருவனிடம் தனித்த அன்பு காட்டுவது பந்தமாகும். அனைவரிடமும் அன்பு செலுத்து, எல்லா ஆசைகளும் மாய்ந்து போகும்.

"அனைத்தையும் விழுங்கும்' 'காலம் என்பது வரும் போது, எல்லாம் மறைந்தாக வேண்டும்'. உலகத்தைத் திருத்த ஏன் முயற்சிக்கிறாய்? வண்ணத்துப்பூச்சிக்கு வண்ணம் தீட்ட முயற்சிப்பது வீண் தானே! அனைத்தும் இறுதியில் மறைந்தேயாக வேண்டும். கூண்டுக்குள் இருக்கும் சுழல் சக்கரத்தின் மீது ஓடுகின்றசுண்டெலிபோல்இருக்க வேண்டாம். சக்கரத்தை அது மிதித்துக்கொண்டே இருப்பதால்அந்தச் சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. அதைப்போல எப்போதும் வேலை செய்து கொண்டு ஆனால் ஒன்றையும் பூர்த்தி செய்யாமல் இருக்காதே. ஆசை நல்லதானாலும் கெட்டதானாலும் அதில் தீமை இருக்கவே செய்கிறது. தனது பிடியில் சிக்காத இறைச்சித் துண்டுக்காக நாய் ஒன்று தாவிக் குதிப்பது போன்ற நிலை அது.

# பேஸ்புக்கில் வலம் வரும் வைரஸ்




உங்களுடைய பேஸ்புக் கணக்குப் பக்கத்தில் நிறத்தை மாற்ற முயற்சித்தது உண்டா? ஆம் எனில், உடனடியாக உங்கள் கருவியிலிருந்து நீக்கிவிடவும்.

இதன்மூலம் புதிய வைரஸ் உலா வந்து கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் சுமார் 10,000 பேரினது பேஸ் புக் கணக்குகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனை பேஸ்புக் நிறுவனம் பலமுறை சரிசெய்தாலும், மீண்டும் மீண்டும் வைரஸ் உண்டாவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது இந்த வைரஸ், பயனீட்டாளர்கள் தங்களது கணக்கின் நிறத்தை மாற்ற முடியும் என்ற செய்தியுடன் இருக்கும் செயலியின் விளம்பரமாகத் தொடங்குகிறது.

இதனைப் பதிவிறக்கம் செய்த பின், வைரஸுடன் கூடிய வலைதளத் திசை திருப்பப் படுகிறது. கணக்கில் எப்படி நிறம் மாற்றுவது என்பதை விளக்கும் காணொலியைப் பார்க்குமாறு கூறும் இந்த வலைதளம், பயனீட்டாளர்களின் கணக்கையும், பயன்பாட்டையும் திருடுகிறது.

ஒருவேளை பயனீட்டாளர் இந்த வீடியோவைப் பார்க்கவில்லையெனில், இந்த வலைதளம் அவர்களை வைரஸுடன் கூடிய செயலியைப் பதிவிறக்கம் செய்யுமாறு தெரிவிக்கிறது. எனவே உடனடியாக இந்த செயலியை நீங்கள் பதிவிறக்கம் செய்திருந்தால் அழித்து விட்டு, பேஸ்புக்கின் கடவுச் சொல்லை மாற்றவும் என்று சீனாவின் இணைய நிறுவனமான சீட்டா மொபைல் தகவல் வெளியிட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | 6 | 2 | | | 4 |
| | | 2 | 5 | 3 | 1 | | | |
| | 7 | | 4 | | | | 3 | 5 |
| | 1 | | | 4 | | | | 6 |
| 6 | | 7 | | | | 9 | | 1 |
| 3 | | | | 1 | | | 2 | |
| 7 | 8 | | | | 5 | | 1 | |
| | | | 1 | 7 | 3 | 5 | | |
| 9 | | | 8 | 2 | | | 6 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 6 | 8 | 3 | 9 | 4 | 5 | 1 |
| 8 | 5 | 3 | 1 | 7 | 4 | 2 | 6 | 9 |
| 9 | 4 | 1 | 2 | 5 | 6 | 3 | 8 | 7 |
| 4 | 2 | 5 | 7 | 6 | 8 | 9 | 1 | 3 |
| 3 | 8 | 7 | 9 | 1 | 5 | 6 | 2 | 4 |
| 6 | 1 | 9 | 3 | 4 | 2 | 8 | 7 | 5 |
| 5 | 6 | 8 | 4 | 9 | 7 | 1 | 3 | 2 |
| 1 | 9 | 2 | 5 | 8 | 3 | 7 | 4 | 6 |
| 7 | 3 | 4 | 6 | 2 | 1 | 5 | 9 | 8 |

## தேசிய தரக் கூடைப்பந்தாட்ட மைதானம் யாழ்ப்பாணத்தில்

யாழ். மாவட்டத்தில் தேசிய தரத்தில் கூடைப்பந்தாட்ட மைதானமொன்றை நிர்மாணிப்பது தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத்தை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டமாகப் பொது விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிப்பது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்பிரகாரம் நிர்மாணிக்கப்படவுள்ள பொது விளையாட்டு மைதானத்தைத் தேசிய தரத்தில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வும் ,கட்டம் கட்டமாக அதன் தரத்தை முன்னேற்றுவதற்கு விசேட கவனம் செலுத்தப் படுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கூடைப் பந்தாட்டத்துக்கென மைதானமில்லாதநிலையில்மாவட்ட விளையாட்டு வீரர்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர் நோக்கும் அதேவேளை. இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனடிப்படையில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மைதானத்துக்கான இடம் விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)



இலங்கைப் பல்கலைக்கழக அணிகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழக அணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் அருட் திரு கலாநிதி எஸ்.சொலமன் வெற்றிக் கிண்ணத்தை வழங்குகிறார். (த-86)

## கிழக்கு மாகாணம் வெற்றி

திருகோணமலை, ஒக. 12

பொத்துவில் அறுகம்பையில் 2014ஆம் ஆண்டுக்கான கடலலை நீர்ச் சறுக்கல் சாகச சம்பியன் போட்டியில் கிழக்கு மாகாண அணி சம்பியனானது.

பொத்துவில் அறுகம்பையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை இறுதிப் போட்டி மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

ரெட்புள் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தச் சுற்றுப் போட்டியில் தென் மாகாண மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 22 போட்டியாளர்கள் பங்கு பற்றினர்.

இந்தப் போட்டியில் 288 புள்ளிகளைப்பெற்று கிழக்கு மாகாண அணியினர் சம்பியனானது டன். தென்மாகாண அணி 143 புள்ளிகளைகளைப் பெற்று 02ஆம் இடத்தைப் பெற்றது.

சுற்றுலாத்துறையின் சொர்க்க புரியாக திகழும் பொத்துவில் அறுகம்பை குடா சேர்பிங் விளையாட்டுக்கு உலகில் 10 ஆவது இடத்தையும் தெற்காசியாவில் 03ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு போட்டியாளர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள் ளாதபோதிலும் இந்தச் சுற்றுப் போட்டியை கண்டு களிப் பதற்காக ஆயிரக்கணக்கான உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். (த)



# ஞானரூபனின் அசத்தல் கோல்களால் சம்பியனானது யாழ். பல்கலை அணி

வலி வடக்கு, ஒக. 12

ஞானரூபன் பெற்ற அதிரடியான கோல்களின் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உதைபந்தாட்ட அணி தேசிய மட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது:-

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.



இந்தப் போட்டியில் தென் கிழக்குப் பல்கலைக்கழக அணியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய சில நிமிடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வீரன் ஞானரூபன் தனது அணிக்கான முதலாவது கோலை போட்டு எதிரணிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தார்.

இந்நிலையில் போட்டி மிகவும் விறுவிறுப்படைந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி வீரர்கள் எதிரணியைக் கலங்கடிக்கும் வகையில் மோதிக்கொண்டனர். சற்றும் சளைக்காது தென் கிழக்கு பல்கலைக்கழக அணியும் எதிர்ப்பினை வெளிப் படுத்தியது. யாழ்.பல்கலைக் கழகத்துக்காக மீண்டும் ஒரு கோலை ஞானரூபன் பெற்றுக் கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வீரர்கள் தொடர்ந்து எதிரணியின் கோல்ப் பரப்பை ஆக்கிரமித்தனர். இதனால் கோல்கள் எதுவும் பெறப்படவில்லை.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் தென் கிழக்கு பல்கலைக்கழக அணியை வென்று தேசிய மட்டத்தில் சம்பியனானது.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும், தொடர் ஆட்டநாயகனாகவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வீரன் ஞானரூபன் தெரிவு செய்யப் பட்டார். (த-86)



## இன்றைய ஆட்டங்கள்



கரணவாய், ஒக.12

தும்பளை நற்கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் ஆதரவுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை றெஜின்போ மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகம். மாலை 4.30மணிக்கு உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் இளவாலையங்ஹென்றிஸ்விளையாட்டுக் கழகம். (த-108)



இலங்கைப் பல்கலைக்கழக அணிகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற கிழக்குப் பல்கலைக்கழக அணி பெற்றுக் கொண்டது. வயம்ப பல்கலைக்கழகத்துடனான மோதலில் கிழக்கு அணி வெற்றி பெற்றது. (த-86)

## யங்கம்பன்ஸ் அணியை தோற்கடித்தது றோயல்

கரணவாய், ஒக.12

பார்வையாளர்களின்கரகோஷத்துக்கு மத்தியில் பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை 3:2 என்ற கோல்கள் அடிப்படையில் தோற்கடித்தது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்.

தும்பளை நற்கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி வல்வை றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்று வருகின்றது.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் கம்பர்மலை, யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

தொடக்கம் முதல் இறுதி வரை பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில்13 ஆவதுநிமிடத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் ரதன் முதலாவது கோலைப் போட்டார். இதன் பின் இரு அணிகளும் கோல் போடுவதற்கு முயற்சித்த போதும் அது கைகூடாத நிலையில் 1:0 என்ற அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகியதும் வீறுகொண் டெழுந்த றோயல் அடுத் தடுத்து மூன்று கோல் களைப் போட்டு அசத்த யங்கம்பன்ஸ் அணியினர் சிறிது தடுமாற்றமடைந்தனர். இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி 2 ஆவது நிமிடத்தில்சிவனேசமும்8 ஆவதுநிமிடத்தில் கோபனும் 12 ஆவது நிமிடத்தில் சுஜந்தனும் றோயல் விளையாட்டுக்கழகம் சார்பாக கோல்களைப் பெற்றனர்.

இதனை அடுத்து தம்மைச் சுதாகரித்துக் கொண்ட கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணி வீரர் தர்சன் ஆட்டம் நிறைவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும்போது கோல் ஒன்றைப் போட்டபோதும் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. இறுதியில் 3:2 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் கரவைச் சுடர் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் உப்புச் சப்பில்லாமல் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 6:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது.

அந்த அணி சார்பாக ஜெகன், தவரூபன் ஆகியோர் தலா இரு கோல்களையும் திலீப், லக்சின் தலா ஒரு கோலையும் போட்டனர். (த-108)



# ராசியற்ற மைதானம்

மன்செஸ்டர் ஓல்ட் டிரபோர்ட்மைதானம் இந்திய அணிக்கு வரலாற்றில் ராசியில்லா மைதானமாகவே மாறிவிட்டது.

4ஆவது டெஸ்ட் போட்டியில், 2ஆவது இன்னிங்ஸில் 161 ஓட்டங்களுக்கு சுருண்ட இந்திய அணி, இன்னிங்ஸ் மற்றும் 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. இந்த மைதானத்தில் இந்திய அணிக்கு இது 4ஆவது தோல்வியாகும்.

டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி 14ஆவது முறையாக 3ஆவது நாளிலேயே தோல்வியை சந்தித்தது. இங்கிலாந்து மண்ணில் இது 6ஆவது முறையாகும்.

இந்திய அணிக்கு எதிராக இங்கிலாந்து 12ஆவது முறையாக இன்னிங்ஸ் வெற்றியை பதிவு செய்துள்ளது.

வெளிநாட்டு மைதானங்களில் இந்திய அணி கடைசியாக விளையாடிய 31 இன்னிங்ஸில், தொடக்க வீரர்கள் ஒரு முறை கூட முதல் இலக்குக்கு 50 ஓட்டங்களை எட்ட முடியவில்லை.

முன்னதாக, 2011இல் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த டெஸ்டில் கம்பீர் - அபினவ் முகுந்த் ஜோடி 63 ஓட் டங்கள் எடுத்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் ஸ்டூவர்ட் பிராட் 7ஆவது முறையாக ஆட்ட நாயகன் விருது பெற்றுள்ளார். ஓல்ட் டிரபோர்ட் மைதானத்தில் இந்திய அணியின் மோசமான ராசி தொடர்கிறது.

இங்கு விளையாடி உள்ள 9 டெஸ்ட் போட்டிகளில், இந்திய அணியால் ஒன்றில் கூட வெற்றி பெற முடியவில்லை. நான்கு தோல்விகளை சந்தித்துள்ள இந்தியா, 5 சமநிலை கண்டுள்ளது. (த)



# காஷ்மீர் எல்லையில் இந்திய ராணுவத்தை சந்தித்தார் ரெய்னா

இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா ஜம்மு-காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்திய ராணுவ வீரர்களைச் சந்தித்தார். சுரேஷ் ரெய்னா இந்தியாவின் அனந்த்நாக் மாவட்டத்தின் காஷ்மீரி பண்டிட் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் நேற்றுக் காலை காஷ்மீர் எல்லைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்திய ராணுவ வீரர்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடினார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக இந்திய ராணுவச் செய்தித் தொடர்பாளர் கலோனல் என்.என்.ஜோஷி செய்தியாளர்களிடம் கூறியதாவது. எல்லையில் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் ராணுவ வீரர்களுக்கு இவரது வருகை பெரும் உற்சாகம் அளித்துள்ளது. எல்லையில் ராணுவ வீரர்கள் சந்திக்கும் சவால்கள் குறித்து அவர்களுடன் உரையாடித் தெரிந்து கொண்டு நெகிழ்ந்த ரெய்னா, அவர்களது சாதனைகளை கைதட்டி வரவேற்றார் எனத் தெரிவித்தார். மேலும், ரெய்னாவும் சுவையான சில சொந்த அனுபவங்களை ராணுவ வீரர்களுடன் பகிர்ந்து கொண்டதாகவும், அவர்களுடன் உணவு அருந்திய ரெய்னா அவர்களது சமையலைப் பாராட்டியதாகவும் ஜோஷி கூறினார்.

இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ள ரெய்னா, எல்லையில் கடமை புரியும் ஒவ்வொரு ராணுவ வீரரையும் தான் மதிப்பதாகவும், அவர்களுடனான சந்திப்பு சிறந்த அனுபவமாக அமைந்தது என்றும் தெரிவித்துள்ளார். (த)

# சச்சினால் சர்ச்சை

வருகைப் பதிவு சர்ச்சையில் சிக்கியுள்ள மாநிலங்களவை உறுப்பினர் சச்சின் டெண்டுல்கர், நடப்பு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளமுடியாது என விடுப்பு கோரியிருந்தார். அவரது கோரிக்கையை ஏற்று மாநிலங்களவை அவருக்கு விடுப்பு அளித்துள்ளது. ஆனால் இதற்கு உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சச்சின் டெண்டுல்கர் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்வு செய்யப் பட்டதில் இருந்து 3 முறை மட்டுமே அவைக்கு வந்திருக்கிறார், மற்றொரு உறுப்பினர் ரேகா 7 முறை மட்டுமே அவைக்கு வந்திருக்கிறார். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடந்த வாரம் மாநிலங்களவை உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து, கடந்த வாரம் டில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட சச்சின் டெண்டுல்கர் தனது மூத்த சகோதரர் இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளவிருந்த காரணத்தால் தன்னால் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் கலந்து கொள்ள முடியவில்லை என விளக்கமளித்திருந்தார்.

இந்நிலையில், மாநிலங்களவையில் இன்று துணைத் தலைவர் பி.ஜெ.குரியன், சச்சினின் விடுப்புக் கடிதம் ஏற்கப்படுவதாக தெரிவித்தார்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்த சமாஜ்வாதி உறுப்பினர் நரேஷ் அகர்வால், சச்சின் நாடாளுமன்றத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள விக்யான் பவனில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள வந்திருக்கிறார், ஆனால் நாடாளுமன்றத்திற்கு வரவில்லை.இது அவர் அவையை மதிக்கவில்லை என்பதையே உணர்த்துகிறது என்றார்.

அதற்கு குரியன், அவையில் நிறைய உறுப்பினர்கள் பல்வேறு காரணங் களுக்காக விடுப்பு எடுக்கின்றனர்.ஆனால், யாருக்கு விடுப்பு அளிக்க வேண்டும், மறுக்கவேண்டும் என்பது அவைத் தலைவர் பொறுப்பு. இதற்கு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவிக்கமுடியாது என்றார். இதற்கு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர். இதனால் அவையில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. (த)



# இந்திய அணி முதுகெலும்பற்றது

இந்திய அணியின் வரலாறு காணாத தோல்வியால் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர் கடும் கோபத்தில் இருக்கிறார்.

இந்திய அணி மன்செஸ்டர் டெஸ்டில் யாரும் எதிர்பாராத மோசமான தோல்வியைத் தழுவியது. இதனையடுத்து இந்திய அணி அனைவரின் விமர்சனத்திற்கும் உள்ளாகியுள்ளது.

இந்த டெஸ்டின் தோல்வி குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர் விமர்சித்துப் பேசியுள்ளார்.


இது பற்றி அவர் கூறுகையில், கடந்த சில இன்னிங்ஸ்களில் இந்திய வீரர்கள் தலையைத் தொங்கவிட்டபடி வந்த காட்சிகளை மட்டும் தான் காண முடிந்தது.

இந்த டெஸ்டில் முதுகெலும்பு இல்லாதது போல் இந்திய வீரர்கள் விளையாடினர். சாதாரணமான பந்து வீச்சில் கூட இலக்குகளை பறிகொடுத்தனர். இது போன்ற நிலையில் அவர்கள் எப்படி போராடுவார்கள் என்று நினைக்க முடியும் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்து முன்னாள் அணித் தலைவர் மைக்கல் வோகன் கூறுகையில், ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு சாதகமாகவே இருந்தது. வேகப்பந்து வீச்சில் பந்து ஸ்விங் ஆகவில்லை.சுழற்பந்து வீச்சில் பந்து சுழன்று திரும்பவில்லை. இப்படிப்பட்ட நிலையிலும் கூட இந்திய வீரர்களால் இங்கிலாந்தின் பந்து வீச்சை சமாளிக்க முடியவில்லை.



அடுத்த இரு நாள்கள் மழை வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் கூறியிருந்த நிலையில், இந்திய அணி ஆடிய விதத்தை பரிதாபகரமானது என்று மட்டுமே வர்ணிக்க முடியும் என்று கூறியுள்ளார். (த)



# அன்டர்சனின் செல்லப் பிள்ளை

இங்கிலாந்து அணியில் ஒரே பந்து வீச்சாளரிடம் தொடர்ந்து ஆட்டமிழந்து அவரின் செல்லப்பிள்ளை ஆகிவிட்டார் விராட் கோஹ்லி.


இந்திய அணியின் இளம் வீரர் விராட் கோஹ்லி இந்த இங்கிலாந்து தொடரில் சொற்ப ஓட்டங்களே குவித்தார். பலரும் இவர் மேல் தொடர் நம்பிக்கை வைத்த போதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

மேலும் இங்கிலாந்து வீரர் அண்டர்சனின் பந்து வீச்சிலே தொடந்து விக்கெட் ஆகியுள்ளார். இந்த காரணங்களால் அவரை அன்டர்சனின் செல்லப் பிள்ளை என கூறுவதுண்டு.

நடப்பு டெஸ்ட் தொடரில் ஜேம்ஸ் அன்டர்சன் 30 பந்துகளை கோஹ்லிக்கு வீசியுள்ளார். ஆனால் அதில் 7 ஓட்டங்களையே விராட் கோஹ்லியால் எடுக்க முடிந்தது. ஆனால் 4 முறை அவரிடமே அதுவும் ஒரே விதத்தில் விக்கெட் ஆகியுள்ளார் விராட் கோஹ்லி.

அன்டர்சனை இவர் எதிர்கொண்ட 6 இன்னிங்ஸ்களில் 3 இன்னிங்ஸ்களில் கோஹ்லி அவரது பந்தில் 1 ஓட்டங்கள் கூட எடுக்கவில்லை.

மொத்தமாக 5 முறை கோஹ்லி, அன்டர்சனிடம் ஆட்டமிழந்துள்ளார்.10 இன்னிங்ஸ்களில் 30 ஓட்டங்களே அவருக்கு விட்டுக் கொடுத்துள்ளார் அன்டர்சன். (த)



## அஜ்மலின் பந்துவீச்சு குறித்து முறைப்பாடு

சந்தேகத்திற்கிடமான முறையில் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் வீசுகிறார் என்று ஐ.சி.சியிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக முடிந்த முதல் டெஸ்ட் போட்டிக்குப் பிறகு அவரது பந்து வீச்சு மீது சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஐ.சி.சி விதிமுறைகளின்படி அவர் 21 நாள்களுக்குள் பரிசோதனைக் கூடத்திற்குச் செல்லவேண்டும். ஆனால் அவர் தொடர்ந்து பந்து வீசலாம் என்று ஐ.சி.சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் மைதானத்தில் இருந்த ஆட்ட அதிகாரிகள் அஜ்மல் வீசிய பல பந்துகள் விதிமுறைகளை மீறியதாக உள்ளது என்று கூறியுள்ளனர்.

இந்த புகார் அறிக்கையை பாகிஸ்தான் அணி மேலாளர் மொயின் கானுக்கும் அனுப்பியுள்ளனர்.

இது அஜ்மல் மீதான 2ஆவது புகாராகும். முன்னதாக 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவரது தூஸ்ரா பந்து வீச்சு மீது புகார் எழுப்பப்பட்டு பின்பு அவரது பந்து வீச்சு முறையாக இருப்பதாக தீர்ப்பளிக்கப்பட்டது. (த)

## காதலருடன் சேர்ந்து ஆடுவதற்கு தயாரா?



பிரபல ரென்னிஸ் வீராங்கனை ஷரபோவா, இவரது காதலர் கிரிகர் டிமிட்ரோவுடன் சேர்ந்து ஏன் கலப்பு இரட்டையர் போட்டிகளில் விளையாடக் கூடாது என்ற கேள்வி எழுந்துள்ளது.

சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் 6ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா, கிராண்ட்லாம் தொடர்களில் 5 முறை பட்டம் வென்று அசத்தியவர்.


ஒற்றையரில் மட்டும் கவனம் செலுத்தும் ஷரபோவா, கடந்த ஆஸ்திரேலிய ஓபனில் 2003, 2004, யு.எஸ்., ஓபனில் 2003 என, மூன்று முறை பெண்கள் இரட்டையரில் பங்கேற்று விளையாடினார்.

பல்கேரிய ரென்னிஸ் வீரர் மற்றும் ஷரபோவாவின் காதலர், கிரிகர் டிமிட் ரோவ் உலகின் வீரர்கள் பட்டியலில் 8ஆவது இடத்தில் இருக்கிறார். பயிற்சி பெரும் போது இருவரும் களத்தில் இணைந்து கலக்குவர்

இதனிடையே உலகத் தர வரிசையில் முன்னிலையில் உள்ள இவர்கள் ஏன் இரட்டையர் போட்டிகளில் பங்கேற்கக் கூடாது என்று எழுந்த கேள்விக்கு ஷரபோவா பதிலளித்துள்ளார்.

இதுகுறித்து ஷரபோவா கூறுகையில், பொதுவாகப் பயிற்சியின்போது இருவரும் இணைந்து தான் செயல்படுகிறோம். கலப்பு இரட்டையரில் பங்கேற்பது குறித்து. டிமிட்ரோவ் என்னிடம் கேட்டுள்ளார்.

என்னை விட அவர் திறமையான வீரர். அவருடன் விளையாடி எனக்கு நானே தவறு செய்து கொள்ள விருப்பம் இல்லை. கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் இதை பெரும்பாலும் நான் விரும்புவதில்லை என்று கூறியுள்ளார். (த)



## தினேஷ் கார்த்திக்கை மட்டும் விரும்புகிறேன்

தினேஷ் கார்த்திக்கைத் தவிர அனைத்து கிரிக்கெட் வீரர்களையும் நான் வெறுக்கிறேன் என்று ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிகல் தெரிவித்துள்ளார்.

பிரபல நாளிதழ் ஒன்று நடத்திய மகளிர் மாநாடு மற்றும் விருது விழாவில் ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிகல் கலந்துகொண்டுள்ளார்.

அப்போது அவர் கூறுகையில், கிரிக்கெட் அனைத்து விளையாட்டுக் களையும் அழித்துவிட்டது, மற்ற விளையாட்டுக்களின் பெருமைகளையும், புகழையும் கிரிக்கெட் அழித்துவிட்டது.

மற்ற விளையாட்டுக்களின் புகழையும், பெருமைகளையும், கௌரவத்தையும் கிரிக்கெட் வீரர்கள் திருடி விடுகிறார்கள். தினேஷ் கார்த்திக்கைத் தவிர அனைத்து கிரிக்கெட் வீரர்களையும் நான் வெறுக்கிறேன்.

மேலும், விளையாட்டில் பெண்களுக்குப் பாரபட்சம் இழைக்கப்படுவது உண்மைதான். இந்தியாவில் ஸ்குவாஷ் விளையாட்டுக்கான சரியான பயிற்சி இடம் இல்லாததால், 14 வயதில் நான் எகிப்துக்குப் போக நேரிட்டது. அதை நான் வெறுத்தேன், ஆனால் நான் என்னை நிரூபிக்க. தீவிரமாக பயிற்சி எடுத்ததால் அது என்னை உறுதியாக்கியுள்ளது.

மேலும், இன்றைய சாதனைகளுக்கு அதுதான் முக்கிய அஸ்திவாரமாக அமைந்தது என்றும், நான் நாட்டுக்காக விளையாடுகிறேன், அதை விட எனக்கு வேறு பெருமை தேவை இல்லை என்று தெரிவித்துள்ளார். (த)

## உலகக் கிண்ணத்தில் இறங்கி கலக்குவேன்



ராஞ்சி கிண்ணப் போட்டிகளில் அசத்தி அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் களமிறங்குவேன் என இந்திய வீரர் ரொபின் உத்தப்பா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சமீபத்தில், ஆஸ்திரேலியாவுக்கு சென்ற இந்திய ஏ அணியில் இடம்பெற்றிருந்த இவர், பெரிய அளவில் சோபிக்கவில்லை. ஆனால் இந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல்., தொடரில் அசத்திய இவர் 660 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்மூலம் ஐ.பி.எல்., வரலாற்றில், ஒரு தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார். இதனையடுத்து இவர் அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ண தொடர் பற்றி கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரொபின் உத்தப்பா கூறுகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந்த உள்ளூர் தொடர்களில், சிறப்பாக செயல்பட்டிருப்பதால், அடுத்து வரும் போட்டிகளிலும் சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவதை இலக்காக கொண்டுள்ளேன். இதற்காக, அடுத்து வரவுள்ள ராஞ்சிக் கிண்ணம் உள்ளிட்ட உள்ளூர் போட்டிகளில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த உள்ளேன்.

ராஞ்சி கிண்ணத் தொடரில், நடப்பு சம்பியன் அந்தஸ்துடன் கர்நாடகா அணி களமிறங்குவதால், அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

தவிர எங்கள் பிரிவில், மும்பை, தமிழகம், உத்தர பிரதேசம் என பலம் வாய்ந்த அணிகள் இடம் பெற்றிருப்பதால், ஒவ்வொரு போட்டியும் சவால் நிறைந்ததாக இருக்கும்.


இருப்பினும், கடந்த ஆண்டைக் காட்டிலும் இம்முறை சிறப்பாக செயல்பட்டு, நடப்புச் சம்பியன் அந்தஸ்தைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சிப்போம்.

இதன் மூலம் அணித் தேர்வாளர்களை என் மீது திசை திருப்ப முயற்சிப்பேன். எனது திறமை மீது அதிகளவு நம்பிக்கை இருப்பதால், உலகக்கிண்ணத்திற்கான இந்திய அணியில் நிச்சயம் இடம் பிடிப்பேன் என்று கூறியுள்ளார். (த)

## டோனியின் மோசமான 13 டெஸ்ட்

டோனி தலைமையில் இந்திய அணி வெளிநாட்டில் 13 டெஸ்ட் தோல்விகளை சந்தித்துள்ளது.

1. இலங்கையிடம் 10 இலக்குகளால் தோல்வி (காலி, 2010).
2. தென்னாபிரிக்காவிடம் இன்னிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்களால் தோல்வி (செஞ்சூரியன், 2010).
3. இங்கிலாந்திடம் 196 ஓட்டங்களால் தோல்வி (லார்ட்ஸ், 2011).
4. இங்கிலாந்திடம் 319 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி (நாட்டிங்காம், 2011).
5. இன்னிங்ஸ் மற்றும் 242 ஓட்டங்களால் இங்கிலாந்திடம் தோல்வி (பர்மிங்காம், 2011).
6. இங்கிலாந்திடம் இன்னிங்ஸ் மற்றும் 8 ஓட்டங்களால் தோல்வி (ஓவல், 2011).
7. 128 ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி (மெல்போர்ன், 2011).
8. இன்னிங்ஸ் மற்றும் 68 ஓட்டங்களால் ஆஸ்திரேலியாவிடம் தோல்வி (சிட்னி, 2012).
9. ஆஸ்திரேலியாவிடம் இன்னிங்ஸ் மற்றும் 37 ஓட்டங்களால் வீழ்ந்தது (பெர்த், 2012).
10. 298 ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி (அடிலெய்ட், 2012).
11. நியூசிலாந்திடம் 40 ஓட்டங்களால் தோல்வி (ஆக்லாந்து, 2014).
12. இங்கிலாந்திடம் 266 ஓட்டங்களால் தோல்வி (சவுத்தம்டன், 2014).
13. இன்னிங்ஸ் மற்றும் 54 ஓட்டங்களால் இங்கிலாந்திடம் வீழ்ந்தது (மான்செஸ்டர், 2014).



## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஓக.12
நாவாந்துறை புனித மரியாள் ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெற்று வருகின்றன.
நற்கருணைப் பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5.15 மணிக்கும், திருவிழா திருப்பலி மறுநாள் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கும் இடம்பெறும்.
அன்று மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப பவனி கிராம வீதிகள் வழியாக இடம்பெற்று சொரூப ஆசீரும் வழங்கப்படும். (க-135)

◆◆◆

கொழும்புத்துறை, ஓக.12
யாழ். புனித மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெற்று வருகின்றன.
நற்கருணைப் பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கும், மரியாளின் விண்ணேற்புத் தினமாகிய மறுநாள் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் திருப்பலி காலை 5.30 மணிக்கும், பெருவிழாக் கூட்டுத்திருப்பலி காலை 6.45 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும்.
திருச்சொரூப ரத பவனி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி வீதிகள் வழியாக வலம் வந்து திருச்சொரூப ஆசீர் இடம்பெறும். (க-135-173)

◆◆◆

தெல்லிப்பழை, பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 21 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)



உலக உணவுத் திட்டத்தின் இலகு வேலைத்திட்டத்தில், வேலணை வடக்கு கிராமத்தைச் சேர்ந்த பயனாளிகளால் பாதசாரிகள் போக்குவரத்துக்கு இடையூறாக வேலணையில் உள்ள மயிலப்புலம் வீதியின் இரு மருங்கிலும் உள்ள பற்றைகளை வெட்டி துப்புரவு செய்யப்பட்டன. (வ)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.12
அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-
தலைவராக ஓய்வுநிலை அரச அதிபர் ஜீ.ஏ.ஜே.சில்வெஸ்ரர் (புத்தளம்), உப தலைவர்களாக வி.ஸ்ரீசக்திவேல் (யாழ்ப்பாணம்), டபிள்யூ.வி.ஜயமானே (மாத்தறை), மேர்வின் பெரேரா (பலாங்கொடை), செயலாளராக எஸ்.வி.இரத்நாயக்கா (நுவரேலியா), உப செயலாளராக டி.ஏ.நந்தசேன(கொழும்பு), பொருளாளராக எம்.வி.மடுகல்ல(கண்டி) ஆகியோரும் - மாவட்டச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-11)

## யாழ்.மாவட்ட மாற்றுவலுவுடையோர் சுய உதவிக் குழுவின் நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்.மாவட்ட மாற்றுவலுவுள் ளோர் சுய உதவிக் குழு ஆரம்ப நிகழ்வு அண்மையில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் சமூக சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் குமேஸ் துஷாரா நாகண்டலவும், சிறப்பு விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் வ.சுரேஷ்குமாரும் கலந்து கொண்டனர்.
ஆரம்பக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர் - ந.தர்மராசா, உப தலைவர்-கு.குகராசா,செயலாளர் - திருமதி ப.கணேஸ், உதவிச் செயலாளர் கணேசலிங்கம் கல்பனா, பொருளாளர் க.சகாயராசா இவர்களுடன் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-9)

## மாணவன் விபத்தில் காயம்

தென்மராட்சி, ஓக. 12
வீதி வளைவில் பயணித்தபோது கட்டுப்பாட்டை இழந்த வானொன்று எதிரே வந்த சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்த பாடசாலை மாணவனொருவன் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சங்கத்தானை முருகன் கோயிலுக்கு அருகில் இடம்பெற்றது.
மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த கோபிந்தன் டிலக்ஸன் (வயது - 16) என்ற மாணவன் ரியூசனுக்கு வந்தவேளையில் விபத்துக்குள்ளாகி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

**பந்தல் விற்பனைக்குண்டு**
சொக்கட்டான், வில்லுப்பந்தல்
தொடர்பு: 076 540 8095
(50766) (4.8.3)

**வீடு வாடகைக்குண்டு**
யாழ். விக்ரோறியா வீதியில்
ரைல்ஸ் பதிக்கப்பட்ட மூன்று
அறை உள்ள வீடு
வாடகைக்குண்டு.
Doctor or நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:078 818 4204

**விற்பனைப் பிரதிநிதி தேவை**
உணவு மற்றும் எண்ணெய் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு(FMCG) வட மாகாணத்தில் விற்பனை விநியோகம் செய்வதற்கு இந்தத் துறையில் இரண்டு (2) வருடத்துக்குக் குறையாத விற்பனை அனுபவம் உள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை.
சம்பளம், மேலதிக படி, கமிஸன் வழங்கப்படும்.
வயது: 25-40
தொடர்பு: 076 617 9813 (50761) (4.8.3)

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை பத்மராசா

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பத்மராசா 04.08.2014 திங்கட்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மனோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், தவமலர், கனகராசா, செல்வராசா, பத்மாவதி, யோகராசா, காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் நடராசா, யோகேஸ்வரி, புனிதவதி, புனிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(13.08.2014) புதன்கிழமை பி.ப.2.00 மணியளவில் புகையிரதநிலைய வீதி, கொடிகாமத்தில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொடிகாமம் கட்டைபறித்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரதநிலைய வீதி,
கொடிகாமம்.
(5050756) (12.3.6)

தகவல்: க.தனபாலசிங்கம்
(மைத்துனர் - மெக்கானிக் மணியம்).

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும்
திருமதி கவிதா சிவனேஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை

**சிவக்கொழுந்து தங்கராசா**

09.08.2014அன்று காலமானார்.
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் கழகம் (50765) (12.3.6)
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04.05.1929

மறைவு
01.08.2007



திதி: 12.08.2014

அமரர் கலாநிதி
**அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை B.A., FCA.**
(பட்டயக் கணக்காளர்)
(முன்னாள் பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம்,
முன்னாள் போஷகர், ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

எமது மன்றத்தின் போஷகராக இருந்து எம்மை வழிநடத்திய
அமரர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை அவர்களின்
தன்னலம் கருதாச் சேவையினை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

திருமதி நளாயினி மூர்த்தி
(மகள்-கனடா)

(C16012)(10,6,3)

நிர்வாகம்,
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

# கடும் வறட்சியின் காரணமாக மீனவர் வாழ்வாதாரம் பாதிப்பு

## மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்களம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.12
கடும் வறட்சியால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 25,000 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டுள்ளன. தற்போதைய வறட்சி யால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டொமினிகோ ஜோர்ஜ் தெரிவித்துள்ளார்.

ஆறு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியால் 16 லட்சத்து 20 ஆயிரத்து 600 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

நான்கு லட்சத்து 68 ஆயிரத்து 329 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நிலையத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா, தென் மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களே வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. வறட்சியினால் மட் டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு லட்சத்து 52 ஆயி ரத்து 673 பேர் பாதிக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# சாவு வீடு சென்றவர்கள் விபத்தில் சிக்கிக் காயம்

மட்டக்களப்பு, ஓக.12
மட்டக்களப்பு - வெள்ளை மதகடியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளதோடு, எருமை மாடு ஒன்று உயிரிழந்துள்ளது.

மரப்பாலம் கிராமத்தில் நேற்று அதிகாலை காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஜோசப் நாகம்மா (வயது 65) என்பவர் உயிரிழந்தார். இந்த சம்பவத்தை கேள்விப்பட்ட வவுணதீவிலுள்ள அவரது உறவினர்கள், வாகனம் ஒன்றில் மரப்பாலம் கிராமத்துக்கு சென்று கொண்டிருந்த போது, வீதிக்கு குறுக்கே பாய்ந்த எருமையுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

விபத்தில் அன்ரனி மரியதாஸ் (வயது 30), அன்ரனி மனோரஞ்சிதம் (வயது 55), இந்திரநாதன் மனோன்மணி (வயது 52), சதாசிவம் இந்திரநாதன் (வயது 56) ஆகியோர் காயமடைந்ததாக கரடியனாறு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் கே.சுகுமார் தெரிவித்தார்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## ஹெரோயின் மீட்பு

ஏறாவூர், ஓக.12
ஏறாவூர் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட குமாரவேலியார் கிராமத்தில் நேற்று முன்தினம் சுமார் நாலரை இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது என்று ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி தீப்தி விஜேவிக்ரம தெரிவித்தார்.

ஏறாவூரைச் சேர்ந்த சாஹூல் ஹமீட் என்பவரே சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சைக்கிள் ஒன்றில் சொப்பிங் பையில் இந்த ஹெரோயினை விற்பனைக்காக எடுத்துச் சென்றபோது போதைப்பொருள்வியாபாரியுடன் சேர்த்து ஹெரோயினையும் கைப்பற்றியதாக அவர் தெரிவித்தார்.

22 கிராம் நிறையுடைய இந்த ஹெரோயின் நாலரை இலட்ச ரூபாய் மதிப்புடையது என்று கைது செய்யப் பட்டுள்ள போதைப் பொருள்வியாபாரியின் தகவல் மூலம் தெரிய வந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற)

**Athavan Mandapam & Rest.**
Market Lane, Avarangal.

**பதவி வெற்றிடம்**

* காசாளர், * வரவேற்பாளர், * சமையற்காரர்

தொடர்புகளுக்கு: 077 843 1390

(E.P.F, E.T.F உரித்துண்டு) (Г/16017) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி மங்களேஸ்வரி பத்மநாதன்

நீர்வேலி வடக்கு, கேணியடி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி மங்களேஸ்வரி பத்மநாதன் அவர்கள் நேற்று (11.08.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கேணியடி ஒழுங்கை**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

தகவல்:
**தம்பு பத்மநாதன் (கணவர்).**

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியர் செல்வி ஜேம்ஸ் றொங்லி மொனிக்கா மரியநாயகம் அவர்களின் சகோதரி

**செல்வி ஜேம்ஸ் றீற்றா மரியமங்களம்**

இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின் றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.
மல்லாகம். (50780) (10)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்



### திருமதி தவமணி தம்பிராசா

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மஞ்சத்தடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணி தம்பிராசா நேற்று (11.08.2014) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்:
கர.தம்பிராசா (ஆசிரியர்) கணவர். (50781) (10)

**Personal Class**

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கும், Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாடங்களுக்கும் ஒழுங்கு செய்து தரப்படும்.
தாவடி தெற்கு, தாவடி. (50776) (10.6)
T.P: 072 599 5167 (பிரபல ஆசிரியர்)

**தேவை**

பெண் நோயாளர் ஒருவரை கொழும்பு வீடொன்றிலிருந்து பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
சம்பளம் : 20,000/=
தொடர்பு: 077 774 6286 (50775) (10.6)

**தேவை**

பாவித்த சீற், மரம் அல்லது தகரக் கொட்டகை தேவை.
T.P: 077 180 7672 (55779) (10)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 633 3133 (50778) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகாம்பிகா உதயகுமார்

(ஆசிரியை, அச்சுவேலி மத்திய கல்லூரி)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் நெல்லியோடை, அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகா உதயகுமார் நேற்று (11.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் திருமதி சின்னம்மா தம்பதியரின் மருமகளும் உதயகுமாரின் பாசமிகு மனைவியும் தரங்கினி, சைந்தவி, பிருந்தாபன் (அச்சுவேலி ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற Dr து.துரைராஜசிங்கம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் சகோ தரியும் செல்வராஜா, செல்வராணி, புஷ்பராணி, தவராணி, சசிகரன், கனகேஸ்வரி, காலஞ்சென்ற யோகராசா ஆகியோரின் மைத்துனியும் நிஜேந்திரா, ஆரபி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு,அச்சுவேலி.

தகவல்:
**மா.உதயகுமார் (கணவர்).**

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் கம்சானந்தி (கம்சா)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கம்சானந்தி கடந்த (10.08.2014) ஞாயிற்றுக் கிழமை காலமனார்.

அன்னார் லண்டனில் வசிக்கும் க.பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் திரு.திருமதி லவேந்திரநாதன் - வாலாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கந்தவனம் (ஆங்கில ஆசிரியர்), திருமதி கந்தவனம் வள்ளிநாயகி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமசிங்கம் (செட்டியார்) மகேஸ்வரி தம்பதியரின் அன்புப் பேர்த்தியும், கார்தீபன், முகுந்தீபா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கம்சரூபன், மயூரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிகிலேஸ், அருனேஸ் ஆகியோரின் பாசமிகு அத்தையும், திரு. திருமதி சொர்ணவடிவேல் (உரிமையாளர்-கதிர்காமசிங்கம் சன், அளவெட்டி) சாரதா ஆகியோரின் அன்பு மருமகளும், திரு.திருமதி கருணாகரன் ஜெயசோதி திரு.திருமதி Dr. கணே சரட்ணம் (UK), சிறீறங்கம், ஜெயசிங்கநாதன் ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2014) மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/16020)(10)

**தகவல்: குடும்பத்தினர்.**

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த (15.07.2014)
செவ்வாய்க்கிழமை அன்று
இறைபதமடைந்த
அமரர்
**மாணிக்கம் குணசேகரம்**
திதி: சதுர்த்தி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (12.08.2014) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 14.08.2014 வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோயிலடி, அராலி தெற்கு. (50777)(10) குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### இலங்கைக்கு

கைக்கு வெளியே உள்ளன. இந்த விடயங்களை விசாரணைக்குழு திரட்டிக்கொள்ளும். விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்காமல் விடுவதால் எமக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. திரட்டிய ஆதாரங்களை உறுதிசெய்வதிலேயே விசாரணை அறிக்கையின் நம்பகத்தன்மை தங்கியுள்ளது.

வடகொரியா, சிரியாவிற்குள் ஐ.நா. விசாரணை குழு செல்லாவிட்டாலும் விசாரணைகளின் நம்பகத்தன்மையை அந்த இரு நாடுகளையும் தவிர வேறு எவரும் கேள்வி கேட்கவில்லை. இலங்கை விவகாரம் இதனை விட வித்தியாசமாக இருக்கும் என்று நான் கருதவில்லை.

இதேவேளை கவலையளிக்கத்தக்க விதத்தில் விசாரணைக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காக சில பிழையான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இந்தியாவும், தாய்லாந்தும் விசாரணையாளர்களுக்கு நுழைவிசைவு வழங்க மறுத்தன என்று ஊடகங்களில் திட்டமிடப்பட்டு செய்திகள் பரப்பப்பட்டுள்ளன. இவை பொய்யானவை. இலங்கைக்கோ அல்லது வேறு எந்த நாட்டிற்கோ விசாரணையாளர்கள் எவரும் விசா கோரவில்லை.

விசாரணைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆலோசனைக் குழுவினர் குறித்து இலங்கை ஊடகங்கள் பிழையான உண்மைக்கு புறம்பான தனிப்பட்ட தாக்குதல்களை முன்னெடுத்துள்ளன.

போர்க் குற்ற மீறல்களுக்கு காரணமானவர்களை கண்டறிவதற்கும் பொறுப்பாளிகளாக்குவதற்கும் இந்த விசாரணைகள் அவசியமானவை.

இலங்கையர்கள் அனைவருக்கும் நன்மையளிப்பதற்காகவும், நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான வழிவகையாகவும் இந்த விசாரணைகள் ஏற்படுத்தப்பட்டன என்பதை புரிந்துகொள்வது அவசியமானது. இந்த அடிப்படையிலேயே ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவால் ஆணையிடப்பட்ட விசாரணையை பார்க்க வேண்டும். மோதல் கண்ணோட்டத்தில் அணுகக் கூடாது"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-5)

### பிழையான

பாட்டங்களும் இடம்பெறவில்லை எனினும், அமெரிக்கா அவ்வாறு குறிப்பிட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

காஸா நிலவரத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை அரசியல் கட்சியொன்றே ஏற்பாடு செய்தது. அது மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றது. இலங்கையில் மேற்குலகிற்கு எதிரான உணர்வுகள் அதிகரிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஆனால், இந்தக் கருத்துக்கான அடிப்படை என்னவென்று தெரியவில்லை. இவ்வாறு உணர்வுகள் அதிகரிப்பதற்கான அடிப்படைக் காரணம் என்னவென அமெரிக்கா ஆராய வேண்டும்.

இலங்கையின் இராஜதந்திரிகள் அவர்களது குடும்பத்தினர் உடைமைகள் என்பவற்றை பாதுகாக்க வியன்னா பிரகடனத்தின்படி சட்டம், ஒழுங்கு பேணுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். பெருமளவு அமெரிக்கப் பிரஜைகள் இலங்கையில் வாழ்கின்றனர். மேலும் பலர் வந்து செல்கின்றனர். அவர்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாக எந்தத் தகவலும் இல்லை - என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(ந-சி)

### 10 லட்சம்

வரைப் பொலிஸார் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்திருந்தனர். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அந்த நாணயத்தாள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் கூறியிருந்த நிலையில் மீண்டும் அவ்வாறான போலி நாணயத்தாள் கைப்பற்றப்பட்டுள்ளது.

(ந-4)

### பங்குத்தந்தைக்கு

பின்னர், மன்னார் காட்டுப் பகுதிக்குள் தப்பி வாழ்ந்து கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தனது மகனை, மடுத் தேவாலயத்துக்கு அழைத்து வந்த ஒருவர் தேவாலயத்தின் அருட்தந்தை டெஸ்மன் கிளாஸிடம் ஒப்படைத்திருந்தார். அவர் அந்தப் பகுதிக்கு பொறுப்பாக இருந்த இராணுவ பொறுப்பதிகாரியிடம், தேவாலயத்தில் வைத்து சரணடையச் செய்திருந்தார்.

அதன் பின்னர் எனது மகன் தொடர்பில் நான் அறிந்து தேவாலயத்துக்கு வந்த போது, அருட்தந்தை நடந்த விடயங்களைத் தெரிவித்தார். 2011 ஆம் ஆண்டு மடுத் தேவாலயத்துக்கு குறித்த இராணுவ அதிகாரி வந்த போது, அருட்தந்தை அவரிடம், சரணடைந்தவர் தொடர்பில் கேட்டுள்ளார். இதன் போது அவரை உரிய இடத்தில் ஒப்படைத்து விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்குச் சாட்சியாக அருட்தந்தையால் குறித்த இராணுவ அதிகாரியிடம் எழுத்துமூலமான கடிதம் பெறப்பட்டது. அது இப்போது என்னிடம் உள்ளது என்று குறித்த தாயார் தெரிவித்தார்.

அதையடுத்து ஆணைக்குழுவினர், குறித்த இராணுவ அதிகாரி எங்குள்ளார் என்பதை அறிந்து விசாரணை மேற்கொள்வதாகத் தெரிவித்தனர்.

(ந-5)

### வேறு

"போரின் இறுதிக் கட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்களை சரணடையுமாறும் அவ்வாறு சரணடைந்தால் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்றும் இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

அதனையடுத்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி, அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் (மைக்கல்) அவர்களின் உதவியுடன் 40 விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் முல்லைத்தீவு பகுதியில் சரணடைந்தனர். இதில் எனது கணவர் அந்தோனி இராயப்புவும் (வயது-43) சரணடைந்தார்.

அதன்பின் வட்டுவாகல் பகுதியிலுள்ள பாடசாலை முகாமில் கம்பிக்கூட்டில் அடைத்து வைத்தார்கள். அதன்பின் இதுவரை அவரை காணவில்லை. அவரை தேடி பல முகாம்களுக்கு சென்றேன். இருந்தும் அவரை காண முடியவில்லை. பொலிஸ் நிலையம் மற்றும் மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றில் பல முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளேன். யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் சில தளபதிகள் மற்றும் உறுப்பினர்கள் விடுலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் எனது கணவர் மட்டும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று கூறியதனாலேயே அவர் சரணடைந்தார். அவருடன் சரணடைந்த 40 பேருக்கும் என்ன நடந்தது என்பது இன்றுவரை தெரியவில்லை. பல கஷ்டங்களுக்கு மத்தியில் நான் வாழ்ந்து வருகிறேன். ஒரு முறையாவது அவரை பார்த்தால் எனக்குப் போதும்.

தற்போதைய சூழலில் சிலர் மது போதையில் எனது வீட்டிற்கு வந்து, அவர் வந்திட்டாரா? அவர் எங்கே என சொல்லி என அச்சுறுத்தி வருகிறார்கள். நான் முச்சக்கர வண்டியில் சென்றால் முச்சக்கர வண்டி சாரதியை ஏன் ஏற்றி சென்றாய்? எங்கே கூட்டி சென்றாய்? என்று அச்சுறுத்தி வருகிறார்கள். எனது வீட்டிற்கு வருபவர்கள் அச்சுறுத்தி வருகிறார்கள் வரவர நான் மிகவும் பயத்தில் வாழ்ந்து வருகிறேன்.

எனவே எனது கணவர் நிச்சயமாக இருக்கிறார். அவரை விடுதலை செய்ய வேண்டும்"- என்று அவர் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவிக்கையில் -

உங்களைச் சில ஆணைக் குழு அதிகாரிகள் பார்ப்பதற்கு வருவார்கள். அவர்களுக்கு ஒத்துழையுங்கள் அதன் மூலம் கணவரை கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இவ்வாறு பல வாக்குறுதிகள் ஏற்கனவே எனக்கு வழங்கப்பட்டு இதுவரையில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எனக்கு எதுவித உதவிகளும் வேண்டாம் எனவே எனக்கு எனது கணவரை ஒரு முறையாவது பார்த்தால் போதும். இராணுவத்தினரே அவரை வைத்துள்ளனர். எனவே அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்று இராயப்பு மிரேனியா தெரிவித்தார். (ந-5,56)

### திருக்கேதீஸ்வரம்

தார். எல்லா இடமும் தேடியும் கிடைக்கவில்லை. தொழிலுக்காக கடலுக்குச் சென்ற எனது மகன் கடலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுத் தலைமன்னார் கடற்படை முகாமில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டவர்கள் எங்களிடம் தெரிவித்தனர். ஆனால் நாங்கள் அங்கு சென்று கேட்டும் இல்லை என்று கூறிவிட்டனர்.

இவ்வாறு இருக்கும்போது மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் மனிதப் புதைகுழி ஒன்று தோண்டப்பட்டது. அதனையறிந்த எனது மனைவி அதற்குள் எங்கள் பிள்ளையும் இருக்கலாமோ என்று யோசித்து, யோசித்து மனநோயாளியாகி விட்டார். எனது பிள்ளை எங்கு இருக்கின்றார் என்பதைக் கண்டு பிடித்து தாருங்கள் - என்றார்.

(த-5)

### ஒன்பது

பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று நீதிவானிடம் முற்படுத்தப்பட்டபோது அவரை 25 ஆயிரம் ரூபா சொந்த ஆள் பிணையில் செல்ல நீதிமன்று உத்தரவிட்டது. எனினும் நேற்று எவரும் பிணை எடுக்கச் செல்லாதமையால் அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-4)

### ஜெயலலிதாவை

பின்னரே தனது நியமனம் குறித்து தீர்மானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு முடிவடைந்து ஒரு வாரத்துக்குப் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னை அழைத்து எனது நியமனம் குறித்துத் தெரிவித்தார். அவர் இந்தியாவை நோக்கி நாங்கள் எங்கள் நேசக்கரங்களை நீட்டவேண்டும் என கருதியிருக்கலாம். எனது வருகையின் பின்னர் இரு தரப்பு உறவுகளில் சாதகத்தன்மை அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த)

### நோயாளரை

அத்துடன் தூர இடங்களிலிருந்து வரும் மக்கள் தற்போதைய கடும் வெயிலிற்கு மத்தியில் கால் கடுக்க வீதியோரங்களில் நிற்பதனையும் காணக்கூடியதாக இருப்பதோடு, நுழைவாயில் பகுதியில் மக்கள் தங்குவதற்காகக் கொட்டகை அமைக்கப்பட்டும் இன்று வரை மக்களின் பாவனைக்கு அனுமதி வழங்கப்படாமல் இருப்பதும் கவலை அளிக்கின்றது.

எனவே இவற்றிற்கு தாங்கள் உரிய தீர்வினை பெற்றுக் கொடுக்கவேண்டும் - என்றுள்ளது.

(த-86)

### காரைநகர்

படாத இடத்தில் கடலில் இறங்கியவேளையில் நீரில் மூழ்கியுள்ளார். இதனை அவதானித்த ஏனையவர்கள் கூக்குரலிட்டதைக் கேட்டுக் கடற்கரைப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸார் உடனடியாகக் கடலில் குதித்து நீந்தி அவரைக் கரைக்குக் கொண்டுவந்துள்ளார்கள்.

உடனடியாக அவரை காரைநகர் வலந்தலை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று முதலுதவியளித்துவிட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றவேளை இடைவழியில் அவர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மட்டக்களப்பு, 32/3 கொழும்பு வீதியைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை அலோசியஸ் (வயது-66 )என்பவராவார்.

இவருடைய சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-86)

### சகபாடிகளை

மீட்டுத் தருவதாக உறுதியளித்தார்.

இதனையேற்று அந்தப் போராட்டத்தை கைவிட்ட மீனவர்கள், வேலை நிறுத்தப் போராட்டத்தை மட்டும் தொடர்ந்து வந்தனர்.

ஆனால், இந்தப் பிரச்சினையில் எந்த வித முன்னேற்றமும் காணப்படவில்லை. இதனை தொடர்ந்து இராமேஸ் வரத்தில் நேற்றுமுன்தினம் மீனவர் சங்கங்கள் கூடி ஆலோசனை நடத்தின.

இந்தக் கூட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமைக்குள் மீனவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் நாளை (13ஆம் திகதி) முதல் சாகும்வரை உண்ணாவிரத போராட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. தங்கச்சி மடத்தில் நடைபெறும் இந்த போராட்டத்தில் அனைத்து மீனவர்களும் குடும்பத்துடன் பங்கேற்பது என்றும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

(த)

### சிவில்

யாழ். கொழும்புத்துறைப் பகுதியில் வைத்து நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் அண்மையில் சிவில் பாதுகாப்புப் படையில் இணைந்து கொண்டுள்ளார். அவர் அதற்கு முன்னரான காலப்பகுதியில் வேறு சிலருடன் முரண்பாடுகளைக் கொண்டிருந்துள்ளார். சிவில் பாதுகாப்பு உறுப்பினர் என்ற காரணத்தை வைத்து அவர் தற்போதும் அவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளாரா என்பது தமக்கு இன்னும் தெரியவரவில்லை. ஆனால் முற்பகை காரணமாகவே அவர் தாக்கப்பட்டுள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. அது தொடர்பில் தாம் விசாரணையை தொடர்ந்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் ஓட்டோ ஒன்றில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே மோட்டார் சைக்கிளில் சென்ற நபரே தலைக் கவசத்தினால் அவரைத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த அவர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

(த-4)

### தகுதியற்ற

வகையில் அதற்கான ஆளணியெடுப்பு, இடமாற்றம், பதவியுயர்வு அனைத்தும் மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சராலேயே மேற்கொள்ள வேண்டும். இவ்வகையில் ஆளுநர் பல தகுதியற்றதும், முறையற்றதுமான நியமனங்களை அண்மையில் மேற்கொண்டுள்ளார்.

இத்தகைய நியமனங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குச் செயலாளராக நியமிக்கப்பட்ட முறையற்றதும், தகுதியற்றதுமான நியமனத்தை முதல்வர் தலையிட்டு மாற்றியமைத்திருந்தார். எனினும் மேற்குறிப்பிட்டதுபோல் யாழ், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் இத்தகைய நியமனங்கள் இன்னும் மாற்றியமைக்கப்படவேண்டியுள்ளது.

அரச நிர்வாக நடைமுறைகளுக்கும், முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதிக்கு எதிராகவும் (அனுமதிக்கப்பட்ட ஆளணி) தகுதியான முகாமைத்துவ உதவியாளர் தரம்-1 ஐ சேர்ந்த உத்தியோகத்தர்களும், நீண்டகாலமாக உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிய அனுபவமுள்ள உத்தியோகத்தர்களும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியிருந்தனர்.

ஆனால் அவர்களில் எவரும் உள்ளீர்க்கப்படவில்லை. இதற்கான காரணமும் தெரியப்படுத்தப்படவில்லை. இந்த வகையில் முகாமைத்துவ திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆளணி தகுதியின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர் பதவிக்கு முகாமைத்துவ உதவியாளர் அதிசிறப்புத் தரம் அவசியமாகும். போதிய உத்தியோகத்தர்கள் இல்லாதிருப்பின் அவர்களது சேவையில் அடுத்த நிலையிலுள்ள தரம்-1 ஐச் சேர்ந்தவர்களே பதில் கடமையாற்ற நியமனம் வழங்கப்படவேண்டுமென்பது அரச நிர்வாக நடைமுறையாகும்.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளருடன் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடியபோது, முகாமைத்துவ உதவியாளர்களுக்கென ஒதுக் கீடு செய்யப்பட்ட பதவிகளில் பிற சேவையைச் சார்ந்தோர் நியமிக்கப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டு அந்த விடயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டு பொதுச் சுற்றறிக்கையொன்றின் மூலம் சகல மாகாண பிரதம செயலாளர்களுக்கும், அமைச்சின் செயலாளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

வடக்கு - கிழக்கு முகாமைத்துவ உதவியாளர் தொழிற் சங்கத்தினால், யாழ். மேல் நீதிமன்றத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் முறையற்ற செயலாளர் நியமனங்கள் தொடர்பில் வடக்கு மாகாண நிர்வாகத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது இவ் வழக்கு ஒரு வருட காலத்துக்கு மேல் எழுத்தாணைகள் மூலம் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால் ஆளுநர் நிறைவேற்று நிர்வாக அதிகாரி என்ற வகையில் இவ்வழக்கில் அவரை ஒரு பிரதான எதிரியாகச் சேர்த்துக் கொள்ள முடியாது என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

எனவே, அரச பொதுச் சுற்றறிக்கை சாசனங்களுக்கு அமைய வினைத்திறனுடைய தகுதியுடைய உத்தியோகத்தர்களை உள்ளூராட்சி மன்றங்களில் சபைச் செயலாளராக நியமிப்பதற்கும் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தி தகுதியும், அனுபவமுமுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு உள்ளீர்க்கப்படுபவர்களை தகுயற்றவர்கள் நியமிக்கப்பட்ட இடங்களுக்கு நியமனம் செய்ய வேண்டும் - என்று கோரியுள்ளார். (த-5)




*இஸ்ரேல், காஸா மீது மேற்கொண்டுவரும் கொடூரமான தாக்குதல்களுக்கு எதிராக லண்டனில் உள்ள ஜே.வி.பியின் கிளை உறுப்பினர்களால் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேலுக்கு வழங்கி வரும் ஆதரவைக் கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பிரிட்டனில் உள்ள முற்போக்கு மற்றும் ஜனநாயக அமைப்புகளும் கலந்து கொண்டுள்ளன. (வ)*

## இலங்கையில் 10 வீதமானோர் மன நோய்த் தாக்கத்தால் பாதிப்பு

கொழும்பு, ஒக.12

இலங்கை மக்கள் தொகையில் 10 சதவீதத்தினர் ஏதோ ஒரு வகை மனநோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அவர்களில் பலர் பலவிதமான மனநோய்களுக்கு உள்ளாகியுள்ளதாக மேலும் தெரிய வந்துள்ளது.

ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் விசேட நிபுணர்கள் இணைந்து மேற்கொண்ட இந்த ஆய்வில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்படவில்லை.

இந்த மாகாணங்களிலும் மேற்படி ஆய்வை மேற் கொண்டிருந்தால், முடிவுகளில் பெரியளவில் வித்தியாசம் ஏற்பட்டிருக்கும் என்று கூறப்படுகிறது.

நாட்டில் காணப்படும் பொருளாதாரச் சுமை, மக்கள் வாழ்வதற்குத் தேவையான வருமானம் கிடைக்காமை, கல்வித் தகுதிகளுக்கு ஏற்ற தொழில் வாய்ப்புகள் கிடைக்காமை, மக்களின் வாழ்க்கை வேகம் உட்பட பல விடயங்கள் இந்த மன நோய்களுக்கு காரணமாக அமைந்துள்ளன.

> நாட்டின் வாழும் மக்கள் தொகையில் பலருக்கு தாம் எண்ணியபடி வாழ முடியாத சூழ்நிலைகள் காணப்படுகின்றன.

நாட்டில் வாழும் மக்கள் தொகையில் பலருக்கு தாம் எண்ணியபடி வாழ முடியாத சூழ்நிலைகள் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும் மக்கள் தொகையில் 10 வீதமானவர்கள் மனநோய்களால் பீடிக்கப்பட்டிருப்பது பாரதூரமான நிலைமை என்றும், மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமைக்கு ஆட்சியாளர்கள் தான் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அரசியல் அவதானிகள் தெரி வித்துள்ளனர். (வ)

## அகதிகள் வருகையை எதிர்பார்த்து கடல் பாதுகாப்பை அதிகரித்தது ஆஸி.

இலங்கை அகதிகளின் வருகையை எதிர்பார்த்து ஆஸ்திரேலியா தமது கடல் பாதுகாப்பை அதிகப்படுத்துவதாக சர்வதேச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் பிரதமராக ரொனி அபொட் பதவி ஏற்றதைத் தொடந்து, சுமார் ஆறு மாத இடைவெளிக்குப் பின்னர் கடந்த ஜூன் மாதம் இலங்கை அகதிகளின் படகுகள் இரண்டு ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தன.

அந்தப்படகுகள் ஆஸ்திரேலிய எல்லைக்குள் செல்வதற்கு முன்னதாகவே ஆஸ்திரேலிய அதிகாரிகளால் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இடை மறிக்கப்பட்டு, சுமார் 43 அகதிகள் வரையில் உடனடியாக இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டிருந்தனர்.

எனினும் அவர்களில் தமிழ் நாட்டில் இருந்து சென்ற 157 அகதிகளை சர்வதேச அழுத்தங்களின் நிமித்தம் நாடு கடத்த முடியாமல், தற்போது அவர்கள் நவுரு தீவில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தமிழ் நாட்டில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட சில இலங்கை அகதிகள் கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலியப் அரசு கடல் எல்லை பாதுகாப்பை விழிப்பூட்டி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆஸ்திரேலிய அரசால் வழங்கப்பட்ட அகதிகள் தொடர்பான உடன்படிக்கையை இந்தோனேசிய அரசு கைவிடவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியாவில் கெவின் ருட் பிரதமராக இருந்த காலப்பகுதியில் இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுடன் இந்த அகதிகள் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதன் கீழ் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற இலங்கை அகதிகள் சிலர் இடைமறிக்கப்பட்டு இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இந்த அகதிகள் உடன்படிக்கையால் தமக்கு அரசியல் மற்றும் நிதி ரீதியான பிரச்சினைகள் ஏற்படுவதாக இந்தோனேசியா கருதுகிறது என்று கூறப்படுகிறது. (வ)

## எயிட்ஸ் நோய் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு



இலங்கையில் இந்த வருடத்தில் முதல் 6 மாத காலப்பகுதியில் எயிட்ஸ் நோயாளர்களின் தொகை அதிகரிப்பு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பாலியல் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது இவ்வருடம் 20 சதவீத அதிகரிப்பு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டிலிருந்து இது வரையிலான காலப்பகுதியில் எயிட்ஸ் தொற்றாளர்கள் 1950 பேர் இனங் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 320 பேர் இறந்துள்ளனர். தற்போது சுமார் 1500 பேர் வரையில் எச்.ஐ.வி தொற்றுக்கு சிகிச்சை பெற்று, வரும் நிலையில், மேலும் 1500 தொடக்கம் 3000 பேர் வரையில் எச்.ஐ.வி. தொற்றுஅறியாதநிலை யில் சமூகத்திலிருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1,80,000 காணிப் பிரச்சினைகள்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரதேச செயலக பிரிவுகளில் சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் காணிப் பிணக்குகள் விவகாரங்கள் முன் வைக்கப்பட்டிருப்பதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமைச்சின் கீழான விசேட வேலைத்திட்டத்தின் கீழ் காணிப் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவிக்கிறார்.

இந்தச் செயற்பாட்டுக்காக அந்தந்த மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் விதமாக மாவட்டமொன்றுக்கு ஒரு தொடர்பாடல் அலுவலகம் வீதம் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சு தெரிவிக்கின்றது.

உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டம் முழுவதும் மக்களின் காணிப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கான இடங்கள் சம்பந்தமான பரிசீலனை மேற்கொண்டு தீர்மானங்களை எடுப்பார்கள் எனவும், அந்தச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக 15 கோடியே 20 லட்சம் ரூபா செலவில் 20 ஹப் வாகனங்களை வழங்குவதற்கு ஏற்கனவே ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக் காட்டுகின்றது. (க-22)

## எபோலாவை குணப்படுத்தும் மருந்து எம்மிடம் இல்லை

### கைவிரித்தது உலக சுகாதார நிறுவனம்



உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் எபோலாவைக் குணப்படுத்தும் மருந்து தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகள் மட்டுமின்றி உலக நாடுகளையே கதிகலங்க வைத்துள்ளது எபோலா வைரஸ். நாளுக்கு நாள் இந்த நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

இந்தநிலையில் எபோலாவைக் குணப்படுத்தும் மருந்து கண்டறியப்படவில்லை என்றும், 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கண்டுபிடித்து விநியோகிக்கப்படும் என்றும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் உதவி டைரக்டர் ஜெனரல் மேரி பால்கினி கூறியதாவது, உயிர்க் கொல்லி நோயான எபோலாவைக் கட்டுப்படுத்தி குணப்படுத்த கூடிய மருந்தை தயாரிக்க பிரிட்டனைச் சேர்ந்த கிளா கோஸ்மித் கிலைன் என்ற மருந்து நிறுவனம் முன் வந்துள்ளது.

இதற்கான பரிசோதன்னை அடுத்த மாதம்(செப்ரெம்பர்) ஆரம்பிக்கப்பட உள்ளது. தற்போது மாப்பயோ பார்ம சூடிகல் என்ற நிறுவனமும் மருந்து தயாரித்துள்ளது.

அதை எபோலா வைரஸ் நோயால் ஆபிரிக்காவில் பாதிக்கப்பட்ட 2 அமெரிக் கர்கள் மற்றும் குரங்குகளின் உடலில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். (வ)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணியை விற்பதற்குத் தீர்மானம்;

### நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை நிதி நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் பொருட்டு கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஜாஎல -ஏக்கலையில் உள்ள 71 ஏக்கர் காணியை விற்று விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அனுமதி கோரி பொதுசன ஊடக மற்றும் தகவல்கள் அமைச்சரான கெஹலிய ரம்புக்வெலவினால் அமைச்சரவைக்குப் பிரேரணை ஒன்று முன்வைக்கப் பட்டுள்ளது.

இந்த காணி விற்பனையின் மூலம் கிடைக்கும் நிதி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை நவீனமயப்படுத்துவதற்கும், மேலதிக ஊழியர்களுக்கு நட்ட ஈடுகளை வழங்குவதற்கும், தனியார் தொலைக்காட்சி சேவைகளுடன் போட்டி போடும் அளவுக்கு கூட்டுத் தாபனத்தின் ஒலிபரப்புச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் ஒன்றரைக் கோடி ரூபா வரையில் நட்டமடைந்து வருவதால் அந்த நட்டத்தை ஈடு செய்யும் குறுகிய கால நடவடிக்கையாக திறைசேரியிடமிருந்து வருடாந்தம் கணிசமான தொகையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் அமைச்சர் ஆலோசித்துள்ளார். இதனிடையே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரால் தற்போது ஒலிபரப்பப்பட்டு வரும்7அலைவரிசைகளைநான்காகக் குறைத்து விடுவதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. (க-22)

BIT **MIS BIT CAMPUS** MIS
தொழினுட்பக்கல்லூரி எதிரில்
Saturday Sunday புதிய பிரிவுகள் ஆரம்பம்
**Semester 3 & 5**
Semester - 1
September 6th
10.00 am
# 26, Brown Road, Jaffna 077 6577359, 021 222 0288



யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக்குழுவின் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவும், யாழ் விருது வழங்கல் நிகழ்வும் நேற்று யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

2014ஆம் ஆண்டுக்கான யாழ் விருதினை சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவரும், சித்தன்கேணி சிவன் கோவில் பிரதம குருவுமாகிய வித்யாசாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் பெற்றுக்கொண்டார். அவருக்கான விருதினை யாழ். மாநகரசபை முதல்வர் வழங்கிக் கௌரவித்தார்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தசாமி செல்லையா** (சீனியர்)
(யாழ் வைத்தீஸ்வரா சந்தி தேநீர்கடை உரிமையாளர்)

மண்ணில் 05.05.1939 — விண்ணில் 15.08.2011

திதி : துதியை (12.08.2014)

மறைந்தும் மறையாமல் எம் உள்ளத்தில்
உறைந்து நிற்கின்ற அய்யாவே!
ஒளிர்கின்ற தீபத்தின் விரிகின்ற ஒளிச்சுடரே!
ஆண்டவன் அடி அழைத்து
ஆண்டுகள் மூன்று ஆனதே - அய்யா!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நிஜமான உங்கள் நினைவு மட்டும்
நீங்காது எம்மை விட்டு எங்கள் அன்பு அய்யாவின்
ஆன்மா சாந்திபெற இறைவன் பாதம் பணிகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.

ஸ்ரீரங்கநாதன் - France 0033 781826405
டினேஸ்குமார் - London 0044 7411770938

(50759)(7.6.3)

## யானை தாக்கியதில் மூதாட்டி உயிரிழப்பு

மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மரப்பாலம் பிரதேசத்தில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில், யோசப் நாகம்மா (வயது 65) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர். வீட்டில் இவர் தனியாக உறங்கிக் கொண்டிருந்த போதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் கரடியனாறு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விரிவான விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை குறித்த யானை நீண்ட நாள்களாக அந்தப் பிரதேசத்தில் அட்டகாசம் செய்து வருகின்றது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (ற)

## பகுதிநேர வேலை வாய்ப்பு



1.பக்க வடிவமைப்பாளர்
2.விளம்பர வடிவமைப்பாளர்
3.ஒப்புநோக்குநர்
e mail:cborecruit@gmail.com

**புதிய கடை வாடகைக்குண்டு**
பலாலி வீதி, 2 A அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் (இலுப்பையடிச் சந்திக்கு அருகில்) 16'x13' நீளம் அகலம் கொண்ட, அடிப்படை வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 071 626 8617 (50762)(10.6)

**GATEWAY**
Steps for your child's Education from gateway



Holiday Programme
2 HOURS PER DAY!
During your school holidays!
NGT
GATEWAY KIDS SCHOOL of COMPUTING
CISI

**DMI** COMPUTER EDUCATION
Spoken English
புதிய பிரிவுகள் ஆரம்பம்
யாழ்ப்பாணம்
Tue, Thu 11.00 a.m.
Mon, Fri 4.00 p.m.
நெல்லியடி
Sat, Sun 3.30 p.m.
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
City & Guilds A1, A2, B1, B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages
சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

IELTS (Duration: 50 hrs with 5 mock exams)
- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer
- Depend on individual needs, the student can access other English Modules FREE

Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**
யாழ்ப்பாணம் No.113. Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி. Tel.:021-226 2470
சாவகச்சேரி கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
கன்னாகம் Tel.:021-224 1970

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
நேரடியான உரையாடற்பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் 50000 இற்கும் அதிகமான சொற்களுடன் சுயமாக ஆங்கிலம்பேச பயிற்றுவிக்கும் "சாம்சனின்" புதிய நேரடி SPOKEN ENGLISH பயிற்சிநெறி.
O/L மாணவர்கள், அரச, தனியார் ஊழியர்கள், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் 16.08.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
பயிற்சியில் சுயமாகவசனம் உருவாக்கல்,பிரயோகங்கள்,50000சொற்கள் என்பன நேரடி உரையாடற் பயிற்சியின் மூலம் சாம்சனினால் கற்பிக்கப்படும்
பயிற்சியில் இணைய அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை.
SAAMSON LANGUAGE SCHOOL 979, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567 021 320 3313

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.